DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurence;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1377 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 26, 2022

# Ontario Teachers' Union's salary bargaining proposals are costly and would not be fair to taxpayers... - Ontario Minister fo Education

## "ஒன்றாரியோ ஆசிரிய சங்கங்களின் சம்பள அதிகரிப்பு கோரிக்கைகள் மிக அதிகமானதும் வரியிறுப்பாளர்களை பாதிக்கும் விடயமுமாகும்" - ஒன்றாரியோ கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெச்சே



ஒன்றாரியோ ஆசிரிய சங்கங்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான கோரிக்கைகள் மிக அதிகமானதும் வரியிறுப்பாளர்களை பாதிக்கும் விடயமுமாகும். மாகாணத்தில் இயங்கும் ஆசிரிய சங்கங்களில் முக்கியமானதாகக் கருதப்படும் ஊழுநு தொழிற்சங்கம் சமர்ப்பித்துள்ள சம்பளம் மற்றும் ஏனைய பேரம் பேசும் கோரிக்கைகள் மிக அதிகம் என்றே நான் கருதுகின்றேன். அத்துடன் வரி செலுத்துவோருக்கு இந்த சம்பள அதிகரிப்பு நியாயமாக இருக்காது என்றும் நான் கருதுகின்றேன்' இவ்வாறு தெரிவித்தார் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ். கடந்த செவ்வாய்கிழமையன்று மதியம் அளவில் ஒன்றாரியோவில் உள்ள பல்லினப் பத்திரிகையாளர்களை இணையவழியாகச் சந்தித்த கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)



# இலங்கை தமிழ் அகதிகளுக்கான கொள்கைகள் மற்றும் நலன்புரித் திட்டங்கள் பற்றிய சர்வதேச கருத்தரங்கு

### சென்னை பெட்ரிசியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஏற்பாடு செய்த கருத்தரங்கில் கனடாவிருந்து சென்று உரையாற்றிய நிமால் விநாயகமூர்த்தி

சென்னையில் தலை சிறந்த கல்லூரிகளில் ஒன்றான பெட்ரிசியன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் சமூகப் பணி மற்றும் உளவியல் துறை இணைந்து, இலங்கைத் தமிழ் அகதிகளுக்கான கொள்கைகள் மற்றும் நலத்திட்டங்கள் குறித்த சர்வதேச கருத்தரங்கை ஆகஸ்ட் 23, 2022 செவ்வாய்க்கிழமை அன்று சிறப்பாக ஏற்பாடு செய்த நடத்தியது.

கருத்தரங்கை தலைமை விருந்தினர் திரு.சு.ப.வீரபாண்டியன் - சமூக நீதிக் குழுவின் தலைவர் மற்றும் கனடாட திரு. நிமல் நாயகமூர்த்தி மனித உரிமை செயற்பாட்டாளர் மற்றும் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுப்பினர், கனடா, ஆகியோர் துவக்கி வைத்தனர்.

அவர்களுடன் கல்லூரியின் இயக்குனர் மற்றும் செயலாளர் வணக்கத்திற்குரிய ஸ்டானிஸ்லாஸ், கல்வி இயக்குனர் - டாக்டர் பாத்திமா வசந்த், கல்லூரி முதல்வர் - டாக்டர் உசா ஜோர்ஜ் மற்றும் துணை முதல்வர்கள் டாக்டர் கீதா ரூ.்.பஸ் மற்றும் டாக்டர் மீனா உடனிருந்தனர்.

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East (2nd flr) Mississauga, ON, L5A 1W7
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
RE/MAX REALTRON BLUE FORCE
416 2888882
கவாஸ் . சோம சச்சிதானந்தன்

# STEELES PODIATRY CLINIC

**கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்**

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

## வேலை வாய்ப்பு

**Cleaning** வேலைக்கு ஆட்கள் தேவை. **Keele and Hwy 7**
**(1) 7am - 3pm**
**(2) 11pm - 7am**
ஆண், பெண் இருபாலா்களும் தேவை.
தொடா்பு: ஷங்கா்
**416-305-0264**

## வேலை வாய்ப்பு

**Downtown Toronto வில் Church & Wellesley சந்திப்பிற்கு அருகில் Cooks Dish Washers/ Kitchen Helpers ஆகிய பதவிகளுக்கு வெற்றிடங்கள் உள்ளன. ஆட்கள் உடனடியாகத் தேவை. Part-Time or Full Time விரும்பத்தக்கது.**

தொடர்புகளுக்கு:
416-414-2241

## குழந்தை பராமரிப்பாளர் (BABY SITTER) தேவை

ஈற்றோபிக்கோ நகரில் உள்ள வீடொன்றில் 1 வயதுடைய ஆண் குழந்தையை வாரத்தின் 4-5 நாட்கள் வீட்டிலேயே தங்கியிருந்து பராமரிக்க பெண் ஒருவர் தேவை. அனுபவம் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்க்கலாம்.
தொடர்புகளுக்கு:- 416 844 4207 அல்லது 416 510 8727



## ல்ஷ்சுமி திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு வரன்கள், அரசாங்க உத்தியோகம் தனியார் தொழில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் மற்றும் விவாகரத்து ஆனவர்கள் அனைவருக்கும் தகுந்த சாஸ்திர சம்பிரதாய முறைப்படி உலகளாவிய இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை.

**சுலபமாய் ஒரு சுயம்வரம்**
**647-961-6886**

"தனி நபர் தகவல்கள், படங்கள், மற்றும் குறிப்புகள் என்பன 100% பாதுகாக்கப்படும்"

## Basement for Rent

**Pickering** நகரில் **Whites/Sheppard** சந்திப்புக்கு அருகில் உள்ள வீடொன்றில் **Walk-Out Basement Separate Entrance** உடன் வாடகைக்கு உண்டு. ஒரு அறையும் 'டென்' ஒன்றும் உள்ளன. பாடசாலைகள், பஸ் வசதி மற்றும் அனைத்தும் அருகில் உள்ளன. **1 Parking** வழங்கப்படும்.

தொடர்புகளுக்க்- **905 492 0565** அல்லது **647 296 6102 (WhatsApp)**

## Bakery உதவியாளர்கள் தேவை

Oshawa நகரில் உள்ள Bakery ஒன்றுக்கு Bakery உதவியாளர்கள் தேவை. Part-Time or Full Time வாய்ப்புக்கள் உண்டு. சுவையான இலங்கை பாண் மற்றும் பணிஸ் செய்யும் அனுபவம் விரும்பத்தக்கது. நல்ல சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 416-880-4645




REALTOR®

Cell: **647-929-7242**

Email: brintha.uruthira@gmail.com
Instagram: brinthau

RE/MAX METROPOLIS REALTY BROKERAGE

8321 KENNEDY ROAD, UNIT 92
MARKHAM, ON L3R 5N4

Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# 'அரகலய' போராட்டத்திற்கு பயங்கரவாத 'முத்திரை' குத்தப்பட்டதற்கு எதிராக யார் போராடுவது?

இலங்கையில் தமிழ் இளைஞர் ஆயுதங்களை ஏந்தி போராடத் தொடங்கியபோது 'பயங்கரவாதத் தடைச்சட்டத்தை' கொண்டுவந்த அன்று ஆட்சி பீடத்தில் அமர்ந்திருந்த அரசாங்கம் தமிழர்கள் சிங்களவர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்திவிட்டார்கள் என்று பிரச்சாரத்தை மேற்கொண்டார்கள். சாதாரண சிங்கள மக்களுக்கு எதிராக தமிழ்ப் போராளிகள் ஆயுதங்களை ஏந்தவில்லை என்பதை ஆளும் வர்க்கத்தினர் அறிந்திருந்தாலும். அவ்வாறான பிரச்சாரம் தான் தங்கள் ஆட்சியின் இருப்பைக் காப்பாற்ற உதவும் என்பதை அறிந்திருந்தார்கள்.

காலத்திற்கு காலம் ஆட்சியில் மாறி மாறி அமர்ந்திருக்கும் ஆளும் வர்த்தகத்தின் பிரதிநிதிகள் கட்சிகள் என்ற பெயரோடு பிரிந்து நிற்கின்றார்களே தவிர அவர்களுக்கிடையில் சமரசங்கள் அடிக்கடி நிகழும் என்பதை அண்மைக்கால இலங்கை அரசியல் மாற்றங்கள் எமக்கு காட்டி நிற்கின்றன.

தங்கள் கைகளில் எவ்விதமான ஆயுதங்களையும் ஏந்தாமல் தொடர்ச்சியாகப் போராடி நாட்டின் பொருளாதாரத்தை கொள்ளையடித்த கோத்தாபாயவை நாட்டைவிட்டு ஓடச் செய்த 'அரகலய' என்னும் போராட்டக் குழுவிற்கு 'பயங்கரவாதிகள்' என்று முத்திரை குத்திய அரசாங்கத்தை கண்டிக்காமல் இருக்கும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் 'ஆளும் வர்க்கத்தின்' பிரதிநிதிகள் என்பதை நாம் இதன் மூலம் அறிந்து கொள்ளலாம். ஏன் சாதாரண குடும்பங்களில் பிறந்து தற்போது இலங்கைப் பாராளுமன்றத்தில் தொடர்ச்சியாக உறுப்பினர்களாக பதவி வகித்த வண்ணம்

அதிகார பலத்தையும் பண பலத்தையும் தமதாக்கிக் கொண்டுள்ள தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுமந்திரன். சம்பந்தன் மற்றும் ஸ்ரீதரன் சிவஞானம் உட்பட அனைவரும் ஆளும் வர்க்கத்தின் பிரதிநிதிகள் என்பதை நாம் இதுவரை அறிந்திருக்காவிட்டால். எமது அரசியல் பார்வையில் தவறு உள்ளது என்பதே அர்த்தம்

தங்கள் ஆட்சியின் இருப்பை தங்கள் கைகளிலிருந்து போராட்டத்தில் ஈடுபடுகின்ற எந்த ஆளப்படுகின்ற சக்திகளின் கைகளுக்கு சென்று விடக் கூடாது என்று எவ்வாறு ரணில். மகிந்தா, மைத்திரிபால சிறிசேனா போன்றவர்கள் விரும்புகின்றார்களோ அவ்வாறே நாம் முன்னர் பெயர் குறிப்பிட்ட தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் விரும்புவார்கள் என்பதே உண்மை.

இவ்வார எமது பதிப்பில் யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதியுள்ள கட்டுரையில் 'அரகலய" போராட்டத்திற்கு தலைமை தாங்கிய கல்வி அறிவு உள்ள இளைஞர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளதை அனுதாபத்தோடு பாரக்கின்றார்.

பயங்கரவாத தடைச் சட்டம் அரகலயவின் மீது பாய தொடங்கி விட்டது. "மனித உரிமைகள் பாதுகாவலர்களான வசந்த முதலிகே, ஹ'ான் ஜீவந்த மற்றும் கல்வெவ சிறிதம்மா தேரர் ஆகியோர் இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளமை குறித்து நான் மிகவும் கவலையடைகிறேன். அவர்களை தடுப்புக் காவலில் வைக்கும் உத்தரவில் கையெழுத்திட வேண்டாம் என ஜனாதிபதி ரணிலிடம் கேட்டுக்கொள்கின்றேன், அவ்வாறு செய்வது இலங்கைக்கு இருண்ட நாளாக அமையும்" என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பாதுகாப்பாளர்கள் தொடர்பான விசேட அறிக்கையாளர் மேரி லோலர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளதை நிலாந்தன் அடிக்கோடிட்டு காட்டுகின்றார். ஆனால். பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் பாதிக்கப்பட்ட எமது இனத்தின் அரசியல்வாதிகளோ, தங்கள் இருப்பும் பதவிகளும் பறிபோய்விடும் என்பதற்காக சலுகைளைப் பெற்றுக்கொண்டு மௌனமாகிவிட்டார்கள்.

அப்படியானால் ரணில் என்னும் கொடுங்கோலனின் கொட்டத்தை அடக்குவதற்கு யார் இனிமேல் போராடப் போகின்றார்கள் என்பதே எமது இவ்வாரத்தின் கேள்வியாக குறிப்பிடுகின்றோம்.

முன்பக்கத் தொடர்ச்சி..

# இலங்கை தமிழ் அகதிகளுக்கான கொள்கைகள் மற்றும் நலன்புரித் திட்டங்கள் பற்றிய சர்வதேச கருத்தரங்கு




திரு. வீரபாண்டியன் அவர்கள் தனது தொடக்க உரையின் போது, அகதிகளுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கம், குடியிருப்பு வசதிகள், திறன் மேம்பாடு, இலவசக் கல்வி மற்றும் எரிவாய்வு இணைப்பு போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான பல்வேறு விரிவான திட்டங்களை கல்வியாளர்கள் மற்றும் மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். அகதிகளைப் புரிந்துகொள்ளவும், அவர்களின் வளர்ச்சிக்காக அவர்களுடன் இணைந்து பணியாற்றவும் மாணவர்களைத் ஊக்குவித்தார். திரு.நிமல் விநாயகமூர்த்தி அவர்கள் அகதி முகாம்களில் உள்ள இலங்கை அகதிகளுக்கு தமிழகம் வழங்கிய நிவாரணம் மற்றும் மறுவாழ்வு உதவிகள் குறித்து எடுத்துரைத்தார்.

டாக்டர் சுஜாரிதா மாக்டலின், இணைப் பேராசிரியர் ரூ தலைவர், உளவியல் துறை, பிரசிடென்சி கல்லூரி, தலைமையில் குழு விவாதத்துடன் கருத்தரங்கு தொடர்ந்தது. இலங்கைத் தமிழ் அகதிகளின் கலாச்சாரத் திறன் மற்றும் மனநலம் மற்றும் இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு நீதித்துறை பற்றிய விவாதம் நடைபெற்றது.

திரு. கோவி லெனின் ஆலோசனைக் குழு உறுப்பினர், இலங்கைத் தமிழ் அகதிகள் நலக் குழு, தமிழ்நாடு அரசு, சுகாதாரப் பிரச்னைகள் குறித்து எடுத்துரைத்தார்.

திரு. கே.எஸ். ராதாகிருஸ்ணன் மனித உரிமைகள் வழக்கறிஞர் & அரசியல் ஆய்வாளர் அவர்கள் இலங்கை தமிழரின் சட்ட ரீதியான சவால்களை பற்றி விளக்கினார் . இரண்டாவது குழு விவாதத்திற்கு சென்னை கிறித்துவக் கல்லூரியின் சமூகப் பணித் துறை துணைப் பேராசிரியர் டாக்டர் பிரின்ஸ் சாலமன் தலைமை வகித்தார். டாக்டர் பாரிவேலன் கே எம், இணைப் பேராசிரியர், தலைவர் - நிலையற்ற தன்மை மற்றும் அகதிகள் ஆய்வு மையம், சட்டம், உரிமைகள் மற்றும் அரசியலமைப்பு ஆளுகை, மனிதநேய சமூக சந்திப்புகள்: கனவு அல்லது உண்மை என்ற தலைப்பில் பேசினார்.

ஐக்கிய நாடுகளின் அகதிகள் உயர் ஆணையத்தின் கள அதிகாரி திரு. சச்சிதானந்த வளன் மைக்கேல் அகதிகளின் உரிமைகள்: யதார்த்தத்திற்கான ஒரு பார்வை என்ற தலைப்பில் பேசினார். குழு விவாதம் அன்றைய தலைப்பில் அதிக புரிதலை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் அகதிகள் உரிமைகள் பற்றிய யதார்த்தத்தை மாணவர்களை பார்க்க வைத்தது.

தலைமை விருந்தினர் மனித உரிமைச் செயற்பாட்டாளர் பேராசிரியர் சரசாவதி அவர்கள் நிறைவு உரை ஆற்றுகையில், உரிமைகளின் முக்கியத்துவம் மற்றும் இலங்கை அகதிகளின் உரிமைகளுக்காகப் பணியாற்றிய அனுபவந்த்தை பகிர்ந்துகொண்டார். கலந்துகொண்ட அனைத்து ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு நன்றியுரையுடன் கருத்தரங்கு நிறைவுற்றது.

**(LJI. ARJUNE)**

கடைசிப் பக்கத் தொடர்ச்சி..

# இலண்டனில் பேராசிரியர் முனைவர் சங்கரநாராயணனுக்கு ...



இந்த ஆண்டு ஆலயத்தில் நடைபெற்ற ஆடித் திருவிழாவில் தமிழகத்தின் பிரபல பேச்சாளர் பேராசிரியர் முனைவர்.வே.சங்கரநாராயணன் சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டு, 20 நாட்கள் ஆன்மீகத் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தினார். ஒவ்வொரு நாளும் மாலையில் நடைபெற்ற இச் சொற்பொழிவில் திரு. சங்கரநாராயணன் பக்தி, ஆன்மீகம் குறித்த வியப்பூட்டும் பல செய்திகளை விளக்கினார். ஒவ்வொரு நாளும் அவரது உரையினைக் கேட்க மக்கள் பெருமளவில் வருகை தந்தனர். ஜூலை 22 முதல் ஆகஸ்டு 12 வரை நடைபெற்ற இந்த நிகழ்வின் நிறைவு நாளில் கோவில் அறங்காவலர் சபையும், நிர்வாக சபையும் திரு.வே.சங்கரநாராயணனின் ஆன்மீகப் பணிகளைப் பாராட்டி "சேக்கிழார் சீர் பரவுவார்" என்ற விருதினை வழங்கி கௌரவித்தது.

விருதினைப் பெற்றுக் கொண்டு ஏற்புரை நிகழ்த்திய திரு. வே.சங்கரநாராயணன் தனது ஏற்புரையில் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் மனித நேயப் பணிகளை பாராட்டினார். தாயகத்தின் பணிகளுக்காக 150 கோடி ரூபாய்களையும் தாண்டி தொடர்ந்து உதவி வரும் ஒரு முன்னணி ஆலயமாக இது திகழ்வது மகிழ்ச்சியூட்டுவதாகவும் அவர் தெரிவித்தார். " அன்பையும், விருந்தோம்பலையும் அகிலத்தில் விதைத்தவர்கள் ஈழத் தமிழர்கள் தான். வீட்டில் ஒரு படுக்கையறை இருந்தாலும் அதை விருந்தினருக்குக் கொடுத்து விட்டு, கூடத்தில், தரையில் படுக்கும் விருந்தோம்பல் பண்பை ஈழத் தமிழிரிடம் மட்டுமே காண முடியும். அவர்கள் காட்டி வரும் அந்த அன்பு கடவுளுக்கு சமமானது. அதற்கு என்றும் நான் நன்றிக் கடன் பட்டவன். பெரிய புராண ஆய்வுக்காக தமிழகப் பல்கலைக் கழகம் தந்த பட்டத்தை விட இந்த ஆலயம் எனக்குத் தந்த பட்டத்தை நான் பெரிதாக மதிக்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

கனடிய செய்திகள் Canadian News

# கனடா மகாஜனாக்கல்லூரி பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல் – 2022

கனடாவில் இயங்கிவரும் மகாஜனாக்கல்லூரி பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களும், கல்லூரி நலன்விரும்பிகளும் சென்ற ஞாயிற்றுக்கிழமை ரொறன்ரோவின் மக்கோவான் - ஸ்ரீல் சந்திக்கு அருகே உள்ள பூங்காவில் ஒன்றுகூடிக் கொண்டாடினார்கள். கோவிட்-19 காரணமாக இரண்டு வருடங்கள் தள்ளிப் போடப்பட்ட இந்த நிகழ்வு மிகவும் சிறப்பாக இம்முறை நடைபெற்றது.

கனடா தேசிய கீதம், தமிழ்வாழ்த்து, கல்லூரிக்கீதம், கொடிவணக்கம், மற்றும் எம்மைவிட்டுப் பிரிந்தோருக்கான அகவணக்கம் போன்றவற்றுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. அதைத் தொடர்ந்து காலை உணவு வழங்கப்பட்டது. அதன்பின் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று மதிய உணவு வழங்கப்பட்டது.

மதிய உணவைத் தொடர்ந்து, சிறுவர்களுக்கும், பெரியவர்களுக்குமான ஓட்டப்போட்டி, பந்தெறிதல், கயிறு இழுத்தல், வேகநடை போன்ற பலவிதமான விளையாட்டுகளும் இடம் பெற்றன. அங்கத்தவர்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பதன் மூலம் உளரீதியாகவும் ஒன்றுகூடி மகிழ்வதே இந்த நிகழ்வின் நோக்கமாக இருந்தது. நீண்ட நாட்களின்பின் ஒருவரை ஒருவர் சந்தித்து மகிழ்வோடு உரையாட முடிந்தது. இந்த நிகழ்வில் பிரான்ஸ், நோர்வே, அமெரிக்கா, ஸ்ரீலங்கா போன்ற நாடுகளில் இருந்தும் வந்திருந்த பழைய மாணவர்கள் சிலர் கலந்து கொண்டிருந்தனர்.








போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெற்றவர்களுக்கு மாலை 5:00 மணியளவில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களால் பரிசுகள் வழங்கப்பட்டன. மாலை 6:00 மணியளவில் நிகழ்வு நிறைவுபெற்றது.

மகாஜனக்கல்லூரி பழைய மாணவர்கள் உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், பெண்களுக்கான வலைப்பந்தாட்டம் போன்ற குழுக்களை ஆரம்பித்து அவர்களைப் பயிற்றுவித்து கடனாவில் நடக்கும் போட்டிகளிலும் பங்கு பற்றி விளையாடுவது குறிப்பிடத்தக்கது. இதைவிட இளைய தலைமுறையினருக்கான பயிற்சிப் பட்டறைகள், கணித, பொது அறிவு, தமிழ் மொழி பரீட்சைகளும் கடந்த பல வருடங்களாக நடத்தி அவர்களை ஊக்குவித்து வருகின்றனர். மற்றும் "மகாஜனன்" வருடாந்த மலரிலும் இளைய தலைமுறையினரின் ஆக்கங்களை வெளியிட்டு அவர்களை தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகம் செய்து வருவதுடன், கோயிற் திருவிழாக்களும் செய்து வருகின்றார்கள்.

தாயகத்தில் உள்ள கல்லூரியின் வளர்ச்சியிலும் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றனர். யுத்தத்தால் பழுதடைந்த கட்டிடங்களையும் நூலகத்தையும் திருத்தி அமைக்கவும், கணனி பாவனையை அறிமுகம் செய்தும், விளையாட்டுப் போட்டிகள், நினைவுகூரும் நிகழ்வுகள் போன்றவற்றுக்கு உதவி செய்தும் கல்லூரியின் முன்னேற்றத்திற்கு இங்குள்ள பழைய மாணவர்கள் உதவிக் கொண்டிருக்கிறார்கள். மகாஜனக் கல்லூரியின் சர்வதேச நூற்றாண்டு நினைவு மலர் கனடா பழைய மாணவர் சங்கத்தால் கனடாவில் வெளியிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

LJI - ARJUNE




# காணாமல் செய்யப்பட்ட உறவுகளை தேடும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஒன்றாறியோ பாராளுமன்ற முன்றலில் கவனயீர்ப்பு

ஆகஸ்ட் 30 சர்வதேச காணமல் ஆக்கப்பட்டோர் தினமாகும்.

தாயகத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார், தந்தைமார், பிள்ளைகள் தொடர்ந்து 2000 நாட்களுக்கு மேலாக தாங்கள் ஒப்படைத்த, காணாமல் செய்யப்பட்ட உறவுகளை தேடி சர்வதேசத்திடம் நீதி வேண்டி போராடி வருகிறார்கள்.

இவர்களின் போராட்டத்திற்கு வலுச்சேர்க்குமுகமாக கனடாவில் ஒன்றாறியோ பாராளுமன்ற முன்றலில் 30/08/2022 மதியம் 12.30 - பிற்பகல் 3.00 வரையும், பிற்பகல் 4.00 மணி - இரவு 8.00 மணிவரை மார்கம் அன் இஸ்ரீல் சந்திப்பிலும் கவனயீர்ப்பு நடைபெறும். அனைத்து தமிழ் உறவுகளும் நீதிக்காக அணித-ிரளுமாறு உரிமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

**மேலதிக தொடர்புகளுக்கு: மகாஜெயமா (647) 262-5587**

# தமிழ்ப் பணியையும் இலக்கியப் பங்களிப்பையும் நான் ஆத்ம திருப்தியோடு ஆற்றிவருகின்றேன் என்ற அசையாத நம்பிக்கை எனக்கு என்றும் உண்டு

## கனடா - ஸ்காபுறோ கலை இலக்கிய அன்பர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் டென்மார்க் வாழ் எழுத்தாளர் முல்லை நாச்சியார் பெருமிதம்

தமிழ்ப் பணியையும் இலக்கியப் பங்களிப்பையும் எமது சமூகத்திற்கும் வருங்கால சந்ததிக்கும் வழங்க வேண்டும் என்ற வேட்கை நீண்ட காலமாக என்னோடு இணைந்து பயணிக்கின்றது. அதேவேளை. இந்த இரண்டு துறை சார்ந்த பங்களிப்பை நான் ஆத்ம திருப்தியோடு ஆற்றிவருகின்றேன் என்ற அசையாத நம்பிக்கையும் எனக்கு என்றும் உண்டு.

இவ்வாறு. நேற்று வியாழக்கிழமை மாலை கனடா-ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள புரண்ட்லைன் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற கலை இலக்கிய அன்பர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட டென்மார்க் வாழ் எழுத்தாளர் முல்லை நாச்சியார் அவர்கள் பெருமிதத்தோடு தெரிவித்தார்.

கனடா கவிஞர் கழகம் மற்றும் தமிழ் இலக்கியப் பட்டறை ஆகியவை இணைந்து நடத்திய இந்த சந்திப்புக் கூட்டத்தை தற்போதைய கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஷ் அவர்களும் கல்வியாளரும் பேச்சாளருமான வாசுகி நகுலராஜா அவர்களும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தார்கள்.





அறிமுக உரையை வாசுகி நகுலராஜா அவர்கள் வழங்கி கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். அவர் தனது உரையில் தற்போது. உலகத் தமிழ் இலக்கியம் மற்றும் தமிழ் மொழிசார்ந்த தளத்தில் நன்கு அறியப்பட்டவராக தமிழ் மக்கள் வாழும் நாடுகள் அனைத்திலும் விளங்கிவரும் முல்லை நாச்சியார் அவர்களை கனடா தமிழ் இலக்கிய நண்பர்கள் மற்றும் கல்வியாளர்கள் ஆகியோர் இணைந்து சந்தித்து அவருக்கு வரவேற்பு அளிக்கும் இந்த நிகழ்வு இவ்வாரம் பேசப்படும் ஒரு சந்திப்பாக விளங்கும் என்று புகழாரம் சூட்டினார்.

தொடர்ந்து முல்லை நாச்சியார் அவர்களை அறிமுக உரையாற்றும் வண்ணம் அவர் அழைக்க அவர் ஒலி வாங்கியைப் பெற்றுக்கொண்ட நிதானமாகவும் நேர்மையாகவும் தன் கருத்துக்களையும் தனது கலை இலக்கிய மற்றும் தமிழ் மொழி சார்ந்த பங்களிப்புக்களையும் விபரமாக எடுத்துரைத்தார்.

தொடர்ந்து அவர் தனது உரையில் டென்மார்க்கை தளமாகக் கொண்டு தான் உலக நாடுகளில் வாழும் பல இலக்கியவாதிகளை இணைத்துக் கொண்ட செயற்பட்டு வந்ததன் பயனாக தமிழ் மொழி மீது பற்றுக்கொண்ட நூற்றுக்கணக்கானவர்களை ஒரே குடையின் கீழ் கொண்டு வந்தாலும் டென்மார்க் தேசத்தை தளமாகக் கொண்டு "டென்மார்க் கலை இலக்கியப் பேரவை" என்னும் அமைப்பை நிறுவுவது என்ற அந்த அறிவிப்பை கனடாவில் இன்றைய தினம் விடுப்பதில் பெருமையடைகின்றேன்" என்று தெரிவித்து அதற்கு கனடா வாழ் கலை இலக்கிய நண்பர்களின் ஒத்துழைப்பையும் வேண்டிக்கொண்டு உரையை நிறைவு செய்தார்.

தொடர்ந்து நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களில் ஒருவரான அகணி சுரேஷ் அவர்கள் தனது உரையில் முல்லை நாச்சியார் அவர்களின் தமிழ் மொழி சார்ந்த மற்றும் கலை இலக்கிய பங்களிப்பு மற்றும் அவரது தனித்துவமான ஆளுமை ஆகியவற்றை பற்றி எடுத்துரைத்தார்.

தொடர்ந்து பேராசிரியர் இ. பாலசுந்தரம். முன்னாள் அதிபர் சின்னையா சிவனேசன். "உதயன்" லோகேந்திரலிங்கம். கவிஞர் கழகத்தின் தலைவர் பஞ்சரீநாதன், ஆசிரியர் த. சிவபாலு விருது பெற்ற கவிஞர் மாவிலி மைந்தன் சண்முகராஜா உட்பட பலரும் உரையாற்றினார்கள். அத்துடன் இணையவழி ஊடாகவும வெளிநாடுகளிலிருந்து அதிகாலை வேளையிலும் ஆர்வத்தோடு தொடர்பு கொண்ட முல்லை நாச்சியார் அவர்களின் பன்முகத் தன்மை சார்ந்த பணிகளைப் பாராட்டிப் பேசினார்கள்.

- LJI Ganesh and Arjune



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் காற்றாலை மின் செயற்திட்டம் மற்றும் கணிய மணல் அகழ்வுக்கு எதிராக பேசாலையில் ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று சேர்ந்து கண்டன போராட்டம்

## போராட்டத்திற்கு பயந்து மன்னார் தவிசாளர் ஓடி ஒழிந்து விட்டதாக மக்கள் குற்றச்சாட்டு

மக்களின் தொடர் எதிர்ப்புக்கு மத்தியிலும் மன்னார் மாவட்டத்தில் தொடர்சியாக கணிய மண் அகழ்வு மற்று ஆய்வு பணிகள் சட்டவிரோதமாக இடம் பெறுவதாகவும் அதே நேரம் மீன் வளம் மற்றும் கடல் வளங்களை அழிக்கும் காற்றாலை மின்செயற்திட்டத்தை மன்னார் தீவக பகுதிக்குள் மேற்கொள்ள வேண்டாம் என கோரி பேசாலை பொது மக்கள் புதன்கிழமை (24) பேசாலை நகர் பகுதியில் கண்டன போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் எங்கள் வருங்காலத்தை தடைசெய்ய வேண்டாம், ஆர்பாட்டமே எங்கள் வாழ்க்கையா? எங்கள் மாவட்டம் எங்களுக்கு வேண்டும், தீர்மானமும் முடிவும் நீங்கள் மட்டும் தான நாங்கள் இல்லையா, அமைதியாய் வாழ்கின்றோம். அகோரப்படுத்தாதீர்கள், எங்கள் கடலில் மீன் வருதில்ல காற்றாடிதான் காரணம் போன்ற பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.



குறித்த போராட்டத்தின் பின் பொது மகஜர் பொது மக்களுக்கு வாசிக்கப்பட்டு அதனை தொடந்து ஊர்வலமாக சென்று மன்னார் பிரதேச சபையில் மகஜரை கையளிக்க சென்றனர்.

இந்த நிலையில் மகஜரை பெற்று கொள்ள வேண்டிய தவிசாளர் பிரதேச சபையில் இல்லாத நிலை சிறிது நேரம் அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.




அதே நேரம் பேசாலை பகுதியில் இடம் பெறும் இவ்வாறான சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கு காற்றாலை செய்ற்திட்டத்திற்கு முழு பொறுப்பும் மன்னார் பிரதேச சபை தான் எனவும் மகஜரை பெற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய மன்னார் பிரதேச சபை தவிசாளர் இஸ்ஸதீன் ஓடி ஒளிந்து விட்டதாகவும் போராட்டத்தில் ஈட்பட்ட மக்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

தொடர்சியாக காற்றாலை மற்றும் கணிய மணல் அகழ்வுக்கு எதிராக பிரதேச சபைக்கு முன்பாக கேஷங்களை எழுப்பிய பொது மக்கள் பிரதேச சபை தவிசாளர் இல்லாத நிலையில் உப தவிசாளரிடமோ, செயலாளரிடமோ மகஜரை கையளிக்க விரும்பவில்லை என தெரிவித்து கலைந்து சென்றனர்.

மன்னார் போசாலை பகுதியில் முழுவதும் கடைகள் மூடப்பட்டு ஆயிரக்கணக்கான மக்கள் குறித்த போராட்டத்தில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# திருக்கேதீஸ்வரம் மனித புதை குழியில் அகழ்வு செய்யப்பட்ட மனித எச்சங்கள் அனைத்தும் மன்னார் நீதவான் முன்னிலையில் பிரித்தெடுக்கும் நடவடிக்கை



## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ். நிறைஞ்சன்

அனுராதபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதை குழியில் அகழ்வு செய்யப்பட்ட மனித எச்சங்கள் அனைத்தையும் மன்னார் நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தி, மன்னார் நீதவான் முன்னிலையிலே பிரித்தெடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கட்டளை ஆக்கப்பட்டுள்ளது என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் திருக்கேதீஸ்வரம் மனித புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணை புதன்கிழமை (24) மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

ஏற்கனவே அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எச்சங்கள் அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், மன்னார் நீதவான் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளைக்கு அமைவாக அமெரிக்காவில் உள்ள புளோரிடா நிறுவனத்தில் "சி-14 காபன்" பரிசோதனைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை வழங்கு தொடுனர் சார்பாக எடுத்திருந்த நிலையில் கடந்த தவணை அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த மனித எச்சங்களை பகுந்தெடுத்து பகுப்பாய்வு நடவடிக்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வழக்கு தொடுனர்கள் கோரிக்கை ஒன்றை முன் வைத்திருந்தனர்.

அனுராதபுரம் நீதவான் முன்னிலையில், அவ்வாறான பிரிப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு, அல்லது மன்னார் நீதவான் அதற்கு உறுதுணை புரிந்து அவரின் மேற்பார்வையின் கீழ் குறித்த நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு கட்டளை ஒன்றை வழங்குமாறும், அதற்கான கட்டளை ஒன்று புதன்கிழமை (24) மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்டது.

ஏற்கனவே கொண்டு செல்லப்பட்ட மனித எச்சங்கள் அனைத்தையும் மன்னார் நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தி, மன்னார் நீதவான் முன்னிலையில் பிரித்தெடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கட்டளை ஆக்கப்பட்டுள்ளது.

குறித்த வழக்கானது எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி (21-09-2022) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

வழக்குத் தொடுனர் இவ்விடயம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு புதன்கிழமை கட்டளை ஆக்கப்பட்டுள்ளது.என அவர் மேலும் தெரிவித்தார்.

MORTGAGE

- நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- லைன் ஒப் கிரெடிட்(HELOC)
- ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- Private Mortgage (No Income Verification)
- 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
- பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
- பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
- எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சிறப்பாக இடம் பெற்ற மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய சங்காபிஷேக நிகழ்வு



மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மகா கும்பாபிஷேக பெருவிழா கடந்த மாதம் 6 திகதி இடம் பெற்றதை தொடர்ந்து 48 நாட்கள் மண்டல அபிஷேகம் இடம் பெற்று செவ்வாய்க்கிழமை (23) காலை சங்காபிஷேக நிகழ்வு வெகு விமரிசையாக இடம்பெற்றது.

திருக்கேதீஸ்வர ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ தியாகராஜா கருணானந்த குருக்கள் தலைமையில் தர்ம ஆதீன மடத்தின் இலங்கைக்கான முதல்வர் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரம் தம்பிரான் முன்னிலையில் சங்காபிஷேக நிகழ்வு இடம்பெற்றது.

செவ்வாய்க்கிழமை (23) காலை 9 மணிக்கு யாகங்கள் இடம் பெற்று பரிவார மூர்த்திகளுக்கான யாகங்களும் இடம்பெற்றது.





அதனைத் தொடர்ந்து கும்பங்கள் உள்வீதியுலா எடுத்துவரப்பட்டு பிள்ளையார், சிவன் அம்பாள் ஆகியோருக்கு கும்ப நீர் ஊற்றப்பட்டு வெகு விமர்சையாக 1008 சங்காபிஷேகம் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வர தேனமுது கும்பாபிஷேக விசேட மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

கொழும்பு இந்துக்கல்லூரியின் ஓய்வு நிலை முதல்வர் நூலாசிரியர் தம்பிப்பிள்ளை முத்துக் குமாரசுவாமி நூலை வெளியிட்டு வைக்க, தர்ம ஆதியின இலங்கைக்கான முதல்வர் ஸ்ரீமத் மீனாட்சி சுந்தரம் தம்பிரான் நூலை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# மன்னாரில் கனிய மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின் கோபுர அமைப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்படாது விட்டால் தொடர் போராட்டம்

மன்னாரில் இடம் பெற்று வரும் கனிய மணல் அகழ்வு மற்றும் காற்றாலை மின் கோபுர அமைப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும், மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயும் அவசர கலந்துரையாடல் செவ்வாய்க்கிழமை (23) காலை மன்னாரில் இடம் பெற்றது.

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில், அதன் தலைவர் அருட்தந்தை எஸ். ஞானப்பிரகாசம் தலைமையில், மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொறியியலாளர் சங்க பிரதிநிதிகள், மீனவ அமைப்பு, மத தலைவர்கள்,மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் தொடர்ச்சியாக கனிய மணல் அகழ்வு மற்றும், காற்றாலை மின் கோபுர அமைப்பு நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றமை குறித்து ஆராயப்பட்டது.



மேலும் மன்னாரில் உள்ள அரசியல்வாதிகள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் இவ்விடயம் குறித்து மௌனம் காத்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.



குறித்த கலந்துரையாடலின் போது மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் கனிய மணல் அகழ்வு மற்றும், காற்றாலை மின் கோபுர அமைப்பு நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயங்கள் தொடர்பாக எதிர்வரும் திங்கட்கிழமை (29) மாவட்ட ரீதியில் அனைத்து நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டு,மக்கள் ஒன்றிணைந்து மாவட்ட ரீதியாக விழிப்புணர்வு போராட்டம் ஒன்றை முன்னெடுத்து, அரசாங்கத்திற்கு ஒரு செய்தியை கூற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மன்னாரில் இடம் பெற்று வரும் கனிய மணல் அகழ்வு மற்றும், காற்றாலை மின் கோபுர அமைப்பு நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்படாது விட்டால் தொடர்ச்சியாக எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**- மன்னார் நிருபர்**



# பண்டாரவன்னியன் 219ஆவது வெற்றி நாள் நிகழ்வுகள் மல்லாவி நகரிலும்!

**- ஜெகதீஸ்வரன் டிஷாந்த்**

முல்லைத்தீவு நகரில் அமைந்திருந்த வெள்ளையரின் கோட்டையை போரிட்டு வெற்றி கொண்ட வன்னியின் இறுதி மன்னன் மாவீரன் பண்டாரவன்னியனின் 219 ஆம் ஆண்டு வெற்றிநாள் 25.08.2022 அன்று முல்லைத்தீவு மல்லாவி நகரில் உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்டது.

அந்த வகையில் மல்லாவி வர்த்தக சங்கத்தினர் தலைமையில் மல்லாவி மத்திய பகுதியில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்து, மலர் தூவி நினைவுகூரல்கள் உணர்வுபூர்வமாக மேற்கொள்ளப்பட்டன.

இந் நிகழ்வில் வர்த்தக சங்க உறுப்பினர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இந்தியா செய்திகள்
India News

# சென்னையில் குளிர்பானம் குடித்த சிறுவன் பேருந்து பயணத்திலேயே மரணம்

உணவு இடைவேளைக்காக பேருந்து நிறுத்தப்பட்ட இடத்தில் விற்பனை செய்யப்பட்ட குளிர்பானம் குடித்த சிறுவன் பரிதாபமாக பலியாகினான். சிறுவனின் மரணத்திற்கான காரணம் தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது.

சென்னையில் உள்ள மயிலாப்பூரில் வசித்து வருபவர் ஜெபசின் ராஜ். இவரின் மனைவி, மகள், மகன் ஆகியோருடன் சம்பவத்தன்று ஜெபசின்ராஜ் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள திருவில்லிபுத்தூரில் நடந்த திருவிழாவுக்கு வந்துள்ளார். அதனை தொடர்ந்து, சென்னை நோக்கிய பேருந்தில் மீண்டும் அவர்கள் சொந்த ஊர் திரும்பியுள்ளனர். அழகாபுரி அருகே பேருந்து உணவகத்தில் நின்றுள்ளது. அப்போது, சிறுவனுக்கு குடிக்க அரைலிட்டர் குளிர்பானம் வாங்கி கொடுக்கப்பட்டுள்ளது. குளிர்பானத்தை குறித்துவிட்டு பேருந்தில் ஏறிய சிறுவனுக்கு திடீரென வாந்தி ஏற்பட்டுள்ளது. சாதாரண பேருந்து பயண வாந்தியாக இருக்கலாம் என்று எண்ணி சிறுவனை உறங்கவைத்த நிலையில், விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே மீண்டும் பேருந்து மற்றொரு உணவகத்தில் நின்றுள்ளது. அங்கு சிறுவனை குடும்பத்தினர் எழுப்பியும் விழிக்காததால், அங்கிருந்த மருத்துவமனைக்கு சிறுவனை அழைத்து சென்றுள்ளனர். சிறுவனை பரிசோதனை செய்த மருத்துவர், அவன் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர். இந்த விஷயம் தொடர்பாக காவல் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.



# கர்நாடக மாநில ஹோட்டல் அறையில் கைதி காதலியுடன் இருக்க வெளியில் காவல் காத்த போலீசார்

கர்நாடக மாநிலம், ஹுப்ளி மாவட்டத்தை சேர்ந்த கொலை குற்றவாளி பச்ஷா கான் (55). கொலை வழக்கில் 20 வருடங்கள் சிறை தண்டனை கைதியான பச்ஷா கான் தற்போது பல்லாரி சிறையில் உள்ளார். இந்நிலையில், இந்த வழக்க்கு தொடர்பாக பச்ஷா கான் தஹர்வாட் பகுதியில் இருக்கும் நீதிமன்றத்திற்கு மூன்று காவல்துறையினரால் அழைத்து வரப்பட்டார். நீதிமன்றத்தில் ஆஜரான பிறகு மீண்டும் தஹர்வாட் சிறைக்கு அழைத்து செல்லப்பட்டார். அப்போது, பச்ஷா கானின் கேட்டு கொண்டதால் காவல்துறையினர் தஹர்வாட் சிறைக்கு செல்லாமல் அவரை ஹுப்ளிக்கு அழைத்து சென்றுள்ளனர்.

ஹுப்ளியின் கோகுல் ரோடு பகுதியில் இருக்கும் ஒரு ஹோட்டலுக்கு பச்ஷா கானை காவல்துறையினர் அழைத்து சென்றுள்ளனர். அந்த ஹோட்டலில் பச்ஷா கான் அவரது காதலியை சந்தித்தார். பிறகு, பச்ஷா கானும் அவரது காதலியும் ஹோட்டல் அறைக்குள் சென்றுள்ளனர். பச்ஷா கானும் அவரது காதலியும் ஹோட்டல் அறையில் தனிமையில் இருந்துள்ளனர். அந்த அறைக்கு வெளியே மூன்று காவல்துறையினரும் காவலுக்கு நின்றுள்ளனர். பச்ஷா கானை தஹர்வாட் சிறைக்கு கொண்டு செல்லாமல் பெங்களூருவில் இருக்கும் ஒரு ஹோட்டலுக்கு வந்துள்ளதாக கோகுல் ரோடு பகுதி காவல்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இந்த தகவலை அடுத்து, அந்த ஹோட்டலில் கோகுல் ரோடு பகுதி காவல்துறையினர் அதிரடி சோதனை நடத்தினர். சோதனையில் குற்றவாளி பச்ஷாகான் தனது காதலியுடன் அங்கா ஒரு அறையில் இருந்ததையும், குற்றவாளியின் காவலுக்கு அந்த அறைக்கு வெளியே மூன்று காவலர்கள் காவலுக்கு நின்றதையும் கண்டு கோகுல் நகர் காவல்துறையினர் அதிர்ச்சியடைந்தனர். இதை தொடர்ந்து, கொலை குற்றவாளி பச்ஷாகான், அவரது காதலி மற்றும் காவலுக்கு நின்ற மூன்று காவலர்கள் என ஐந்து பேரையும் காவல்துறையினர் கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# போராட்டத்தின் புண்ணியத்தில் ஜனாதிபதியான ரணில், ராஜபக்சவினரை விட மோசமானவர் என்கிறார் ஹிருணிகா

இலங்கை செய்திகள்
Sri Lanka News



அண்மையில் தென்னிலங்கையில் போராட்டக்காரர்களால். அமைதியாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போராட்டக்காரர்களால் எவருக்கும் எந்த தொந்தரவும் ஏற்படவில்லை. தொந்தரவு ஏற்பட்டது யாருக்கென்றால், அது ராஜபக்சவினருக்கே ஏற்பட்டது. இத தான் நடந்த உண்மை இதனால் ராஜபக்சா குடும்பத்தினரான அவர்கள் அரசியலில் இருந்து ஒதுங்க நேரிட்டது. நடந்து முடிந்த போராட்டத்தால். சாதகமான நிலைமை ஏற்பட்டது யாருக்கு என்றால், அது ரணில் ராஜபக்சவுக்குத்தான் ஏற்பட்டது. அவர் முன்னெடுத்து வரும் இந்த அடக்குமுறையை நாங்கள் மிகவும் அருவருப்புடன் கண்டிக்கின்றோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர. கொழும்பில் தான் நடத்திய பத்திரிகையாளர்கள் சநதிப்பின்போது. அவர் தொடர்ந்து பேசுகையில், "அனைத்து பல்கலைக் கழகங்களின் மாணவர் சங்கங்களின் தலைவர் வசந்த முதலிகே பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார். அவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள். என்பதை ரணில் புரிந்து கொள்ள வேண்டும். நாட்டிலிருந்த பயங்கரவாத யுத்தம் 2009 ஆம் ஆண்டுடன் முடிந்து விட்டது. இவ்வாறிருக்க பல்கலைக்கழக மாணவர்களை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்வது கவலைக்குரிய விடயம்.

இதுவரை உருவான அனைத்து ராஜபக்சவினரை விட, இதுவரை ஆட்சிக்கு வந்த ஜனாதிபதிகளை விட இலங்கையில் தற்போது ஆட்சிக்கு வந்திருக்கும் ரணில் என்பவர். ராஜபக்ச குடும்பத்தினரை விட மிக மோசமானதும் சர்வாதிகாரமான போக்கு கொண்டவருமான ஆட்சியாளர். இது வரலாற்றில் பதிவாகும். இதுதான் உண்மையான கதை. ரணில் விக்ரமசிங்கவுடன் எனக்கு இருந்து வந்த நட்பு தற்போது மேலும் அதிகரித்துள்ளது என ஹிருணிகா பிரேமச்சந்திர மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மிக மோசமான சர்வாதிகார ஆட்சியாளர் எனவும் பல்லைக்கழக மாணவர்கள் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் அணி தலைவியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் அழைப்புக்கு அமைய இன்று வாக்குமூலம் ஒன்றை வழங்க சென்றிருந்த போதே ஹிருணிகா இதனை கூறியுள்ளார்.

என்னை விசாரணைக்கு வருமாறு வீட்டுக்கு வந்து அழைப்பாணை ஒன்றை வழங்கினர். அதில் காரணங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. போராட்டம் சம்பந்தமாக என்னை விசாரணைக்கு அழைத்துள்ளதாக நினைக்கின்றேன்.

போராட்டத்தின் புண்ணியத்தில் தற்போதைய ஜனாதிபதி பதவிக்கு வந்தார். தற்போது போராட்டத்தில் சம்பந்தப்பட்டவர்களை ஏதேனும் ஒரு காரணத்திற்காக அழைத்து விசாரணை நடத்துகின்றனர்.



என்னை எதற்காக அழைத்திருக்கின்றனர் என்று போய் பார்ப்போம். காரணம் என்னவென்று அறிந்து நான் எனது வாக்குமூலத்தை வழங்குவேன்".

# மக்களால் தெரிவு செய்யப்படாத ஒருவர் நாட்டின் ஜனாதிபதியே இல்லை என்கிறார் ஜே.வி.யின் அநுரகுமார



மக்களால் தெரிவு செய்யப்படாத ஒருவர் நாட்டின் ஜனாதிபதியே இல்லை என மக்கள் விடுதலை முன்னணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார். நுகேகொடவில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், இலங்கையில் இருக்கும் ஜனநாயகத்தை இல்லாதொழித்து மக்களின் அமைதி போராட்டங்களை தீண்டும் வகையில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க செயல்படுவாராயின் அவருக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி நடவடிக்கை எடுக்கும்.

இலங்கை வாழ் மக்களை ஒடுக்குவதன் மூலமும் வன்முறையை மக்கள் மீது கட்டவிழ்த்து விடுவதன் மூலமும் விக்ரமசிங்கவுக்கு அவரது பதவியை பாதுகாக்க முடியாது. இலங்கையில் போராட்டங்களை முன்னெடுத்தவர்களையும் போராட்டத்தில் கலந்து கொண்டோரையும் ஜனாதிபதி தீவிரவாதியாக கருதுகிறார்.

ஜனாதிபதியின் கதிரையில் அமர்ந்தவர்களையும் அவரது மாளிகைக்குள் சென்றவர்களையுமே அவர் இவ்வாறு கருதுகிறார்.

நாடாளுமன்றத்தில் 134 வாக்குகளை பெற்று ஜனாதிபதியாகியவர் மக்களுக்கு எதிராக ஒருபோதும் செயல்பட முடியாது. அவருக்கு அந்த உரிமை இல்லை. மக்களால் தெரிவு செய்யப்படாத ஒருவர் நாட்டின் ஜனாதிபதியே இல்லை.

ராஜபக்ச ஆதரவாளர்களினால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டவர் இன்று ராஜபக்ச குடும்பத்தினரை எதிர்த்தவர்களை தாக்குகிறார். இலங்கையில் ஆட்சி மாற்றம் வேண்டும் என மக்கள் கேட்டபோதிலும் இன்றுவரை அதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக மக்களை ஒடுக்கும் செயல்பாடுகளே நடைபெறுகின்றன. மக்கள் எதிர்பார்க்கும் அரசாங்கமும் இன்று ஆட்சியில் இருக்கும் அரசாங்கமும் இரு வேறு விதமானவை.

இவ்வாறான சூழ்நிலையை எம்மால் மாத்திரமே மாற்ற முடியும். இலங்கையின் அரசியலில் ஊழல் மற்றும் வன்முறையில் ஈடுபட்டவர்கள் சட்ட ரீதியாக தண்டிக்கப்பட வேண்டும்.

மக்கள் எதிர்பார்க்கும் மக்கள் ஆணையிலான அரசாங்கம் இலங்கையில் அமைக்கப்பட வேண்டும் எனவும் அநுரகுமார வலியுறுத்தியுள்ளார்.



# அனைத்து அறவழி போராட்டகாரர்களையும் உடனடியாக விடுதலை செய்க – மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம்

பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக ரத்து செய்ய கோரியும், இலங்கையில் இடம்பெற்ற ஜனநாயக போராட்டங்களில் கலந்து கொண்ட போராட்டகாரர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரியும் வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்திற்கான ஒருங்கமைப்பில் ஞாயிற்றுக்கிழமை (21) காலை 10.30 மணியளவில் மன்னார் பஜார் பகுதியில் அடையாள கவனயீர்ப்பு போராட்டம் பெற்றது.

குறித்த போராட்டத்தில் பயங்கரவாத தடைச் சட்டத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட தரப்பு தமிழர் என்ற வகையில் பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் எனவும், ஜனநாயக அறவழிப் போராட்டத்தில் கலந்து கொண்டமைக்காக கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் மாணவ







செயற்பாட்டாளர்கள், இளைஞர்களை உடனடியாக விடுதலை செய்ய கோரியும், அவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க கூடாது எனவும் போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

குறித்த போராட்டத்தில் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழு அங்கத்தவர்கள் வவுனியா, கிளிநொச்சி, முல்லைதீவு, மன்னார் மாவட்டத்தை சேர்ந்த பொது மக்கள் பெண்கள் குழுக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் மன்னார் மெசிடோ நிறுவன அதிகாரிகள், பாதிக்கப்பட்டவர்களுக்கான இணையத்தின் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அனைத்து அறவழி போராட்டக்காரர்களும் உடனடியாக விடுதலை செய்க, மாணவர் செயற்பாட்டாளர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்க வேண்டாம் என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டகாரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கையளிப்பதற்கு என தயாரிக்கப்பட்ட பொது மகஜரும் போராட்டத்தின் போது வாசிக்கப்படமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# முல்லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேச பாடசாலை மாணவர்களை ஏற்றாது செல்லும் பேருந்துகள்!

பாடசாலை மாணவர்களை ஏற்றாது செல்லும் பேருந்துகளினால் பாடசாலை கல்வியை தொடர முடியாத நிலையில் மாணவர்கள் உள்ளதாகவும் இவ் நிலை தொடர்ந்து நடைபெற்றால் ஏ-9 வீதியை மறித்து போராடுவோம் என மாணவர்களின் பெற்றோர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பனிக்கன்குளம் கிராம அலுவலர் பிரிவின் பனிக்கன்குளம், கிழவன்குளம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த சுமார் 60க்கும் மேற்பட்ட மாணவர்கள் மாங்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வருகின்றனர்.

இவர்களுக்கும் பாடசாலைக்கும் இடையில் சுமார் பத்து கிலோமீற்றர் இடைவெளி காணப்படுகிறது இவர்கள் பாடசாலைக்கு செல்ல வேண்டியுள்ள ஏ-9 வீதியூடாக பல போக்குவரத்து சேவைகள் இடம்பெறுகின்ற போதும் இந்த பாடசாலை மாணவர்களுக்கான சேவையை வழங்குவதில் பேருந்து சாரதிகள் நடத்துனர்கள் சரியாக செயல்படவில்லை என மக்கள் தொடர்ச்சியாக குற்றம் சுமத்தி வருகின்றனர்.

மாணவர்கள் வீதியில் பேருந்தை மறிக்கும் போதும் அவர்களை ஏற்றாது செல்கின்ற அரச மற்றும் தனியார் பேருந்துகளால் மாணவர்கள் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு பாடசாலைக்கு உரிய நேரத்திற்கு செல்லவும் பாடசாலையிலிருந்து மீண்டும் உரிய நேரத்திற்கு வீடு திரும்பவும் முடியாத நிலைமையில் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் தொடர்ச்சியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பலருக்கு தெரியப்படுத்தியும் ஊடகங்களில் பல்வேறு தடவைகள் இந்த விடயம் தொடர்பில் சுட்டிக் காட்டப்பட்டும் இதுவரை இந்த பிரச்சனை தீர்க்கப்படாத பிரச்சினையாகவே காணப்படுகிறது குறிப்பாக மாணவர்கள் மாத்திரமன்றி குறித்த கிராமங்களில் இருந்து மாங்குளம் நகரத்திற்கு செல்கின்ற பொதுமக்கள் வயோதிபர்கள் நோயாளர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரையும் பேருந்துகள் ஏற்றிச் செல்லாத காரணத்தினால் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

குறிப்பாக பாடசாலை மாணவர்கள் காலை 6:45 முதல் 8 மணி வரை வீதியில் நின்று கூட எட்டு மணிக்கு ஆரம்பமாகும் பாடசாலைக்கு செல்ல முடியாமல் அங்கலாய்த்து வருகின்றனர் இவ்வாறான நிலையில் இன்று காலையும் கூட 6.45 மணி முதல் 8:15 மணி வரை சுமார் பத்துக்கும் மேற்பட்ட அரச பேருந்துகள் குறித்த பகுதி ஊடாக சென்ற போதும் மாணவர்கள் மறித்த போதும் எந்த பேருந்தும் நிப்பாட்டவில்லை என மாணவர்களும் பெற்றோர்களும் குற்றம் சுமத்தியுள்ளனர் இறுதியாக விசுவமடு வவுனியா வழித்தடத்தில் பணிபுரியும் தனியார் பேருந்து ஒன்று எட்டு இருபது மணியளவில் குறித்த மாணவர்களை குறித்த இடத்திலிருந்து பாடசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளது எனவே இவ்வாறு தொடர்ச்சியான பேருந்து சேவையின்மையால் பொதுமக்கள் மாணவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருகின்றனர்.



பல்வேறு இடங்களிலும் பேருந்து சேவைகள் இல்லாமையால் பயணிகள் பயணத்தை மேற்கொள்ள முடியாமல் சிரமப்படுகின்ற போதும் இந்த வீதியிலே அதிகளவான பேருந்து சேவைகள் இடம்பெறுகின்ற போதும் இந்த பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லலாமையானது பொதுமக்கள் மத்தியில் பாரிய விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த பொது மக்கள் இவ்வாறு தொடர்ச்சியாக பாடசாலைகளுக்கு மாணவர்கள் செல்ல முடியாது மாணவர்களை ஏற்றும் பேருந்தின் நடத்துனர்கள் சாரதிகள் ஏற்றிவிட்டு அவர்களை ஏசுவதாகவும் இவ்வாறான பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து மாணவர்கள் உரிய நேரத்திற்கு பாடசாலை சென்று வீடு திரும்பி வர முடியாத நிலையில் காணப்படுவதாகவும் எனவே இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இந்த வீதியில் இடம் பெறுகின்ற பேருந்து சேவைகள் அனைத்திலும் மாணவர்கள் இலகுவாக பாடசாலைக்கு சென்று வரக்கூடிய வகையில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்த கிழமைக்குள் சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படாத பட்சத்தில் வருகின்ற கிழமை ஏ-9 வீதியை பனிக்கன்குளம் பகுதியிலே மறித்து எந்த ஒரு வாகனத்தையும் செல்ல விடாது தடுத்து பாரிய ஆர்ப்பாட்டத்தை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் பொதுமக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

**- ஜெகதீஸ்வரன் டிக்ஷாந்த்**

# இலங்கை அரசினால் கையகப்படுத்தப்பட்ட வடக்கு மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளவில்லை

## வடமாகாணத்தில் காணி அபகரிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்கள் விசனம்

வடமாகாணத்தில் மக்களினுடைய காணிகளை அரசும், படையினரும், கையகப்படுத்தியுள்ள போதும், மக்கள் இடம் பெயர்ந்து பல வருடங்களாக வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்ற போது, அரசாங்கம் மக்களின் காணிகளை மக்களிடம் மீள கையளிக்க இது வரை துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என வடமாகாணத்தில் காணி அபகரிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்கள் குற்றம் சுமத்தி உள்ளனர்.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ தலைமையில் “வடமாகாண காணி அபகரிக்கப்பட்டோரின் குரல்” எனும் தொனிப்பொருளில் செவ்வாய்க்கிழமை (23) காலை 10.30 மணி முதல் மாலை 5 மணி வரை மன்னாரில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் விசேட கலந்துரையாடல் இடம் பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் தமது காணியை இழந்த மற்றும் அரசாங்கம் சுவீகரித்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள், பொது அமைப்புகள், கிராம மட்ட தலைவர்கள் என சுமார் 80 இற்கும் மேற்பட்ட பிரதி நிதிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது குறித்த மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு மற்றும் ஆலோசனைகளை வழங்கும் வகையில் சட்டத்தரணிகளான செல்வராசா டினேசன் மற்றும் திருமதி. சிவலிங்கம் புராதனி ஆகியோர் கலந்து கொண்டதோடு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார் உப அலுவலக அதிகாரியும் கலந்து கொண்டிருந்தார்.

குறித்த விசேட கலந்துரையாடலின் போது வடக்கில் உள்ள ஒவ்வொரு மாவட்டங்களையும் உள்ளடக்கி வருகை தந்திருந்த பிரதிநிதிகள் தமது மாவட்டங்களில் இடம் பெற்றுள்ள காணி அபகரிப்பு தொடர்பாக தெளிவு படுத்தினர்.



குறிப்பாக அரசாங்கம், படையினர், வனவள, தொல்பொருள் திணைக்களம் போன்றவர்கள் மக்களின் காணிகளை அபகரிப்பு செய்துள்ளமை குறித்து தெளிவு படுத்தினர்.

1984 ஆம் ஆண்டு சிங்கள அரசால் திட்டமிட்டு தாங்கள் வெளியேற்றப்பட்டு,தமது கிராமங்கள் பாதுகாப்பு வலயமாக இந்த அரசாங்கம் உறுவாக்கி உள்ளதாக முல்லைத்தீவை சேர்ந்த வயோதிப தாய் ஒருவர் ஆதங்கம் தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்களை கொண்டு வந்து அங்கே குடியேற்றம் செய்துள்ளனர். தமிழர்களின் பாரம்பரிய நிலங்களில் இந்த குடியேற்றம் இடம் பெற்றுள்ளது. தமது விளை நிலங்கள் இது வரை விடுவிக்கப்படவில்லை என ஆதங்கம் தெரிவித்தனர்.

சிங்கள அரசாங்கம் பாரபட்சமாக நடந்து கொள்வதாகவும், ஒரே குடையின் கீழ் ஒரே நாட்டில்,ஒரு ஆட்சியின் கீழ் ஒரு தாய் மக்கள் போல் வாழ்வதாக ராஜபக்ச அரசாங்கம் கூறி வந்த நிலையில், தமிழர்களின் காணிகளை அபகரித்து சிங்கள மக்களுக்கு வழங்கி தமிழர்களாகிய எங்களை ஓரங்கட்டி வந்துள்ளனர்.





இந்த புறக்கணிப்பு எங்களுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனாலேயே சிங்கள மக்கள்,சிங்கள அரசாங்கம் என்று கூறுகின்ற போது வெறுப்பை ஏற்படுத்துகிறது. எனவே இந்த நிலை மாற வேண்டும். சிங்கள அரசாங்கம் தமிழர்களையும் மனிதராக ஏற்றுக்கொள்ள வேண்டும். என அவர்கள் தெரிவித்தனர்.

**- மன்னார் நிருபர்**

# இலங்கைக்கு கடத்துவதற்காக ராமநாதபுரம் அருகே பதுக்கப்பட்டிருந்த 50 கோடி ரூபாய் மதிப்புள்ள கடல் அட்டை, சுறா மீன் துடுப்பு பறிமுதல்

ராமநாதபுரம் மாவட்டம் திருப்புல்லாணி அருகே புளித்தோப்பு கடற்கரை பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக தடை செய்யப்பட்ட கடல் அட்டை மற்றும் சுறா மீன் துடுப்புகளை ஒரு நாட்டு படகில் ஏற்றி தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளதாக கியூ பிரிவு போலீசாருக்கு செவ்வாய்க்கிழமை (23) காலை ரகசிய தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற கியூ பிரிவு போலீசார் கடல் அட்டை மற்றும் சுறா மீன் துடுப்புகளை பறிமுதல் செய்து கடத்தலுக்கு பயன்படுத்திய ஒரு நாட்டுப் படகு மற்றும் அதில் தொடர்புடைய ஒருவரை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும் பறிமுதல் செய்யப்பட்ட பொருட்களின் சர்வதேச மதிப்பு 50 கோடி ரூபாய் என போலீசார் தெரிவித்துள்ளனர். மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

**- மன்னார் நிருபர்**





இந்தியா செய்திகள்
India News

# கேரள மாநிலம் திருச்சூரில் 59 வயது தாய்க்கு 2வது திருமணம் செய்து வைத்த மகள்



தனது 59 வயது தாயார் தனிமையில் தவித்து வருவதை உணர்ந்த மகள் தாய்க்கு 2-வது திருமணம் செய்து வைத்தார்.

கேரள மாநிலம் திருச்சூரை சேர்ந்தவர் ரதிமேனன் (வயது 59). இவரது கணவர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். இவர்களுக்கு 2 மகள்கள் உண்டு. இருவருக்கும் திருமணமான நிலையில், ரதிமேனன் தனிமையில் வசித்து வந்தார்.

இந்தநிலையில் தனது தாயார் தனிமையில் தவித்து வருவதை உணர்ந்த ரதிமேனனின் மகள் பிரசிதா, கண்டிப்பாக தனது தாயாருக்கு ஒரு துணை வேண்டும் என்று சிந்திக்கத்தொடங்கினார். இதற்காக தனது தாய்க்கு திருமணம் செய்து வைத்து விடலாம் என்று அவர் முடிவு செய்தார்.

இதற்காக தகுந்த மணமகனை தேட ஆரம்பித்தார். இப்படிப்பட்ட சூழ்நிலையில் அதே பகுதியை சேர்ந்த மனைவியை இழந்து தனிமையில் வாழ்ந்து வந்த திவாகரன் (63) என்பவர்தான் தனது தாய்க்கு ஏற்ற துணை என்று பிரசிதா முடிவு செய்தார். 2 மகள்களுக்கு தந்தையான திவாகரன் வேளாண் பல்கலைக்கழகத்தில் பணி செய்து ஓய்வு பெற்றவர் ஆவார். அவரிடம் தனது தாயின் தனிமை பற்றியும், அவருக்கு ஒரு துணை வேண்டும், அது நீங்களாக இருந்தால் மிகவும் நல்லது என்று உருக்கமாக கூறினார் பிரசிதா. இதனை புரிந்து கொண்ட திவாகரன் 2-வது திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தார்.

திவாகரனின் மனநிலை குறித்து அவரது 2 பெண்குழந்தைகளிடமும் பிரசிதா பேசினார். அவர்களும் தந்தையின் திருமணத்திற்கு மறுப்பு தெரிவிக்கவில்லை. இதை தொடர்ந்து, தனது தாய் ரதிமேனனின் சம்மதத்தை பெற்ற அவர் திருச்சூர் திருவம்பாடி கோவிலில் இருவருக்கும் திருமணத்தை நடத்தி வைக்க முடிவு செய்தார். அதன்படி உற்றார், உறவினர்கள் முன்னிலையில் திருமணத்தை நடத்தி முடித்தார்.

தாய்க்கு 2-வது திருமணம் செய்து வைத்து அழகு பார்த்த பிரசிதா கூறியதாவது: "எனது அம்மாவுக்கு நாங்கள் 2 பெண் குழந்தைகள். அப்பா உயிரோடு இருக்கும்போதே எங்கள் இருவருக்கும் திருமணமாகிவிட்டது. நாங்கள் அவரவர் கணவர் வீட்டில் வாழ்ந்து வருகிறோம். இந்த நிலையில் அப்பா திடீரென்று மரணம் அடைந்ததால் அம்மா தனிமையானார். எங்களுக்கும் கணவர், குழந்தைகள் என ஆனதால் அம்மாவை அடிக்கடி நேரில் வந்து பார்க்க முடியவில்லை. அம்மாவின் தனிமை நிலையை போக்க வேண்டும் என்று யோசித்தேன். அதற்காகத்தான் இந்த திருமண ஏற்பாடு செய்யப்பட்டது".

# இளைஞர்கள் அனைவரும் காதலிக்க வேண்டுமென்கிறார் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கே. பாலகிருஷ்ணன்



இளைஞர்கள் அனைவரும் காதலிக்க வேண்டும் - பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று நாமக்கல்லில் திருமண விழாவில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் கே.பாலகிருஷ்ணன் பேசினார்.


நாமக்கலில், இந்திய மாணவர் சங்கத்தின் மாநில தலைவர் கண்ணன், மாநில துணைத் தலைவர் தேன்மொழி ஆகியோரின் திருமண விழா நடைபெற்றது. இந்த திருமணத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் பாலகிருஷ்ணன் முன்னின்று நடத்தி வைத்தார். அதன் பிறகு மணமக்களை வாழ்த்தி பேசிய பாலகிருஷ்ணன், காதல் குறித்த பல்வேறு விஷியங்களைப் பகிர்ந்தார்.

அதில் அவர் பேசியதாவது, காதல் என்பது சாதி, மதங்களைக் கடந்தது. கம்யூனிஸ்ட் கட்சியில் காதலுக்கு பஞ்சம் இல்லை. இந்து மதத்தை சேர்ந்தவரான சுந்தரய்யா கிறிஸ்தவ பெண்ணான லீலா என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். தற்போது இருக்கும் சூழ்நிலைப் போல் அப்போது இல்லை, பல்வேறு போராட்டக்களுக்கு இடையே அந்த திருமணம் நடைபெற்றது. காதலிப்பதில் எந்த தவறும் இல்லை, அது ஒன்றும் தேச குற்றமல்ல, ஆதலால் இளைஞர்கள் அனைவரும் காதலிக்க வேண்டும். பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் செய்து கொள்ள வேண்டும்.

என்னுடைய குடும்பத்தில் அனைவருமே காதல் திருமணம் செய்து கொண்டவர்கள் தான். காலநேரம் பார்த்து, பல்வேறு சடங்குகள் செய்து நடைபெறும் திருமணங்கள் கூட ஆறு மாதங்களில் நீதிமன்ற வாசலில் சென்று நிற்கிறது. சீர்திருத்த முறையில் நடைபெற்ற இந்திய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த கண்ணன், தேன்மொழி தம்பதியினர் பல்லாண்டு வாழ வேண்டும் என வாழ்த்தி பேசினார்.



# அரகலயவும் பயங்கரவாதம்?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

பயங்கரவாத தடைச் சட்டம் அரகலயவின் மீது பாய தொடங்கி விட்டது. "மனித உரிமைகள் பாதுகாவலர்களான வசந்த முதலிகே, ஹஷான் ஜீவந்த மற்றும் கல்வெவ சிறிதம்மா தேரர் ஆகியோர் இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளமை குறித்து நான் மிகவும் கவலையடைகிறேன். அவர்களை தடுப்புக் காவலில் வைக்கும் உத்தரவில் கையெழுத்திட வேண்டாம் என ஜனாதிபதி ரணிலிடம் கேட்டுக்கொள்கின்றேன், அவ்வாறு செய்வது இலங்கைக்கு இருண்ட நாளாக அமையும்" என்று ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பாதுகாப்பாளர்கள் தொடர்பான விசேட அறிக்கையாளர் மேரி லோலர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். செய்துள்ளார்.

இதுவரையிலும் மூன்று பேர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளரான வசந்த முதலிலிகே, அனைத்து பல்கலைக்கழக பிக்குகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளரான கல்வேவ ஸ்ரீ தம்மதேரோ, களனி பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றியத்தை சேர்ந்த கசந்த ஜாவந்த குணத்திலக ஆகிய மூவர் அவ்வாறு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த 21ஆம் திகதிவரை மொத்தம் 3353பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களில் 1255பேர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

முழு உலகத்தையும் திருப்பி பார்க்க வைத்த அரகலயவின் பிரதான செயற்பாட்டாளர்கள் பயங்கரவாதிகளாக கணிக்கப்படும் ஒரு நிலைமை ஏன் வந்தது? முதலாவது காரணம் அரகலய மீண்டும் தோற்றம் பெறக்கூடாது என்ற முன்னெச்சரிக்கை. அரகலயவை உற்பத்தி செய்த பொருளாதார நெருக்கடிகள் தொடர்ந்தும் முற்றாக அகற்றப்படவில்லை. ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்தபின் எரிவாயு எரிபொருள் போன்றன ஒப்பிட்டளவில் கிடைக்க தொடங்கி விட்டன. நாட்டில் இப்பொழுது நீண்ட வரிசைகளைக் காண முடிவதில்லை. இது ஒரு காட்சி மயப்படுத்தப்பட்ட கவர்ச்சியான மாற்றம். ஆனால் பொருட்களின் விலைகள் இறங்கவே இல்லை. அரசாங்கம் முட்டையின் விலையை நிர்ணயித்த போதிலும் சந்தையில் முட்டையின் விலை இறங்கவே இல்லை. அரசாங்கத்தின் விலை நிர்ணயங்கள் மக்களை கவரும் நோக்கிலானவை தவிர யதார்த்தமானவை அல்ல என்று வியாபாரிகள் குற்றம் சாட்டுகிறார்கள். சில நாட்களுக்கு முன் மண்ணெண்ணையின் விலை அதிகரித்தது. அது விவசாயிகளாலும் கடத்தொழிலாளர்களாலும் தாங்கமுடியாத அதிகரிப்பு. எனவே கீழ் மத்தியதரவர்க்கம் மற்றும் ஏழைகளால் நுகர முடியாத அளவுக்கு விலைகள் உச்சத்தில் நிற்கின்றன. இது மக்களை எப்பொழுதும் தெருவுக்கு கொண்டு வரக்கூடியது.

எனவே மீண்டும் ஆர்ப்பாட்டங்களில் மக்கள் ஈடுபடுவதை தடுப்பதற்கு முன்னணிச் செயற்பாட்டாளர்களை பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் உள்ளே போட வேண்டிய தேவை ரணிலுக்கு உண்டு. அதாவது ஆர்ப்பாட்டங்கள் மீண்டும் மீண்டும் தோன்றலாம் என்ற ஆபத்தை அவர் முன்னுணர்கிறார். பொருளாதார நெருக்கடியை எடுத்த எடுப்பில் தீர்க்க முடியாது என்பது அவருக்கு தெரிகிறது. அனைத்துலக நாணயநிதியத்தின் உதவிகள் இந்த வருட இறுதிக்குப் பின்தான் கிடைக்கலாம் என்று தோன்றுகிறது. சீனாவுடனான கடனை இன்று வரையிலும் மீளக் கட்டமைக்க முடியவில்லை. எனவே மக்கள் எழுச்சிகளைத் தடுக்க வேண்டும் என்ற முன்னெச்சரிக்கை காரணமாகத்தான் அரகலய செயற்பாட்டாளர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் உள்ளே தூக்கி போட்டிருக்கிறார். இது முதலாவது பிரதான காரணம்.

இரண்டாவது காரணம் மே ஒன்பதாம் திகதியும் ஜூன் 9ஆம் திகதியும் ஆளுங்கட்சி அரசியல்வாதிகளின் சொத்துக்களையும் வீடுகளையும் தேடித்தேடி எரித்து அழித்தவர்களைப் பழி வாங்குவது. மீண்டும் ஒரு தடவை ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசியல்வாதிகளின் வீடுகளை தாக்கத் துணியாதபடி அவர்களை அச்சுறுத்த வேண்டும். அதற்காகத்தான் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அவர் உபயோகித்திருக்கிறார்.

அரகலய தோன்றக் காரணமாக இருந்த அடிப்படை அம்சம் முற்றாக நீக்கப்படவில்லை. அரகலயவின் பிரதான கோரிக்கை சிஸ்டத்தை மாற்று என்பதாகும். ஆனால் அதற்கான ஏற்பாடுகள் மெது மெதுவாகவே நடக்கின்றன. ரணில் விக்கிரமசிங்க பொருளாதார நெருக்கடியை நீக்கினால் பிரச்சனைகளின் மூல காரணம் பலவீனமடைந்து விடும் என்று நம்புகிறார். எனவே முதலில் பொருளாதார நெருக்கடியை எப்படித் தீர்க்கலாம் என்று தான் அவர் சிந்திக்கின்றார். பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பது என்று சொன்னால் அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும். அரசியல் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவது என்று சொன்னால் எதிர்க்கட்சிகளையும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடக்கூடிய மக்களையும் சமாளிக்க வேண்டும். அரசாங்கத்தின் முன் இப்போதுள்ள ஒரே தெரிவு சர்வகட்சி அரசாங்கம்தான். ஆனால் அவ்வாறு ஒரு சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கான கோரிக்கைகள் எதிர்க்கட்சிகளால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

ஒரு சர்வகட்சி அரசாங்கத்தில் ரணில் விக்கிரமசிங்கவோடு இணைவதற்கு எதிர்க்கட்சிகள் தயங்குகின்றன. அவருடைய தந்திரம் ஒரு பிரதான காரணம். சஜித் பிரேமதாச ரணில் விக்கிரமசிங்கவோடு இணைந்து அரசாங்கத்தைப் பங்கிடுவதற்கு தயாராக இல்லை. இந்த வாரமும் இதுகுறித்து ஒரு சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் சர்வ கட்சி அரசாங்கத்தை உருவாக்க சஜித் அணி தயாராக இல்லை. ரணிலோடு இணைந்தால் அவர் தன்னுடைய அணியைக் கரைத்து எடுத்து விடுவார் என்று சஜித் பயப்படுகிறார். வெளியில் இருந்து ஆதரவு தரலாம் என்று சில நாட்களுக்கு முன் நடந்த சந்திப்பில் கூறி இருக்கிறார். ஜேவிபியும் அவ்வாறு சர்வ கட்சி அரசாங்கத்தில் இணைவதற்கு தயார் இல்லை. தமிழ் கட்சிகள் ஒன்றாக முடிவெடுக்கவில்லை. விக்னேஸ்வரன் தனது கூட்டுக் கட்சிகளோடு கலந்தாலோசிக்காமல் முடிவுகளை எடுப்பதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. தமிழ் தேசிய மக்கள் முன்னணி சர்வ கட்சி அரசாங்கத்தில் இணையாது. கூட்டமைப்பு வழமை போல இரு வேறு நிலைப்பாடுகளோடு காணப்படுகிறது.

எனவே ஒரு சர்வ கட்சி அரசாங்கத்துக்கான வாய்ப்புக்கள் குறைவாகத்தான் தெரிகின்றன. மாறாக எதிர்த் தரப்பிலிருந்து தனக்கு ஆதரவான ஆட்களை கழட்டி எடுக்கும் வேலையை ரணில் செய்யலாம். அதை அவர் ஏற்கனவே தொடங்கிவிட்டார். அதுஅவருக்குக் கைவந்த கலை. ஆனால் அவ்வாறு உருவாக்கப்படும் ஒரு அரசாங்கம் எதிர்க்கட்சிகளாலோ அல்லது மக்களாலோ ஏற்றுக் கொள்ளப்பட்டதாக இருக்காது.

தாமரை மொட்டுக் கட்சியைப் பாதுகாக்க வேண்டிய தேவை ரணிலுக்கு உண்டு. ரணிலைப் பாதுகாக்க வேண்டிய தேவை தாமரை மொட்டுக்கு உண்டு. எனவே ஒருவர் மற்றவரில் தங்கியிருப்பார்கள். இது எதுவரை என்று சொன்னால், அடுத்த பெப்ரவரி மாதம் வரையிலும். ஏனெனில் அடுத்த பெப்ரவரி மாதத்தோடு யாப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ரணிலுக்கு கிடைத்துவிடும். அவ்வாறு கிடைத்தால் அதற்குப்பின் நடக்கக்கூடிய எந்த ஒரு தேர்தலிலும் தாமரை மொட்டுக் கட்சி இப்பொழுது அனுபவிக்கும் பெரும்பான்மையைப் பெற முடியுமா என்பது சந்தேகமே. எனவே வரும் பெப்ரவரி மாதத்தோடு தனது பேரம் கீழிறங்கி விடும் என்று தாமரை மொட்டுக் கட்சிக்குத் தெரியும். தன்னுடைய பேரம் அதிகமாகிவிடும் என்று ரணிலுக்கு தெரியும். எனவே அவர் திட்டமிட்டு காய்களை நகர்த்துகிறார். அடுத்த ஆறு மாத காலத்துக்குள் அவர் தன்னை பலப்படுத்த வேண்டும். யூ.என்.பியைப் பலப்படுத்த வேண்டும் என்று சொன்னால் சஜித் பிரேமதாசவை பலவீனப்படுத்த வேண்டும். ஒன்றில் அவரை வழிக்குக் கொண்டு வர வேண்டும். அல்லது தோற்கடிக்க வேண்டும்.

அடுத்த பெப்ரவரி மாதத்திற்கு பின்னரும் அவர் நாடாளுமன்றத்தை கலைப்பாரா என்பது சந்தேகம்தான். ஏனெனில் அடுத்த பெப்ரவரி மாதத்தின் பின் நாடாளுமன்றம் பெருமளவுக்கு அவருடைய கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும். தாமரை மொட்டின் பெரும்பான்மை பெருமளவு அவருக்கு கட்டுப்பட்டது ஆகிவிடும்.அதன்பின் அவர் விரும்பியபடி காய்களை நகர்த்தலாம். இந்த இடைப்பட்ட காலகட்டத்திற்குள் அவர் உள்ளூராட்சி சபை தேர்தல்களையும் மாகாண சபைத் தேர்தல்களையும் நடத்தக்கூடும். தேர்தல் முடிவுகள் தாமரை மொட்டுக்கு பாதமாக அமையும். இப்பொழுது உள்ளூராட்சி மன்றங்கள் பெருமளவுக்கு தாமரை மொட்டின் கட்டுப்பாட்டுக்குள்தான் காணப்படுகின்றன. ஆனால் ஒரு புதிய தேர்தல் நடந்தால் தாமரை மொட்டு அந்த பலத்தை இழக்கக்கக் கூடும். அதேபோல மாகாண சபைகளுக்கான தேர்தலின் போதும் தாமரை மொட்டு இப்பொழுது அனுபவிக்கும் பெரும்பான்மையை அனுபவிப்பது கடினம். எனவே புதிய உள்ளூராட்சி மன்றங்களும் புதிய மாகாண சபைகளும் நமது பலவீனத்தை வெளிப்படுத்தலாம் என்ற அச்சம் தாமரை மொட்டுக்கு உண்டு.

அதனால்தான் நாடாளுமன்றம் அடுத்த பெப்ரவரி மாதத்தின் பின் கலைக்கப்படுவதை எப்படித் தடுக்கலாம் என்று தாமரை மொட்டுக் கட்சி சிந்திக்கின்றது. ரணில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கும் 22 வது சட்டத் திருத்த வரைபில், 19வது திருத்தத்தில் உள்ளபடி நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைப்பதற்கான கால எல்லையை நாலரை ஆண்டுகளாக மாற்றும் ஏற்பாடு இணைக்கப்படவில்லை. இருபதாவது திருத்தத்தில் உள்ளபடியே 2 1/2 ஆண்டுகளில் நாடாளுமன்றத்தைக் கலைக்கலாம் என்று உள்ளது. இது தாமரை மொட்டைத் தன் பிடிக்குள் வைத்திருப்பதற்கு ரணில் செய்யும் தந்திரம் என்று அக்கட்சி நம்புகிறது. அதனால்தான் சுமார் 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றம் கலைக்கப்படும் காலத்தை 19 இல் உள்ளதுபோல மாற்றுமாறு அண்மையில் ரணிலுக்கு கடிதம் கொடுத்திருந்தார்கள். அவர்களை சமாளிப்பதற்காக ரணில் இப்போதைக்கு பொது தேர்தல் இல்லை என்று அறிவித்திருக்கிறார்.

அவர்களை சமாளிப்பது என்பதைத் தவிர, வேறு ஒரு உள்நோக்கமும் அவரிடம் இருக்கலாம். பெப்ரவரி மாதத்தின் பின் தன்னில் தங்கியிருக்கப் போகும் நாடாளுமன்றத்தை அதாவது ஒப்பிட்டுளவில் தனக்கு அதிகம் கட்டுப்படும் நாடாளுமன்றத்தை வைத்துக்கொண்டு, தன் எஞ்சிய ஆட்சிக் காலத்தை எப்படிக் கடக்கலாம், தனது சொந்த கட்சியை எப்படி மீள இணைக்கலாம் என்று அவர் திட்டமிடுவார்.

ஒரு புதிய தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படும் புதிய நாடாளுமன்றம் தாமரை மொட்டுக்கு பாதகமாகவும் எதிர்கட்சிகளுக்கு சாதகமாகவும் அமையக்கூடும். ஆனால் யு என் பிக்கு அது எப்படி அமையும் என்று இப்பொழுது கூறுவது கடினம். ஏனென்றால் யூ.என்.பி. இப்பொழுது இரண்டாக உடைந்து கிடக்கிறது. எனவே நாடாளுமன்ற தேர்தலை நடத்தினால் அது எதிரிகளுக்கு சாதகமாக அமையும் என்று ரணில் அஞ்சுகிறார். அதனால் அவர் நாடாளுமன்றத்தை கலைக்கவும் ஒரு புதிய தேர்தலை நடத்தவும் தயாராக இருக்க மாட்டார்.

எனவே கூட்டிக் கழித்துப் பார்த்தால் ஒரு புதிய நாடாளுமன்ற தேர்தலை நடத்துவதற்கு ரணிலுக்கும் விருப்பமில்லை. வரும் பெப்ரவரி மாதத்தின் பின் தாமரை மொட்டு கட்சியானது அவரில் தங்கி இருக்கும் நிலைமைகள் மேலும் அதிகரிக்கும். அந்த நிலையை அப்படியே பேணியபடி அவர் தன்னுடைய பதவிக்காலத்தை முடிப்பதற்கு இடையில் யு என் பி ஐ எப்படிப் பலப்படுத்தலாம் என்று திட்டமிடலாம்.

எனவே சஜித்தை எப்படி வளைத்தெடுப்பது என்பதே அவர் முன் உள்ள சவால். சஜித்தை வளைத்து எடுத்தால் ரணிலுக்கு இரட்டை லாபம் உண்டு. அதன் மூலம் ஒரு சர்வ கட்சி அரசாங்கத்தை உருவாக்கலாம். அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்பட்டிருப்பதாக சர்வதேச நாணய நிதியத்துக்கும் வெளிக்காட்டலாம். இரண்டாவது சஜித்தை தோற்கடித்து விட்டால் அல்லது சஜித்தை வழக்கு கொண்டு வந்து விட்டால் யூ.என்.பி மீள இணைந்து விடும். அதன்மூலம் அடுத்த நாடாளுமன்ற தேர்தல் ஜனாதிபதி தேர்தல் போன்றவற்றில் ரணில் முன்னுரை விடப் பலமாகக் காணப்படுவார். எனவே இப்பொழுது ரணிலுக்கு உள்ள சவால், சஜித்தை எப்படி வளைப்பது என்பதுதான். ஒரு புதிய தேர்தலுக்குப் போக அவர் தயார் இல்லை. ஏனெனில் அத்தேர்தல் முடிவுகளில் ஜே.வி.பியின் தலைவர் அனுர குமார கேட்பது போல" 134 எம்பிக்களா? அல்லது மக்களா?" என்ற கேள்விக்கு விடை கிடைத்துவிடும்.


# Ontario Teachers' Union's Salary Bargaining Proposals are Costly and Would Not be Fair to Taxpayers - Ontario's Education Minister Stephen Lecce

# ஒன்றாரியோ ஆசிரிய சங்கங்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான கோரிக்கைகள் மிக அதிகமானதும் வரியிறுப்பாளர்களை பாதிக்கும் விடயமுமாகும்

## - ஒன்றாரியோ கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெச்சே



Parliamentary Assistants to Education, Patrice Barnes (Ajax)



"ஒன்றாரியோ ஆசிரிய சங்கங்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பான கோரிக்கைகள் மிக அதிகமானதும் வரியிறுப்பாளர்களை பாதிக்கும் விடயமுமாகும். மாகாணத்தில் இயங்கும் ஆசிரிய சங்கங்களில் முக்கியமானதாகக் கருதப்படும் CUPE தொழிற்சங்கம் சமர்ப்பித்துள்ள சம்பளம் மற்றும் ஏனைய பேரம் பேசும் கோரிக்கைகள் மிக அதிகம் என்றே நான் கருதுகின்றேன். அத்துடன் வரி செலுத்துவோருக்கு இந்த சம்பள அதிகரிப்பு நியாயமாக இருக்காது என்றும் நான் கருதுகின்றேன்". இவ்வாறு தெரிவித்தார் ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெஸ். கடந்த செவ்வாய்கிழமையன்று மதியம் அளவில் ஒன்றாரியோவில் உள்ள பல்லினப் பத்திரிகையாளர்களை இணையவழியாகச் சந்தித்த கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சரோடு கல்வி அமைச்சின் பாராளுமன்றச் செயலாளர் Patrice Barnes அவர்களும் பல்லினப் பத்திரிகையாளர்களோடு நடத்தப்பெற்ற உரையாடல்களின் போது பங்கெடுத்தார். கனடா உதயன் பிரதம ஆசிரியர் குழுவும் அங்கு கலந்து கொண்டது.

அன்று பல்லினப் பத்திரிகையாளர்களோடு மிகவும் திறந்த மனதோடு அவர் உரையாடினார். "மாகாணத்தில் உள்ள பாடசாலையில் பணியாற்றும் கல்வி சாராத ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கம் முன்வைத்த கோரிக்கைகள் ஒத்துப்போகவில்லை" என்றார் அமைச்சர்.

CUPE தொழிற்சங்கம் முன்மொழிந்த சம்பள உயர்வு - அனைத்து தொழிலாளர்களுக்கும் ஒரு மணி நேரத்திற்கு $3.25, அல்லது வருடத்திற்கு சுமார் 11.7 சதவீதம் - மற்றும் ஊதிய கட்டங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பது, அனைத்து தொழிலாளர்களையும் உயர் ஊதிய விகிதத்தில் வைப்பது, மற்ற கோரிக்கைகளுடன், 50க்கு ஒத்ததாகும்.

இந்த மாகாணம் - ஒரு வருடத்திற்கு ஒரு சதவிகிதம் பொதுத்துறை ஊதியத்தை முடக்கியது - CUPE தொழிற்சங்கத்தில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்கள் வருடாந்தம் $40,000 க்கும் குறைவாக சம்பாதிக்கும் பட்சத்தில் நான்கு ஆண்டுகளில் ஒவ்வொரு ஆண்டும் இரண்டு சதவிகிதம் உயர்த்தவும், $40,000 க்கு மேல் உள்ளவர்களுக்கு 1.25 சதவிகிதம் வருடாந்திர உயர்வும் வழங்கியுள்ளோம்.

CUPE அங்கம் வகிக்கும் தொழிலாளர்கள் மிகக் குறைந்த ஊதியம் பெறும் பள்ளி வாரிய ஊழியர்கள், சராசரியாக ஆண்டுக்கு $39,000 சம்பாதிக்கிறார்கள், இருப்பினும் அந்த எண்ணிக்கை பகுதிநேர ஊழியர்களையும் உள்ளடக்கியது.

"நாம் CUPE தொழிற்சங்கத்தடன் என்ன பேச்சுவார்த்தை நடத்துகிகிறோம், என்ன உடன்படிக்கையில் கையொப்பமிடுகிறோம் என்பது மற்ற எல்லா கல்வி பேச்சுவார்த்தைகளிலும் அடித்தளமாகிறது," என்றும் அமைச்சர் கூறினார், தொழிற்சங்கத்தின் கோரிக்கையை "பெரியது" என்று அழைத்தார், மேலும் மற்ற அனைத்து கல்வி தொழிற்சங்கங்களுக்கும் இவ்வாறான கோரிக்கைகளை முன்வைத்தால் எமத மாகாணம் அதிக நிதி நெருக்கடிக்கு உள்ளாகும் அத்துடன் மாகாணத்திற்கு $21 பில்லியன் மேலதிகமாகச் செலவாகும்.

55,000 பாதுகாவலர்கள், பள்ளி அலுவலக ஊழியர்கள், மதிய உணவு அறை மேற்பார்வையாளர்கள், சிறுவயது கல்வியாளர்கள் மற்றும் கல்வி உதவியாளர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் CUPE தொழிற்சங்கத்தின் கிளை சங்கம் ஒன்று, அரசாங்கத்தின் சலுகையால் "விரக்தியடைவதாக" கூறியது.

இவ்வாறிருக்க. அமைச்சர் தனது உரையில் ஆசிரியர்கள் தற்போது அதிக சம்பளம் பெறுகின்றார்கள். ஆனால் கல்வி சாராத ஊழியர்களின் கோரிக்கைகள் சிறிது நிறைவேற்றப்படும். எனினும் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோரின் கோரிக்கைகளை மாத்திரமே நாம் அதிக கவனத்தில் எடுப்போம். மாணவர்களின் நலன்களிலும் அவர்கள் தகுந்த கற்பித்தலை பாடசாலைகளில் பெறுகின்றார்களா என்பதிலும் எமது அரசாங்கமும் எனது அமைச்சும் முக்கிய கவனமெடுக்கும் என்றார்.

LJI Arjune and Ganesh



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ் கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலையில் திறன் வகுப்பறைத் திறப்பு விழா



இரட்ணம் பவுண்டேசன் - UK மற்றும் செல்வநாயகி மகாலிங்கம் குடும்பத்தவர்களின் நிதிப்பங்களிப்பில் திறன் வகுப்பறை ஒன்று கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் சென்ற வெள்ளிக்கிழமை (19/8) விமரிசையாகத் திறந்து வைக்கப்பட்டது.

இப்பாடசாலையின் அதிபர் திருமதி. கவின்ஜா நவஜீவா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரிகளின் முந்நாள் அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் அவர்களும் சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயத்தின் முந்நாள் வலயக்கல்விப்பணிப்பாளரும் IMHO-USA அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளருமாகிய திரு. சு. கிருஷ்ணகுமார் அவர்களும் கௌரவ விருந்தினராக கோப்பாய் மற்றும் நல்லூர் கோட்டக்கல்வி பணிப்பாளராக கடமையாற்றும் திரு. என். சிவநேசன் அவர்களும் கலந்து கொண்டிருந்தமை இவ்விழாவை சிறப்புற வைத்திருந்தது.

இவ்விழாவில் இரட்ணம் பவுண்டேசன் - UK ஸ்தாபகர் கலாநிதி இரட்ணம் நித்தியானந்தன் அவர்கள் ஆற்றிவரும் மனித நேய அர்ப்பணிப்பான சேவைகளுக்காக நன்றி தெரிவிக்கப்பட்டது. மட்டுமன்றி இவ்விழாவில் கலந்து கொண்டிருந்த ஆரம்பக்கல்வி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு திறன் பலகையை கையாள்வது தொடர்பான வழிகாட்டல்கள் விருந்தினர்களால் வழங்கப்பட்டது. இறுதியில் தேசிய மட்டத்தில் பரிசில்கள் பெற்ற இப்பாடசாலையின் இருமாணவர்களும் விருந்தினர்களால் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்க நிகழ்வாக அமைந்திருந்தது.




Tel: 00447956541844

# "கௌரவமான அரசியல் தீர்வைக் கோரி 25 வது" நாளாக வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஏற்பாட்டில் போராட்டம்



இ ணை ய த் தி ன் ஒழுங்கமைப்பில் அதன் இணைப்பாளர் சகாயம் திலீபன் தலைமையில் வியாழக்கிழமை (25) காலை 10 மணி அளவில் மன்னார் தலைமன்னார் பிரதான வீதி துள்ளு குடியிருப்பு பகுதியில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, சட்டத்தரணி சர்மிலன் டயஸ் மற்றும் கிராம மட்ட அமைப்புகள், விவசாய, மீனவ சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை ஆர்வலர்கள், மன்னார் மெசிடோ மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் பணியாளர்களும் கலந்து கொண்டார்கள்.

குறித்த செயல் திட்டத்தில் கலந்து கொண்ட பொது மக்களால் 100 நாள் செயற்திட்டத்திற்கான பொது மகஜர் வாசிக்கப்பட்டது டன் வருகை தந்த பொது மக்களுக்கு அரசியல் தீர்வு திட்டம் மற்றும் 13 ஆம் திருத்த சட்டம் தொடர்பான சாதக பாதக விளைவுகள் தொடர்பாக சட்டத்தரணி சர்மிலன் டயஸ ின் தெளிவுபடுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

அதே நேரம் அரசியல் தீர்வு விடயத்தில் மக்களின் கருத்துக்கள் மற்றும் கோரிக்கைகள் தொடர்பான கருத்துக்களும் உள் வாங்கப்பட்டது.

குறித்த போராட்டம் வடக்கு-கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாட்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**




# 65th Commonwealth Parliamentary Conference to be host by Canada in Nova Scotia

# கனடா, நோவா ஸ்கொசியா–வில் 65–ஆவது காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாடு:

## மு. ரவி, ஜசெக குணா உள்ளிட்ட மலேசியா இந்திய பேராளர்களுக்கு கனட உதயன் சார்பில் வரவேற்பு



**- நக்கீரன்**

**கோ**லாலம்பூர், ஆக.25:

ஐநா மன்றத்தை அடுத்து பாரிய பன்னாட்டு அமைப்பான காமன்வெல்த் அமைப்பின் 65-ஆவது நாடாளுமன்ற மாநாடு கனடா, நோவா ஸ்கொட்டியா-வில் கடந்த திங்கட்கிழமை ஆகஸ்ட் 22-இல் தொடங்கியது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக கடந்த இரு ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த இந்த மாநாடு, இந்த ஆண்டு எழுச்சியுடன் தொடங்கி நடைபெற்று வருகிறது.

காமன்வெல்த் அமைப்பில் உறுப்பியம் பெற்றுள்ள நாடுகளின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் என ஏறக்குறைய 600 பேராளர்கள் கலந்து கொள்ளும் மாநாட்டை கனடா ஏற்று நடத்துகிறது.

மலேசியாவில் இருந்தும் நாடாளுமன்ற பிரதிநிதிகள், அனைத்து சட்டமன்றங்களின் சார்பில் மக்கள் பிரதிநிதிகள் என ஏராளமான பேராளர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

நெகிரி செம்பிலான் மாநிலத்தில் இருந்து சட்டமன்ற சபாநாயகர் டத்தோ சுல்கி.ஃப்ளி முகமட் பின் ஓமார், துணை சபாநாயகர் ரவி முனுசாமி, ஆட்சிக் குழு உறுப்பினர்கள் நிக்கோல் தான், சூ கென் வா, ஜனநாயக செயல் கட்சி (ஜசெக) சட்டமன்ற உறுப்பினர் குணா, சட்டமன்ற செயலாளர் அமீன், துணைச் செயலாளர் நூருள் ஃபித்ரா மூடா உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

ஆகஸ்ட் 26-வரை நடைபெறவுள்ள இந்த மாநாட்டை கனடாவின் கவர்னர்-ஜெனரல் சீமாட்டி மேரி சைமன் தொடங்கி வைத்தார்.

இந்த மாநாட்டில் மலேசியாவில் இருந்து கலந்து கொண்டிருக்கும் மக்கள் பிரதிநிதிகள் மு.ரவி, குணா உள்ளிட்ட தமிழ் மக்கள் பிரதிநிதிகளுக்கு கனடாவின் உதயன் பத்திரிகை சார்பில் அதன் தலைமை ஆசிரியர் என். லோகேந்திர லிங்கன் வரவேற்பு தெரிவித்தார்.




LJI- ARJUNE

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தழுத்தம், தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

## அளவட்டி மக்கள் மன்றத்தின் கோடைகால ஒன்றுகூடல், நிர்வாகசபை தெரிவு மற்றும் விளையாட்டுப் போட்டி 2022

காலம்: ஞாயிற்றுக்கிழமை Aug 28, 2022
காலை: 10 மணியிலிருந்து
இடம்: Miliken Park (5555 Steeles Ave. E)
Section B

அனைவரையும் கூடி குலாவி விருந்துண்டு மகிழ அன்புடன் அழைக்கின்றோம். - நிர்வாகசபை.

info@alaveddy.ca www.alaveddy.ca

# மன்னார் மாவட்டத்தில் 3000 குடும்பங்களை 1400 மில்லியன் ரூபா கடனாளிகளாக மாற்றியுள்ள தேசிய வீடமைப்பு அதிகார சபை

இலங்கை செய்திகள்
Sri Lanka News



தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் கடந்த 2018, 2019 ஆம் ஆண்டு "செமட்ட செவன" மாதிரி செயற்திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்ட வீட்டுத் திட்டத்தின் ஊடாக மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 3022 குடும்பங்களில் சில குடும்பங்கள் பகுதி அளவிலும் பல குடும்பங்கள் முழுமையாகவும் கடனாளியாகி உள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் உள்ள மிகவும் பின்தங்கிய குடும்பங்களை முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்து நேரடி கள வியத்தின் ஊடாக 2018,2019 ஆண்டு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினர் மற்றும் பிரதேச செயலகங்கள் இணைந்து வீட்டு திட்ட பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 5 லட்சம் மற்றும் 7 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான வீட்டுத் திட்டத்திற்கான செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தனர்.

அதன் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தங்கள் தற்காலிகமாக வசித்து வந்த குடிசை வீடுகளையும் உடைத்து கல் வீடு கட்டும் கனவில் அவசர அவசரமாக அடிக்கல் நாட்டும் பணிகளை முன்னெடுத்திருந்தனர்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் நிபந்தனையின் அடிப்படையில் வீடுகளின் நிர்மாணத்திற்கு அமைய எட்டு விதமாக வரையறுத்து பகுதி பகுதியாக அவர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொண்டிருந்தது.

குறிப்பாக வீட்டுக்கான அடித்தளம், அடித்தளம் முடிவுறுத்தப் படல், ஜன்னல் அளவு, லின்றர் அளவு, கூறை பூர்த்தி என எட்டு அளவிடையை கொண்டு கொடுப்பனவுகள் செலுத்துவதாக வீட்டுத் திட்ட பயனாளிகளுக்கு தெரிவிக்கப்பட்டு வீட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆனால் வீட்டுத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 3 வருடங்கள் கடந்துள்ள நிலையில் பல குடும்பங்கள் அத்திவரம் அமைப்பதற்கு உரிய பணம் கிடைக்காத நிலையில் கடனாளிகளாக கடன் சுமையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

கல் வீடு கட்ட வேண்டும் என்ற கனவிலும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் ஆறு மாத காலத்திற்குள் வீட்டை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நிர்பந்தத்தால் காதிலும், கழுத்திலும் இருந்த நகைகளை அடகு வைத்து வட்டிக்கும் நுன்நிதி நிறுவனங்களிடம் கடன் பெற்றும் அமைக்கப்பட்டு வீடுகளை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் பலரும் பூர்த்தி செய்யப்பட்டும் தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் கொடுப்பனவு பெறாத நிலையிலும் பல குடும்பங்கள் மன்னாரில் செய்வதறியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, பொருட்களின் விலை ஏற்றம் என நடுத்தர குடும்பங்கள் மற்றும் வறிய குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் வீட்டு திட்டத்திற்காக பெற்ற கடன்களை செலுத்த முடியாத நிலையில் பல போராட்டங்களையும் சவால்களையும் வீட்டுத்திட்ட பயனாளிகள் அனுபவித்து வருகின்றனர்.

| பொருட்கள் | விலை(2018,2019 | மொத்த செலவு(2019) | தற்போதைய விலை | மொத்த செலவு(2022) |
|---|---|---|---|---|
| சீமெந்து | 975.00 | 975*170=164750.00 | 3200.00 | 3200*170=544000.00 |
| கம்பி | 350.00 | 350*40=14000.00 | 1600.00 | 1600*40=64000.00 |
| மணல் | 21000.00 | 21000*5=105000.00 | 50000.00 | 50000*5=250000.00 |
| சல்லிக்கல் | 34000.00 | 34000.00 | 100000.00 | 100000.00 |
| அத்திவாரகல் | 16000.00 | 16000.00 | 50000.00 | 50000.00 |
| கூரை | 175000.00 | 175000.00 | 400000.00 | 400000.00 |
| மொத்தம் | | 508750.00 | | 1408000.00 |

கட்டுமான கூலி மற்றும் போக்குவரத்து ஜன்னல்,கதவு,நிலைகள் தவிர்ந்த செலவுகளே இவை

| 2019 SMATTA SEVANA MODEL VILLAGES(EACH RS.0.750 MILLION | | | | | |
|---|---|---|---|---|---|
| DS DIVISION | NO-MODEL VILLAGES | NO-HOUSE | APPROVED AMOUNT RS.In Mln | PAID AMOUNT | AMOUNT TO BE PAID |
| MANNAR | 55 | 1656 | 1242.000 | 182.987 | 1059.014 |
| NANATTAN | 10 | 216 | 162.000 | 36.430 | 125.570 |
| MUSALI | 05 | 108 | 77.250 | 4.835 | 72.415 |
| MANTHAI WEST | 09 | 216 | 162.000 | 43.650 | 118.350 |
| GRAND TOTAL | 79 | 2191 | 1643.250 | 267.902 | 1375.349 |

| 2018 SMATTA SEVANA MODEL VILLAGES(EACH RS.0.5 MILLION | | | | | |
|---|---|---|---|---|---|
| DS DIVISION | NO-MODEL VILLAGES | NO-HOUSE | APPROVED AMOUNT RS.In Mln | PAID AMOUNT | AMOUNT TO BE PAID |
| MANNAR | 34 | 627 | 313.500 | 250.084 | 73.416 |
| NANATTAN | 13 | 204 | 102.000 | 70.030 | 31.970 |
| GRAND TOTAL | 47 | 831 | 415.500 | 320.114 | 105.386 |

2019 APPROVED AMOUNT 1643.250 million
PAID AMOUNT 267.902 million
AMOUNT TO BE PAID 1375.349 million
NO OF COMPLETED HOUSES -30

2018 APPROVED AMOUNT 415.500 million
PAID AMOUNT 320.114 million
AMOUNT TO BE PAID 105.386 million
NO OF COMPLETED HOUSES-248

மன்னார் பிரதேச செயலக பிரிவில் மாத்திரம் சுமார் 1656 குடும்பங்கள் இந்த வீட்டுத்திட்டத்தினால் க ட னா ளி க ளா க மாறியுள்ளனர். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் 1656 குடும்பங்களுக்கும் 1242 மில்லியன் ரூபாய்கள் கொடுப்பனவாக செலுத்த வேண்டியிருந்தும், இதுவரை 182.987 மில்லியன்கள் மாத்திரமே செலுத்த பட்டிருக்கின்றது.

அதிலும் 684 குடும்பங்கள் அத்திவாரத்தை மாத்திரம் அமைத்து விட்டு அரச கொடுப்பனவுக்கு காத்திருக்கின்றனர். தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தகவலின் பிரகாரம் இதுவரை 28 குடும்பங்கள் மாத்திரமே வீட்டை முழுமையாக கட்டி முடித்துள்ளனர். மிகுதி 1628 குடும்பங்களின் நிலை மழை காலங்களில் கவலைக்கிடமாகவே உள்ளதுடன் பகுதியளவில் மாத்திரம் முடிக்கப்பட்ட வீட்டில் கிடுகை மேய்ந்து தற்காலிகமாக வசித்து வருகின்றனர்.

அதே போன்று நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு பிரதேச செயலகங்களை சேர்ந்த 535 குடும்பங்கள் இந்த வீட்டுத் திட்டத்தால் கடனாளிகளாக்கப்பட்டுள்ளனர்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் 401.25 மில்லியன் ரூபா 535 வீட்டு திட்ட பயனாளிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிலையில் இதுவரை வெறும் 84.915 மில்லியன்கள் பகுதி பகுதியாக மக்களுக்கு பிரித்து வழங்கப்பட்டது டன், 316.335 மில்லியன் ரூபா வீட்டு திட்ட பயனாளிகளுக்கு வழங்க வேண்டிய நிலுவை உள்ளது.

இது ஒருபுறம் இருக்க அதே வீடமைப்பு அதிகார சபை 2018 ஆண்டு மன்னார் மாவட்டத்தில் முதல் கட்டமாக ஆரம்பித்த "செமட்ட செவன" வேலை திட்டத்தில் 5 லட்சம் ரூபாய் வீட்டு திட்டம் ஒன்றை ஆரம்பித்து நடை முறைப்படுத்தியிருந்தது அவ் வீட்டுத்திட்டத்திற்கு கூட முழுமையான முறையின் கொடுப்பனவுகள் வழங்கவில்லை என்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

2018 ஆண்டு முன்னெடுக்கப்பட்ட குறித்த செயற்திட்டத்தில் 831 பயனாளிகள் உள்வாங்கப்பட்ட நிலையில் அவர்களுக்கான வீட்டு திட்டத்திற்காக 415.500 மில்லியன் ஒதுக்கப்பட்ட போதிலும் இதுவரை 310.114 மில்லியன்கள் மாத்திரமே செலுத்தப்பட்டுள்ளது. மேலதிகமாக என்னமும் 105.386 மில்லியன் ரூபா செலுத்தப்பட வேண்டியுள்ளது.

இவ்வாறு 2018 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வீட்டுத்திட்டமே பூரணப் படுத்தப்படாத நிலையிலும் முழுமையான தொகை விடுவிக்கப்படாத நிலையிலும் முன்னாள் வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச தனது சுயநல அரசியல் லாபத்திற்காக பல ஆயிரக்கணக்கான குடும்பங்களையும் பல லட்சக்கணக்கான மக்களையும் கடனாளியாகவும் அதே நேரம் தேசிய வீடமைப்பு அதிகார சபையையும் கடன் சுமைக்குள் தள்ளியுள்ளார்.

2018, 2019 பங்குனி மாதம் ஆரம்பிக்கப்பட்ட குறித்த வீட்டு திட்டத்தின் பயனாளிகள் மூன்று வருடங்கள் கடந்த நிலையில் பல போராட்டங்கள் நடத்தி பல முறை தேசிய வீடமைப்பு அதிகார சபை அலுவலகத்திற்கு சென்று இதுவரை அவர்களுக்கு மூன்று வருடங்களாக ஒரு ரூபாய் கூட கொடுப்பனவு வழங்கப்படவில்லை.





இவ்வாறான நிலையில் இலங்கை அரசாங்கம் தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் மற்றும் குறித்த நிறுவனத்திற்கு பொறுப்பான இன்னால் மற்றும் முன்னால் அமைச்சர்கள் இம் மக்களின் பிரச்சினைகளுக்கு எவ்வாறான நிவாரணத்தை வழங்க போகிறார்கள் என்பது வீட்டு திட்ட பயணாளிகளின் கேள்வியாகும்.

ஒட்டு மொத்தமாக மன்னார் மாவட்டத்தில் உள்ள 3022 குடும்பங்களுக்கு சுமார் 1480.735 மில்லியன் ரூபாய்கள் தேசிய வீடமைப்பு அதிகார சபையினர் செலுத்த வேண்டியுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் மாத்திரம் இல்லாமல் இதே நிலைமை முல்லைத்தீவு, மற்றும் கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் மாவட்டங்களிலும் நிலவி வருகிறது.

இந்த நிலையில் நாட்டில் நிலவி வருகின்ற பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் பிரச்சினைகள் டாலர் தட்டுப்பாடு காரணமாக கடன் சுமையுடனும் கட்டி முடிக்கப்படாத வீடுகளில் வசித்து வரும் இம் மக்களின் கோரிக்கை அரசாங்கத்திற்கு கேட்காமலே போய்விட்டது.

வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் பாராளுமன்றத்தில் குறித்த விடயம் தொடர்பாக கேள்விகள் எழுப்பிய போது வீடமைப்புக்கு பொறுப்பாக இருந்த முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வீட்டுத்திட்ட பயனாளிகள் அனைவருக்கும் பணம் விடுவிக்கப்படும் என பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

ஆனால் அவர் ஆட்சி அதிகாரத்தில் இருந்து தூக்கியெறியப்பட்ட நிலையில் இலங்கை அரசாங்கம் தற்போது சர்வதேச ரீதியான பிரச்சினைகளுக்கும் எரிபொருள் பிரச்சினைக்கும் மாத்திரமே முன்னுரிமை கொடுத்து வருவதுடன் இவ்வாறு கடனாளி ஆக்கப்பட்ட பல ஆயிரக்கணக்கான குடும்பங்களின் கோரிக்கைகளை கிடப்பில் போட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இவ் வீட்டு திட்டமானது நீண்ட நாட்கள் கை விடப்பட்டிருந்த நிலையில் வீட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க தற்போது இந்த நாட்டின் ஜனாதிபதியாக உள்ள நிலையில் நிறுத்தப்பட்ட கொடுப்பனவுகள் ஒரு பகுதியாவது கிடைக்காதா என பல குடும்பங்கள் அன்றாடம் வீடமைப்பு அதிகார சபை அலுவலகங்களுக்கு பயணித்து கொண்டு இருக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் இவர்கள் வீட்டு திட்டங்களை ஆரம்பிக்கும் போது இருந்த பொருட்களின் விலை அப்போதைய நிலையை விட பல மடங்கு அதிகரித்துள்ளது.

அதே நேரம் வீட்டு திட்டத்திற்கு என இவர்கள் வாங்கிய கடன்கள் மற்றும் இவர்கள் அடகு வைத்த நகைகளின் வட்டிகளும் கணிசமாக அதிகரித்திருக்கும் என்பது உண்மையே.

ஆனால் இவர்களுக்கான கொடுப்பனவு கிடைக்கும் போது அரசாங்கத்தினால் இவ்விடயங்கள் கரிசனையில் கொள்ளப்படுமா என்பது கேள்வியே.

எது எவ்வாறு இருப்பினும் கொடுப்பனவு அதிகரிக்க படாவிட்டாலும் ஒதுக்கிய தொகை கலையாவது விரைவில் விடுவிக்க மாட்டாரகளா? என்ற கேள்விகளுடனேயே இம் மக்களின் ஒவ்வொரு நாள் காலையும் விடிகின்றது.

இம் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு அரசாங்கம் செவிசாய்க்குமா என்பதை காலம் தான் தீர்மானிக்க வேண்டும்.

# இலவசங்கள் எனும் மாயையும் தீர்க்க முடியாத தொற்று நோயும்

**- சிவா பரமேஸ்வரன் மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்**




"இலங்கை இன்று சென்றுகொண்டிருக்கும் அதே பாதையில் இந்தியா செல்கிறது என்று கூறுவது தவறு, 2+2 கூட்டச் சிலர் முயல்வதும் தவறு" இது இந்தியாவின் முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகர் கே வி சுப்ரமணியன் அண்மையில் தெரிவித்திருந்த முக்கியமானதொரு கருத்தாகும்.

அந்த கருத்தின் அடிப்படை இலங்கையைப் போன்று இந்தியாவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகுமா, அப்படி ஏற்பட்டால் அதன் தாக்கம் எப்படியிருக்கும் என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும் போதே அவர் அந்த கருத்தைத் தெரிவித்திருந்தார்.

ஒரு நாட்டில் ஏற்படும் பொருளாதார நெருக்கடி, கடுமையான அரசியல் மற்றும் சமூக நெருக்கடிகளுக்கு வழி வகுக்கும் என்பதற்கு கடந்த சில மாதங்களாக இலங்கையில் இடம்பெற்ற நிகழ்வுகள் சாட்சியாக உள்ளன.

இந்தியாவின் முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகர் அளித்த பதிலில் அவர் கூறியதன் பின்னணி என்பது - சுருக்கமாகச் சொன்னால் - இந்தியாவின் பொருளாதார நிலை வலுவாக உள்ளது, அந்நிய செலாவணி கையிருப்பு காத்திரமாக உள்ளது, அதனால் அஞ்ச வேண்டியதில்லை என்பதாகப் புரிந்துகொள்ளலாம். அவர் தெரிவித்த மற்றொரு கருத்தும் ஆழமாக கவனிக்கப்பட வேண்டியது.

"மாநில அரசுகள் தமது நிதியை எப்படி செலவழிக்கிறார்கள் என்பது பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவர்கள் தேவையில்லாத விஷயங்களில் (இலவச மின்சாரம் மற்றும் உணவு) நிதியைச் செலவழித்தால் அவர்களின் பொருளாதார நிலை மோசமடையும். அரசுகள் தமது பிரஜைகளின் நலன்களுக்கு உதவக் கூடிய வகையில் உட்கட்டமைப்பில் நிதியை முதலீடு செய்ய வேண்டும். மேலும் இலவசங்கள் நிறுத்தப்பட வேண்டும், இல்லையென்றால், நொடிப் பொழுதில் அரச கஜானா காலியாகி விடும்".



அந்த உட்கட்டமைப்பு என்று கூறப்படுவது மக்களின் அன்றாட வாழ்க்கை மேம்பட உதவும் வசதிகளான சாலைகள், வேலை வாய்ப்புகள், வீட்டு வசதி என்பதற்கு அப்பாற்பட்டு, அவர் முக்கியமாகச் சுட்டிக்காட்டிய முதலீடுகள் என்பவை கல்விக்கான அடிப்படை கட்டமைப்புகள் - கூடுதல் பாடசாலைகளை நிறுவி அதற்கு ஆசிரியர்களை நியமித்தல், கல்வித் தரத்தை மேம்படுத்த ஆய்வகங்கள் அமைத்தல், தனியார் ஆளுமையிலிருந்து கல்வியை அரசு மீண்டும் கையகப்படுத்தல் போன்றவையும், நகரம் முதல் கிராமங்கள் வரை அனைவருக்கு தட்டுப்பாடின்றி சுத்திகரிக்கப்பட்ட நீரை குழாய் மூலம் இலவசமாக அளிப்பது, சாதாரண காய்ச்சல் தொடக்கம் இதயம், சிறுநீரக கோளாறுகளுக்கு இலவசமாக அரசு மருத்துவமனைகளில் சத்திர சிகிச்சை உட்படச் சிறந்த சிகிச்சையை அளிப்பது, சிறந்த போக்குவரத்து கட்டமைப்பை ஏற்படுத்தி, தரமான பேருந்துகளைப் பயன்படுத்தி மக்களின் பயணங்களை சிரமமின்றி இருக்கச் செய்வது, தொலைத்தொடர்பு வசதிகளை கிராமங்கள், மலைப்பகுதிகள், தொலைதூர பகுதிகள் என்று அனைத்து இடங்களிலும் தரமான மற்றும் வேகமான வகையில் இருக்கும்படியாகச் செய்வது போன்றவையே அடிப்படை கட்டமைப்பு வசதிகள் என்று இந்தியாவின் முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகர்0 கே வி சுப்ரமணியன் வலியுறுத்தியுள்ளார். ஆகவே அரசுகள் இலவசங்களே மக்கள் நலனை முன்னெடுக்கும் என்ற தவறான புரிதல் இருக்கக் கூடாது என்று அவர் பதவிக் காலத்தில் அழுத்தமாகக் கூறிவந்தார்.




ஆனால், இந்தியாவில் அனைத்து அரசியல் கட்சிகளும் இலவசங்களை அள்ளி வீசுவதே மக்கள் நலன் என்பதை தவறாகப் புரிந்துகொண்டுள்ளன. வாக்குவங்கி அரசியலை மையப்படுத்தி, இலவசங்களைத் தேர்தல் வாக்குறுதிகளாக அளித்து அதை ஒரு அரசியல் உத்தியாகவே கட்சிகள் கையாள வழி வகுத்தது தமிழ்நாடு தான் என்று அரசியல் மற்றும் பொருளாதார பகுப்பாய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தமிழ்நாட்டில் காங்கிரஸ் கட்சியை வீழ்த்தி ஆட்சி அதிகாரத்திற்கு வந்த திமுக தான் இலவச கலாசாரத்தை அறிமுகப்படுத்தியது என்ற குற்றச்சாட்டு பரவலாக வைக்கப்படுகிறது. முன்னாள் முதல்வர் கருணாநிதி இலவச கண் சிகிச்சை மற்றும் இலவச கண்ணாடி அளித்தது, ஆட்களை அமர வைத்து இழுத்துச் செல்லும் ரிக்ஷாக்களை ஒழித்து அவர்களுக்கு இலவசமாக சைக்கிள் ரிக்ஷா அளித்ததே இதன் தொடக்கம் என்று சிலர் வாதிடுகின்றனர். ஆனால் திமுக தரப்போ அவை ஏழை மக்களின் வாழ்வாதார உயர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்று வலியுறுத்துகின்றன. இப்படியான குற்றச்சாட்டுகள் ஜெயலலிதா மீதும் சுமத்தப்பட்டன. அந்த தலைவர்களுக்குப் பின்னரும் அவர்களது கட்சிகள் அதைத் தொடருகின்றன.

பிறகு தொடர்ச்சியாக வந்த அரசுகள் தமது வாக்குவங்கியை தக்கவைத்துக் கொள்ளவும், அரச நிதியை சுருட்டவும், தேர்தல் காலத்தில் மக்களைப் பிரச்சனைகளிலிருந்து திசை திருப்பவும், இலவசங்கள் என்ற மாய வலையை வீசினர்கள். அப்படி வீசப்பட்ட இலவச வலையில் தொலைக்காட்சிப் பெட்டிகள், மின்விசிறி, மிக்சி, அரவை இயந்திரம், ஆடு மாடு, மாணவர்களுக்கு கணினி, மிதிவண்டி, தையல் இயந்திரம் என்று ஏராளமான பொருட்கள் இருந்தன. இவை மட்டுமின்றி, இலவச மின்சாரம், கடன்களை ரத்து செய்வது முதல் அந்தந்த அரசுகள் தமது சுயலாபத்திற்காக கடந்த 50 ஆண்டுகளாக இந்தியாவில் இந்த அவலத்தை முன்னெடுத்து வருகின்றன.

இலவசங்கள் இந்தியாவின் பொருளாதாரத்தை மழுங்கடிக்கின்றன என்று கூறி இந்திய உச்சநீதிமன்றத்தில் தமிழகத்தைச் சேர்ந்த பாலாஜி சுப்பிரமணியன் என்று வழக்கறிஞர் தொடர்ந்த வழக்கில் 2013 ஆண்டில் வண்ணத் தொலைக்காட்சி பெட்டி போன்ற அரச இலவசங்கள், மாநில அதிகார வரம்பிற்குட்பட்டவை என்று தீர்ப்பளித்திருந்தது.

எனினும் இந்த "இலவசங்கள்" இப்போது மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. இன்று ஆகஸ்ட் 26 ஆம் திகதி ஓய்வு பெறும் இந்திய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என் வி ரமணா, இந்த விஷயம் மூன்று நீதிபதிகள் அடங்கிய சிறப்பு அமர்வு ஒன்றால் விசாரிக்கப்படும் என்று ஒருநாள் முன்னதாக அறிவித்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, திமுக தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞரும் இந்திய நாடாளுமன்றத்தின் மேலவை உறுப்பினருமான வில்சன் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியின் சீற்றத்திற்கும் ஆளானார். இலவசங்களும் அரசின் நல்வாழ்வு நடவடிக்கையின் ஒரு பகுதியே என்று இடையீட்டு மனு தாக்கல் செய்திருந்த திமுக உட்பட பல கட்சிகள் வாதிடுகின்றன.

உச்சநீதிமன்றம் முன்னர் அளித்த தீர்ப்பில், ஒரு கட்சி தேர்தல் சமயத்தில் இலவசங்கள் குறித்த அறிவிப்பை வெளியிடுமாயின், அதற்கான நிதியாதாரங்கள் குறித்தும் விவரமாகத் தெரிவிக்க வேண்டும் என்று கூறியிருந்தது. ஆனால் அரசியல் கட்சிகளோ தீர்ப்பின் அந்த முக்கியமான பகுதியை காற்றில் பறக்கவிட்டன. இந்த இலவசங்கள் தொடர்பில் தமிழ்நாட்டு நிதியமைச்சர் கலாநிதி பழனிவேல் தியாகராஜன் தெரிவித்த சில கருத்துக்களும் சர்ச்சைக்குள்ளாயின. மாநில அரசின் உரிமைகள் மற்றும் அதிகாரங்கள் குறித்து அவர் கூறிய கருத்துக்களும் கடும் எதிர்ப்புகள் எழுந்தன.

அரசின் நலத்திட்டங்கள் எப்படி இலவசம் என்கிற வரையறைக்குள் வரும் எனும் முக்கியமான வாதத்தை அரசியல் கட்சிகள் முன்வைக்கின்றன. இதற்கு ஒரு எடுத்துக்காட்டாக, அவைகளை இலவசமாகக் கருதக் கூடாது அவை விலையில்லாமல் அளிக்கப்படுகின்றன என்று சற்று தலைசுற்ற வைக்கும் விளக்கத்தை ஆட்சியாளர்கள் அளிக்கின்றனர். உதாரணமாக தமிழ்நாட்டில் நலிந்த நிலையிலுள்ளவர்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ளவர்களுக்கு அரசு நியாய விலை கடைகளில் மாதம்தோறும் அளிக்கப்படும் 20 கிலோ அரிசி இலவசம் என்பதற்குப் பதிலாக விலையிலாப் பொருட்கள் எனும் திட்டத்தின் கீழ் அளிக்கப்படுவதாக அரசு கூறுகிறது. ஒரு விளை பொருளை விவசாயிடமிருந்து குறிப்பிட்ட விலைக்கு வாங்கி அதை எப்படி விலையில்லாமல் அளிக்க முடியும், மேலும் அதை இலவசம் என்று கருதக் கூடாது என்பதை புரிந்துகொள்வது சிக்கலான ஒன்று.

காலத்திற்கு ஏற்ற வகையில், கட்சிகள் தமது இலவச அறிவிப்புகளை மேம்படுத்தி வருகின்றன. குறிப்பிட்ட வாக்குவங்கியை மனதில் வைத்து அந்தந்த சூழல்களுக்கு ஏற்ப கவர்ச்சிகரமான திட்டங்கள் அறிவிக்கப்படும், அதுவும் தேர்தல் சமயத்தில். உதாரணமாக அண்மைக் காலத்தில் பெண்களுக்கு இலவச இருசக்கர வாகனம் வாங்க வாகனத்தின் விலையில் 75மூ வரை மானியம் அளிப்பது, கல்லூரி மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி என்று இளைஞர்களைக் கவரும் அறிவிப்புகள், உழைக்கும் மகளிருக்கு மாதம் ஆயிரம் ரூபாய், இலவசமாக எரிவாயு சிலிண்டர்கள் என்று மத்தியதரப் பெண்களை மையப்படுத்திய அறிவிப்புகள், முதியோருக்கு ஓய்வூதிய உயர்வு போன்று அந்த மக்களைக் கவரும் அம்சங்களும் அரசியல் கட்சிகளால் தாம் ஆட்சிக்கு வந்தவுடன் அளிக்கப்படும் என்று அறிவிக்கின்றன. மறுபுறம் மதுபானக் கடைகள் அதிகரிக்கப்பட்டு அதன் மூலம் மக்கள் குடிகாரர்களாக்கப்படுகின்றனர் என்ற கசப்பான உண்மையும் இருக்கிறது.



இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது, இந்த அறிவிப்புகள் அனைத்தும் தேர்தலுக்கான திகதி வெளியான பிறகு, கட்சிகள் வெளியிடும் தேர்தல் அறிக்கையிலேயே கூறப்படும். இந்த இலவச அறிவிப்புகளுக்காகவே அனைத்து கட்சிகளும் காத்திருந்து தமது தேர்தல் அறிக்கையை வெளியிடுவதைத் தாமதப்படுத்தும். இதன் காரணமாக வாக்காளர்கள் அரசியல் கட்சிகளின் அறிக்கையை வாசித்து அதிலுள்ளவற்றை ஆராய்ந்து தமது வாக்கை யாருக்குச் செலுத்துவது என்கிற முடிவை எடுப்பதற்கான நேரம் ஒரு வகையில் திட்டமிடப்பட்டுக் குறைக்கப்படுகிறது.

அதுமட்டுமின்றி, வாக்குவங்கி அரசியல் ஆதிக்கம் செலுத்தும் இந்தியா போன்ற ஒரு நாட்டில், எல்லா கட்சிகளும் இலவசம் என்ற புதை மணலில் சிக்கித் தவிக்கின்றன. வெகுஜன அரசியலிருந்து சற்று மாறுபட்டது என்று முதலில் கருதப்பட்ட ஆம் ஆத்மி கட்சியும் (சாமானிய மக்கள் கட்சி) இலவசங்களை அள்ளி வீசும் அரசியலில் சிக்குண்டு தவிக்கின்றன. இந்தியாவில் தொழில்துறையில் முன்னேறிய ஒரு மாநிலமான பஞ்சாபில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளைச் சீர் செய்ய பல கட்சிகள் சிரமப்பட்ட நிலையில், கடந்த தேர்தலில் இலவச மின்சாரம், மாணவர்களுக்கு மிதிவண்டி, மகளிருக்கு இரு சக்கர வாகனம் என்று ஏராளமான கவர்ச்சித் திட்டங்களை அறிவித்து பெரும்பான்மை இடங்களுடன் ஆட்சிக்கு வந்தது "விளக்குமாறு" சின்னத்தைக் கொண்ட ஆம் ஆத்மி கட்சி. ஆனால் இப்போது அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் தவிக்கிறது. ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்களில் அரசின் கடன் சுமை அதிகரித்த வண்ணம் உள்ளன. அம்மாநிலத்தின் மொத்த வருவாயில் 13% இலவச செலவினங்களுக்குச் செல்கின்றன என்று புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

ஏழை எளிய மக்களுக்கு அரசு நலத்திட்டங்களை முன்னெடுத்து அவர்கள் சமூக பொருளாதார ரீதியாக மேம்பட உதவிகள் அவசியம் தேவை. அதை யாரும் மறுக்க முடியாது.



ஆனால் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள் மூலமே அம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றி அவர்கள் மையநீரோட்டத்தில் மேம்பட்ட வாழ்க்கையை வாழ்வதற்கு வீட்டு உபயோகப் பொருட்களை அளிப்பதன் மூலம் செய்ய முடியுமா என்பதே மிகப்பெரிய கேள்வி.

சீனப் பழமொழி ஒன்று இப்போது நினைவிற்கு வருகிறது. "ஒருவருக்கு மீன்களை இலவசமாகக் கொடுப்பதற்குப் பதிலாக அவருக்கு மீன்பிடிக்கக் கற்றுக்கொடுப்பதே சிறந்தது".

இலவசங்கள் ஒரு நாட்டின் பொருளாதாரத்தை மோசமான அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும் என்று ஆணித்தரமாக நம்பி அதைப் பொதுவெளியில் கூறிய கலாநிதி கே வி சுப்ரமணியன் ஆகஸ்ட் 25 அன்று சர்வதேச நாணய நிதியமான ஐ எம் எ.்.ப் அமைப்பில், இந்தியாவிற்கான செயல் இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பது இந்த கட்டுரையை எழுதி முடிக்கும் சமயத்தில் கிடைத்தச் செய்தியாகும்.

# 70வது பிறந்தநாள் கொண்டாட்டம் | தொண்டர்களை சந்தித்தார் விஜயகாந்த்:

## ஆளுநர் தமிழிசை, முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்டோர் வாழ்த்து

தேமுதிக தலைவர் விஜயகாந்த், தனது பிறந்தநாளையொட்டி கட்சித் தலைமை அலுவலகத்தில் தொண்டர்களை சந்தித்தார். அவருக்கு தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன், முதல்வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் கட்சித் தலைவர் விஜயகாந்தின் 70வது பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

இதையொட்டி, தமிழகத்தின் பல்வேறுபகுதிகளில் இருந்து ம் கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் அதிகாலை முதலே தலைமை அலுவலகத்துக்கு வரத் தொடங்கினர்.பகல் 12 மணி அளவில் விஜயகாந்த் வந்தார். அவருக்கு தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அலுவலகத்தின் முகப்பு பகுதியில் அமர்ந்து, தொண்டர்களை பார்த்து கையசைத்த விஜயகாந்த், பின்னர் கைகூப்பி அனைவருக்கும் வணக்கம் தெரிவித்தார்.நிர்வாகிகளும், தொண்டர்களும் நீண்ட வரிசையில் நின்று ஆளுயர மாலை, பூங்கொத்து, பொன்னாடை உள்ளிட்டவற்றை கொடுத்து அவருக்கு வாழ்த்து தெரிவித்தனர்.

சுமார் 10 நிமிடங்களுக்கு தொண்டர்களை சந்தித்த விஜயகாந்த், பின்னர் அவர்களுடன் குழுவாக புகைப்படம் எடுத்துக் கொண்டார்.விஜயகாந்துக்கு வாழ்த்து தெரிவித்து தெலங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், 'வானத்தைப் போல பரந்த மனதுடன் இருப்பதால்




அனைவரின் அன்பையும், மரியாதையையும் பெற்று நெறஞ்ச மனசுடன் வலம் வந்து கொண்டிருக்கும் அண்ணன் விஜயகாந்துக்கு எனது இனிய பிறந்தநாள் வாழ்த்துகள். அவர் பூரண உடல் ஆரோக்கியத்தோடு நீண்ட ஆயுளுடன் மக்கள் பணியாற்ற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்' என தெரிவித்துள்ளார்முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட செய்தியில், 'என் இனிய நண்பரும், தேமுதிக தலைவருமான விஜயகாந்துக்கு 70வது வயது. அவருக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன்.

உடல் நலம் பெற்று துடிப்பான மனிதராக அவர் வலம்வர வேண்டும் என்பதே எனது ஆசை. நலம் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகிறேன்' என கூறியுள்ளார்.முன்னாள் முதல்வர்கள் பழனிசாமி, ஓ.பன்னீர்செல்வம், தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர் சு.திருநாவுக்கரசர், பாமக தலைவர் அன்புமணி, தமாகா தலைவர் ஜி.கே.வாசன், அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன், வி.கே.சசிகலா உள்ளிட்டோரும் விஜயகாந்துக்கு பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.நடிகர் சங்க பொருளாளரான நடிகர் கார்த்தி, நடிகை வடிவுக்கரசி, நடிகர்கள் ரோபோ சங்கர், மீசை ராஜேந்திரன், முத்துக்காளை, போண்டா மணி உள்ளிட்டோர் விஜயகாந்தை சந்தித்து வாழ்த்து தெரிவித்தனர்.

இதுபற்றி நடிகர் கார்த்தி கூறும்போது, "விஜயகாந்த் என்றால் அன்பு. என்னை பார்த்தவுடன் கையை பற்றிக் கொண்டார். நடிகர் சங்கம் சார்பில் அவருக்கு நேரில் வந்து வாழ்த்து தெரிவித்ததில் மகிழ்ச்சி" என்றார்.தேமுதிக பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் கூறியதாவது: கரோனா காலம் தவிர, தனது அனைத்து பிறந்தநாளிலும் விஜயகாந்த் தொண்டர்களை சந்தித்துவருகிறார். தற்போது தொண்டர்களை சந்தித்ததால் அவர் மிகவும்மகிழ்ச்சியாக இருக்கிறார். எங்கள் கட்சி எழுச்சியுடன்தான் இருக்கிறது. உள்கட்சித் தேர்தல் நடைபெற்று வருகிறது. அது இம்மாதம் முடிந்துவிடும். செயற்குழு, பொதுக்குழு கூட இருக்கிறது. எங்களது பணிகளை தொடர்ந்து செய்வோம்.மக்கள் பிரச்சினைக்கு முதல் ஆளாக நின்று நீதிக்காக போராடுவோம். வரும் நாடாளுமன்றத் தேர்தலில் கட்சியின் செயல்பாடு குறித்து பின்னர் அறிவிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

# தேர்தல் நேரத்து இலவச வழக்கு | நீதிபதி சந்திரசூட் தலைமையில் 3 நீதிபதி அமர்வுக்கு மாற்றம் தலைமை நீதிபதி அமர்வு உத்தரவு



தேர்தல் நேரத்து இலவசங்களைத் தடை செய்யக் கோரி தொடரப்பட்ட வழக்கை விரிவாக விவாதிக்க வேண்டும் என்பதால் நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான 3 நீதிபதிகள் அமர்வுக்கு மாற்றுகிறோம் என உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா தலைமையிலான அமர்வு உத்தரவிட்டுள்ளது.தேர்தல் நேரத்தில் அரசியல் கட்சிகள் இலவசங்களை அறிவிக்க தடை விதிக்கக் கோரி பாஜக வழக்கறிஞர் அஸ்வினி உபாத்யாய், உச்ச நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு, தலைமை நீதிபதி என்.வி.ரமணா தலைமையிலான அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, ''தேர்தல் நேரத்து இலவசங்கள் தொடர்பான விவகாரங்களை ஆராய்ந்து அறிக்கை அளிக்க ஆணையமோ அல்லது குழுவோ அமைப்பதாக உச்ச நீதிமன்றம் முடிவு செய்தால், முன்னாள் நீதிபதி ஆர்.எம்.லோதா தலைமையில் அமைக்க வேண்டும்'' என வழக்கறிஞர்கள் கோரிக்கை விடுத் தனர்.அதற்கு தலைமை நீதிபதி, ''தேர்தல் நேரத்தில் அறிவிக்கப்படும் இலவசங்கள் மட்டுமின்றி, தேர்தலுக்குப் பிறகு அறிவிக்கப்படும் இலவச அறிவிப்புகள் குறித்தும் கருத்தில் கொள்ள வேண்டும்'' என்றார்.அப்போது மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி, ''தேர்தலுக்கு முன்பாக அறிவிக்கப்படும் இலவச விவகாரங்களில் நீதிமன்றம் தலையிடுவதில் எந்தக் குழப்பமும் வராது.

ஆனால் தேர்தலுக்குப் பிறகு அரசு அமைந்த பின்னர் அறிவிக்கப்படும் இலவசம் மற்றும் நலத்திட்டங்கள் தொடர்பான விவகாரங்களில் நீதிமன்றம் தலையிடுவது என்பது சிக்கலான விவகாரம் மட்டுமல்ல. அது அபாயகரமானதும் கூட'' என்றார்.மூத்த வழக்கறிஞர் கபில் சிபல், ''தேர்தல் நேர இலவசங்களை ஆய்வு செய்ய ஆணையம் அல்லது குழு அமைத்தாலும் அதையும் அரசியல் கட்சியினர் எதிர்ப்பர். இந்த விவகாரத்தில் ஒரு முடிவு எட்ட ஆழமான நீண்ட விவாதம் தேவை'' என்றார்.

பல்வேறு மாநிலங்கள் எதிர்ப்புஅப்போது தலைமை நீதிபதி, ''இலவசங்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக குழு அமைக்க ஏற்கெனவே பல்வேறு மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றன. இதுபோன்ற இலவச அறிவிப்புகள் பொருளாதாரத்தை கடுமையாகப் பாதிக்கும் என்பதால், இது ஒரு தீவிரமான விவகாரம். ஏனெனில், இன்று எதிர்க்கட்சியாக இருப்பவர்கள் நாளைக்கு ஆட்சிக்கு வரலாம்.

அவ்வாறு வருபவர்கள் இலவசங்களையும் நிர்வகிக்க வேண்டும்.பொருளாதாரத்தை அழிக்கக் கூடிய இலவச அறிவிப்புகள் கண்டிப்பாக கவனிக்கப்பட வேண்டும். எனவே இதுதொடர்பாக ஆய்வு செய்யும் விவகாரத்தில் மத்திய அரசு ஒரு குழுவை அமைக்கலாம். அல்லது அனைத்துக்கட்சிக் கூட்டம் நடத்தி ஒரு முடிவை எட்டலாம்'' என யோசனை தெரிவித்தார்.மேலும், ''ஆடம்பர இலவச அறிவிப்புகள் என்பது ஒரு தீவிர பிரச்சினை. இந்த விவகாரத்தில் ஒரு தீர்வு வர வேண்டும் என்பதே எங்களது விருப்பம்'' என்றார்.மத்திய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, ''இலவச அறிவிப்புகளை சில அரசியல் கட்சிகள் அடிப்படை உரிமை எனக்கோருகின்றன. இலவச அறிவிப்புகள் பொருளாதார ரீதியாக கடும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இலவசம் என்ற ஒரு அறிவிப்பைவைத்தே அரசியல் கட்சிகள் ஆட்சியைப் பிடிக்க முற்படுகின்றன'' என்றார்.

அனைத்து தரப்பு கருத்துகளையும் கேட்ட தலைமை நீதிபதி அமர்வு,''இதுதொடர்பாக விரிவாக விவாதித்து முடிவு செய்ய வேண்டியது அவசியம். எனவே இந்த வழக்கை டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான 3 நீதிபதிகள் அடங்கிய அமர்வுக்கு மாற்றுகிறோம்'' என உத்தரவிட்டுள்ளனர்.

# "ஒன்றை அழித்து மற்றொன்றைக் கொண்டு வருவதை ஏற்க முடியாது" பரந்தூரில் அன்புமணி திட்டவட்டம்



"ஒருபக்கம் வளர்ச்சி, மற்றொரு பக்கம் விவசாயம், வேளாண்மை, சுற்றுச்சூழல் இரண்டையுமே சமமாக எடுத்துச் செல்ல வேண்டும். ஒன்றை அழித்துதான் இன்னொன்றை நான் கொண்டு வருவேன் என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது" என்று பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டம் பரந்தூரில் விமான நிலையம் அமைப்பது தொடர்பாக கிராம மக்களிடம் கருத்துக் கேட்புக் கூட்டம் பாமக சார்பில் இன்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் பேசியது: "இது எந்த அடிப்படையில் இந்த இடத்தை தேர்வு செய்தார்கள் என்று எங்களுக்கும் தெரியாது. வெறும் அறிவிப்பு தான் வந்திருக்கிறது. இதுதொடர்பான நுட்பங்கள் இன்னும் எங்களுக்கு தெரியவில்லை.எந்தெந்த வழியில் எப்படி விமான நிலையம் அமைக்கப்படவுள்ளது, நீர்நிலைகளை என்ன செய்ய போகின்றனர், ஏரி குளங்களை என்ன செய்ய போகின்றனர் என்று தெரியவில்லை.

மன்னர் காலத்தில் ஏரிகளை வெட்டினார்கள். அதனால்தான் காஞ்சிபுரமே ஏரிகளின் மாவட்டம். நமக்கு வளர்ச்சி தேவை. வளர்ச்சி என்பது ஒரு நவீன வளர்ச்சி.இந்த நவீன வளர்ச்சிக்குக் கட்டுமானங்கள் தேவை. அதே நேரத்தில் ஒன்றை அழித்து இன்னொன்று தேவையில்லை. ஒருபக்கம் வளர்ச்சி, மற்றொரு பக்கம் விவசாயம், வேளாண்மை, சுற்றுச்சூழல் இரண்டையுமே சமமாக எடுத்துச் செல்ல வேண்டும்.

ஒன்றை அழித்துதான் இன்னொன்றை நான் கொண்டு வருவேன் என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. இரண்டுமே சமமாக இருக்க வேண்டும்" என்று அவர் கூறினார்.

# இலங்கையில் சர்வாதிகார சனாதிபதிக்குப் பதிலாக ஒரு கொடுங்கோலன் நியமனம்!

— பேராசிரியர் சுனில் ஜே. விமலவன்ச

(பகுதி 24: இலங்கை — தலைவலியைக் குணப்படுத்த தலையணைகளை மாற்றுதல்: சர்வாதிகாரி சனாதிபதிக்குப் பதிலாக இலங்கையில் ஒரு கொடுங்கோலன் நியமிக்கப்பட்டார்.)

பல ஆண்டுகளாக எண்பித்துக் காட்டியது போல், தற்போதைய அரசியல்வாதிகளுக்கு, வாக்காளர்கள் மற்றும் நாட்டின் நலனில் அக்கறை இல்லை. எவரும் நாட்டை முதன்மைப் படுத்துவதாகத் தெரியவில்லை. சரியான திட்டமிடல் மற்றும் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும், அதற்கு ஆதரவான சட்டத்தைக் கொண்டு வருவதற்கும் பதிலாக, இளைஞர்கள் மற்றும் வயதான அரசியல்வாதிகள் திட்டமிட்ட முறையில் இன மற்றும் மதப் பிளவுகளையும் குழுக்களுக்குள் விரோதங்களையும் சுயலாபத்திற்காக திசைதிருப்பும் தந்திரோபாயங்களாக ஊக்குவித்தார்கள்.

ஒரு பொருள்பொதிந்த மற்றும் நிலையான அமைப்பு மாற்றத்திற்கான ஒரே வழி பெரியளவிலான அரசியல் மற்றும் சமூக மாற்றங்கள் ஆகும். இதைத் தொடர்ந்து புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தி, நாட்டை நியாயமாக ஆள 12 அமைச்சர்கள் உட்பட 60 அமைச்சர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட முற்றிலும் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டு வர வேண்டும். அரசியல் அமைப்பில் அவர்களில் எவரேனும் திறமையற்றவர்களாகவோ அல்லது அழிவுகரமானவர்களாகவோ இருந்தால், அல்லது ஊழல்வாதிகளாகக் காணப்பட்டால் அவர்களைத் திருப்பி அழைக்கும் அதிகாரம் (மக்களுக்கு) வழங்கப்பட வேண்டும். நீதித்துறையை அரசியல்வாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்து முற்றிலுமாக விடுவிக்கப்பட வேண்டும்.



படுமோசமாகத் தோல்வியுற்ற ஜேஆர் ஜெயவர்த்தனா அவர்களின் 1977 அரசியலமைப்பைத் திருத்தங்களுடன் இணைப்பது நாட்டுக்கு நன்மை பயக்காது. அதே நேரம், ஊழல் அரசியல்வாதிகளிடமிருந்து அரசியலமைப்பிற்கு முரணான உத்தரவுகளைப் பெறுவதை காவல்துறையும் இராணுவமும் நிறுத்த வேண்டும். அதற்கான நேரம் இது. சட்டவிரோதமாகக் கைது செய்தல் மற்றும் குற்றச்சாட்டுக்களைச் சோடித்தல், எதிர்ப்பாளர்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபடுதல் மற்றும் மக்களுக்குத் தீங்கு விளைவித்தல் ஆகியவை அடங்கும். அவ்வாறு செய்வது அரச ஆதரவு பயங்கரவாதம் ஆகும், அது சட்டப்படி தண்டனைக்குரியது.

திருத்தங்கள் மூலம் பொறுப்புக்கூறல் மற்றும் நீதித்துறையின் சுதந்திரத்தை நீக்குதல்.

அண்மைய அரசியலமைப்புத் திருத்தங்களில் மிகவும் கசப்பான விடயங்களில் ஒன்று நீதித்துறையின் அதிகாரத்தை நீக்கி நிறைவேற்று சனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டதாகும். இன்று அரசியல்வாதிகள் நீதித்துறையை முடக்கி, நாட்டில் அழிவுகளை ஏற்படுத்த வழிகோலியுள்ளனர். அரசியல்வாதிகள், சனநாயகத்தின் முக்கிய அம்சத்தை அகற்றியுள்ளது: நீதித்துறையை சட்டமன்றம் மற்றும் நிறைவேற்றுத் துறைகளில் இருந்து பிரிக்கத் தவறிவிட்டது.

**The independence of the judiciary was systematically taken away via recent constitutional amendments. With the enacting of the scoundrel 20th amendment, justice/judiciary, law and order, and accountability virtually disappeared from Sri Lanka—turning into a lawless society.** அண்மைக் காலத்தில் அரசியலமைப்பில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள் மூலம் நீதித்துறையின் சுதந்திரம் திட்டமிட்ட முறையில் பறிக்கப்பட்டது. அயோக்கியத்தனமான 20 ஆவது திருத்தச் சட்டம் நிறைவேற்றப் பட்டதன் மூலம், நீதி/நீதித்துறை, சட்டம் மற்றும் ஒழுங்கு மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவை இலங்கையில் இருந்து கிட்டத்தட்ட மறைந்து - சட்டமற்ற சமூகமாக மாற்றியுள்ளது.

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சி துன்புறுத்தப்பட்ட அரசியலமைப்புத் திருத்தங்கள், விளைவுகளைப் பற்றி அஞ்சாமல் தேசிய வளங்களை (ஒருவேளை, அதிட்டப் பகிர்வு) கொள்ளையடிப்பதற்கு நிறைவேற்று சனாதிபதிகள் மற்றும் அமைச்சர்களுக்கு ஒரு சரியான அமைப்பை உருவாக்கியது. தவறான தகவல், சுயநல சனாதிபதிகள் நேர்மையற்ற ஆலோசகர்கள், அதிகாரிகள் மற்றும் வணிகர்களால் ஏமாற்றப்பட்டனர்: சிறிலங்கா ஒட்டாண்டி ஆவதற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

இருபதாவது திருத்தத்திற்குப் பின்னர், பொதுமக்களின் அவலங்கள் அதிகரித்தன. 20 ஏ ஆவது நீதித்துறை உட்பட, சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர சட்டப்பூர்வ அதிகாரம் கொண்ட அரசாங்கத்தின் சட்டமன்ற மற்றும் நிர்வாகக் கிளைகளை மேற்பார்வையிடும் அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களையும் அகற்றுவதற்காக வேண்டுமென்றே வடிவமைக்கப்பட்டுள்ளது. அரசியல்வாதிகள் அரசியலமைப்பு சபைக்குள் ஊடுருவி, அரசியல்வாதிகள் மற்றும் மூத்த நிர்வாகிகளுக்கு இலவச அனுமதிச் சீட்டுக்களை வழங்கி, பொருளாளர் மற்றும் தேசிய சொத்துக்களைக் கொள்ளையடிக்க வாய்ப்பளித்தனர். இந்த முறைகேடுகளால், சராசரி மனிதர்கள் இப்போது பொருட்கள் மற்றும் சேவைகள் மற்றும் பொருட்களின் விலைகளுக்கு மிக அதிக விலை கொடுத்து உணவு மற்றும் மருந்து பற்றாக்குறையை ஏற்படுத்துகின்றனர். அதன் விளைவு மக்களின் துன்பம் அதிகரித்துள்ளது.

அரசியல்வாதிகளின் ஒழுக்கக்கேடான நடத்தை இப்போதெல்லாம், நடைமுறையில் அதிக பணம் உள்ள எவரும் நாடாளுமன்ற உறுப்பினராகலாம். அரசிதழின் அறிக்கையின்படி, நாடாளுமன்றத்தில் போதைப்பொருள் வியாபாரிகள், கொலைகாரர்கள், குற்றவாளிகள் எனத் தண்டனை பெற்றவர்கள் உள்ளனர். முன்னணி அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் சில சமயங்களில் ஒரு பழைய ஆனால் விலையுயர்ந்த வட்டரங்கில் **(circus)** வரும் கோமாளிகளைப் போலச் செயல்பட்டனர் - சட்டத்தை மீறுகிறார்கள். மற்ற நேரங்களில், நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தைத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான தொலைநாடகமாக மாற்றினர் - பொது பொழுதுபோக்கு. ஒரு எடுத்துக்காட்டு 2018 இல் அரசியல் நெருக்கடியின் போது அவர்கள் குண்டர்கள் போல் பகுத்தறிவற்ற முறையில் நடந்து கொண்டு பொதுச் சொத்துக்களை தண்டனைக்குப் பயமின்றி அழித்தார்கள். இந்த அரசியல் குண்டர்கள் யாரும் வன்முறையில் ஈடுபட்டதற்காகவும், பொதுச் சொத்துக்களை அழித்ததற்காகவும் ஏன் நீதியின் முன் நிறுத்தப்படவில்லை என்பதை பொதுமக்கள் அறிய விரும்புகிறார்கள். ஏன் இந்த இரட்டை நிலைகள்?

தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் தேர்ந்தெடுக்கப்படாத நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவருமே நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் குண்டர்களாக மாறி, அரை - பாதுகாப்பின் கீழ் ஒரு திசைதிருப்பலை உருவாக்க அல்லது யாரோ ஏதோவொன்றிலிருந்து கவனத்தை ஈர்க்க தங்கள் அதிகாரங்களை தவறான முறையில் பயன்படுத்துகிறார்கள். நாடாளுமன்றம் பொதுமக்களுக்கு ஒரு பயனற்ற ஆனால் விலையுயர்ந்த விவகாரமாகவும், கேவலமான நடத்தை எடுத்துக்காட்டுக்களை வழங்கும் அழிவுகரமான நிறுவனமாகவும் மாறியுள்ளது: குறிப்பாக குழந்தைகளுக்கு. ஒரு மோசமான எடுத்துக்காட்டு. பயனற்ற மாகாணசபைகளைப் போல, பொது நிதியை முறைகேடாகப் பயன்படுத்தி 'நகைச்சுவை நடிகர்களால்' பொது நிதியை முறைகேடாகப் பயன்படுத்தி 'நகைச்சுவை' நடிகர்களால் இந்த மதிப்பற்ற வட்டரங்கு நடத்தப்படுகிறது.

ஊழல் மன்னர்கள் அரசியல்வாதிகள் மத்தியில் மட்டுமல்ல, அனைத்து அரசு நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களில் உள்ள அதிகாரிகள் மத்தியில் வெட்கப்படத்தக்க வகையில் ஊழல் தலைவிரித்தாடுகிறது. இது நகராட்சிகள், சுங்கத் திணைக்களம், உள்நாட்டு வருவாய்த்துறை , உரிமம் வழங்கும் முகவர்கள், கடவுச்சீட்டு அலுவலகங்கள், பல்கலைக் கழகங்கள் போன்றவற்றில் பரவியுள்ளது. அரசாங்க அதிகாரிகள் எதையாவது வழங்கினாலும் அல்லது மக்களுக்கு ஒப்புதல் தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் ஊழல் உள்ளது - இலஞ்சம் வாங்குபவர்கள் இல்லாத எந்த அரசாங்க அலுவலகமும் இல்லை. மத்திய வங்கிப் பணமுறிவு ஊழல் போன்ற பெரிய ஊழல்களில் குற்றவாளிகள் என்று குற்றம் சாட்டப்பட்டவர்கள், நீதியின் முன் நிறுத்தப்படுவதற்குப் பதிலாக, இப்போது அரசாங்கத்தின் மிக உயர்ந்த பதவிகளுக்குப் பதவி உயர்வு பெற்றுள்ளார்கள். மேலும் பலர் கொண்டு வருப்படுகிறார்கள். இது மிகவும் வேடிக்கையானது.

**LitroGas,** பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, போக்குவரத்துப் பிரிவுகள் (தொடர்வண்டிகள் மற்றும் பேருந்துகள்), ஸ்ரீலங்கன் விமான சேவை, போன்ற பல அரசாங்க நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதற்கும் இதே காரணம்தான்: ஊழல் மற்றும் உறவினர், நண்பர்களுக்குப் பதவிகள் கொடுப்பது. இந்த நிறுவனங்கள் மற்றும் பெருநிறுவனங்கள் அனைத்தும் வருவாய் ஈட்டக்கூடிய திறன் கொண்டவை, ஆனால் அப்படி அவை இன்று இல்லை. திறமையின்மை, அதிகரித்த செலவுகள், நிதியைத் தவறாகப் பயன்படுத்துதல் மற்றும் திருட்டுப் போன்றவற்றால், இவை பாரிய இழப்புகளைப் சந்திக்கின்றன. கணக்கியல், தணிக்கை மற்றும் இலஞ்ச ஆணையம் உள்ளிட்ட மேற்பார்வைகளை அகற்றுவது, விளைவுகள் இல்லாமல் நிதியை திருடுவதற்கான சரியான களத்தை உருவாக்கியுள்ளது.

நிர்வாகக் குழுவால் அரசியலமைப்பிற்கு முரணான நடவடிக்கைகள் தொடர்வது

இதற்கிடையில், முன்னாள் சனாதிபதி சட்டவிரோதமாக கொலைகாரர்கள் மற்றும் குற்றவாளிகளை மன்னித்து விடுதலை செய்ததுடன் அவர்களுக்கு உயர் அரசாங்க பதவிகளையும் வழங்கினார்! அரசாங்கக் குழுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எந்தத் திறனும் அல்லது நம்பகத்தன்மையும் இல்லாத நபர்களை அவர் நியமித்தார், மேலும் சிலரை தூதர்களாகவும், மூத்த தூதரக ஊழியர்களாகவும் வெளிநாடுகளுக்கு அனுப்பினார் - உறவினர், நண்பர்களுக்குப் பதவிகள் கொடுப்பதின் உன்னதமான எடுத்துக்காட்டுக்கள். தற்போதைய சனாதிபதியைப் போன்று தேர்தலில் தோல்வியடைந்தவர்கள், போட்டியிடாதவர்கள் அல்லது "தேசியப் பட்டியலில்" கூட இடம் பெறாதவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களாக நுழைவதற்குத் தற்போதைய ஊழல் அனுமதித்தது. இலங்கையில் மாத்திரமே இவ்வாறான அதீத ஊழல் இடம்பெற்று உலக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் **(Guinness Book of world records)** இடம்பெற்றுள்ளது. இலங்கை அரசியல்வாதிகளின் இந்தத் தொடர் நடவடிக்கைகள் வெட்கக்கேடானது.

நாடாளுமன்றத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் சட்டவிரோத நியமனங்களைத் தடுக்க அனைத்து எதிர்க்கட்சிகளின் தலைவர்களும், நீதித்துறையும் 'தோல்வியடைந்தது': யாரும் அவற்றை எதிர்க்கவில்லை! இதன் விளைவாக, அவர்களில் சிலரை நா.உறுப்பினர்கள் மட்டுமல்ல, அமைச்சர்கள், பிரதமர்கள் மற்றும் சனாதிபதியாகவும் கூட அனுமதித்தார்கள்! இதன் விளைவாக நாட்டிற்கு எதிர்மறையான முடிவுகள் வெளிப்படையானவை. என்ன ஒரு அபத்தம்! பெரும்பாலான 225 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிந்தே இந்த மோசடி மற்றும் அரசியலமைப்பிற்கு விரோதமான நடவடிக்கைகளுக்கு பங்களித்துள்ளனர். இலங்கையில் மட்டும்தான் இவ்வாறான சூழ்ச்சிகள் நடக்கின்றன.

இலங்கையின் ஒட்டாண்டிநிலைக்கான பாதை ஊழல், மோசமான தீர்ப்புகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கொள்கைகளுடன் இணைந்து, இந்த அமைப்புகள் இலங்கையில் ஒட்டாண்டிநிலைக்கு பாதை அமைத்தன. இரண்டாவது முக்கிய சிக்கல் விதிவிலக்காக அதிக பொதுச் செலவுகள்—1.5 மில்லியன் பொது ஊழியர்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள். நம்பமுடியாத வகையில், 12 ஆண்டு அமைதிக்குப் பிறகும் கூட, தேவையில்லாமல் மிகைப்படுத்தப்பட்ட இராணுவத்தை பராமரித்தது. இந்தக் கட்டுரைத் தொடரின் 9 முதல் 11 வரையிலான பகுதிகள் "செலவுகளைக் குறைப்பதன் முக்கியத்துவம்" என்பதன் கீழ் இந்த நடவடிக்கைகள் விரிவாக விவாதிக்கப்பட்டன. அதிக வேலையில் இருக்கும் ஆயுதப் படைகளின் மனித பலத்தை பாதியாகக் குறைப்பதும் இதில் அடங்கும். இருப்பினும், அரசாங்கம் அவ்வாறு செய்கிறது என்பதற்கான குறிப்புக் கூட இல்லை - நிர்வாகத்தின் அபத்தம்.

கடந்த தசாப்தத்தில், அரசாங்கங்கள் படிப்படியாக இராணுவத்தின் பலத்தை ஆண்டுக்கு 10% குறைத்திருக்க வேண்டும் (முதன்மையாக இயற்கைச் சிதைவுகள் மூலம்) அது குறிப்பிடத்தக்க வகையில் செலவினங்களைக் குறைத்து, ஆண்டு வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையைச் சரிசெய்வதற்கு உதவியிருக்கும், ஆனால் அரசாங்கம் அவ்வாறு செய்யத் தவறிவிட்டது. அடுத்தடுத்து வந்த அரசுகள் தங்கள் செலவுகளைக் குறைக்க எதுவும் செய்யவில்லை.

நடைபாதை கட்டுவதற்கும், அழகுபடுத்துவதற்கும், கட்டிடம் கட்டுவதற்கும், மூத்த இராணுவ அதிகாரிகளின் வீடுகளை பழுதுபார்ப்பதற்கும் (அதாவது, இலவச தொழிலாளர்களாகப் பயன்படுத்துவதற்கு) இராணுவ உழைப்பு மிகவும் ஒறுப்பானது: அது இராணுவத்தின் வேலையல்ல. தற்போதைய மற்றும் முன்னாள் இராணுவத் தலைவர்களுக்கு (பொதுமக்கள் அனுபவிக்காத) எரிபொருள், மின்சாரம் போன்றவற்றுக்கு வழங்கப்படும் தனிப்பட்ட கொடுப்பனவுகள் அனைத்தும் அரசியல்வாதிகள் மற்றும் அரசாங்க நிர்வாகிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து தேவையற்ற சலுகைகளும் உடனடியாக இரத்து செய்யப்பட வேண்டும்.

சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள், எதேச்சதிகார சக்திகளை அல்ல

ஆதாரமற்ற அவசரகால பிரகடனத்தால் வலுவூட்டப்பட்ட சனாதிபதி, எதிர்ப்பாளர்கள் மற்றும் ஆர்வலர்களை தன்னிச்சையாக கைது செய்யத் தள்ளினார். அரசியல் சாசனத்தின்படி, இந்தத் தோல்வியடைந்த, சனநாயகமற்ற அரசுக்கு எதிராக போராட்டம் நடத்த மக்களுக்கு 100% உரிமை உள்ளது. தெளிவாகத் தெரியவில்லை என்றாலும், சட்டவிரோதக் கைதுகளை திருப்திப்படுத்தவும், நேர்மையற்ற அரசியல்வாதிகள் சிலரின் உத்தரவை நிறைவேற்றவும், தங்கள் உயர் அதிகாரிகள் மூலம் அவர்களுக்கு அனுப்பப்பட்ட உத்தரவுகளை நிறைவேற்றவும், போராட்டக்காரர்களுக்கு எதிராக காவல்துறை குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாகத் தெரிகிறது.

சனாதிபதியை திருப்திப்படுத்துவதற்காக இராணுவம் அரசியலமைப்பிற்கு முரணான இந்த சட்டவிரோத நடவடிக்கைக்கு உதவுவதாக சாட்சியங்கள் தெரிவிக்கின்றன. சட்ட விரோதமாக கைது செய்யப்பட்ட அனைத்து அரசியல் கைதிகளையும் மற்றும் ஏனையோரையும் நிபந்தனையின்றி சனாதிபதி விடுவிக்க வேண்டும். இராணுவ புலனாய்வு மற்றும் பிற மனித உரிமை மீறல்களைப் பயன்படுத்தி மிரட்டாமல் கருத்துச் சுதந்திரத்தை அனுமதிக்க வேண்டும். ( ஆங்கிலத்தில் வெளிவந்த இந்தக் கட்டுரை **Colombo Telegraph** இணையதளத்தில் **(https://www.colombotelegraph.com/index.php/the-despot-president-was-replaced-by-a-tyrant-in-sri-lanka/)** வெளிவந்தது.
மொழிமாற்றம் **கனடா நக்கீரன்**)

# 10 Special Women in Toronto Were Honored, In Celebration of Her Majesty Queen Elizabeth II, Platinum Jubilee

# கனடா ரொறன்ரோவில் மேன்மை தங்கிய இங்கிலாந்து மகாராணியின் 70வது ஆண்டு சேவையை முன்னிட்டு பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற 10 விசேட பெண்மணிகள்

10 Special Women in Toronto were honored in an event, in celebration of Her Majesty Queen Elizabeth II, Platinum Jubilee, hosted by Mr. Ganesan Sugumar - President & CEO Sugshe Group of Companies.

These 10 Special Women were also nominated by Mr. Ganesan Sugumar, in order to honour their dedicated Community Services and outstanding contributions.

This is a very graceful event and took place, Monday, August 15th, 2022 from 5:30-7:30 PM, at The Brighton Convention & Event Centre located at 2155 McNicoll Avenue, Toronto.

Canada Uthayan congratulates the 10 Award Winning Special Women.

---









கனடாவில் வெற்றிகரமான வர்த்தக நிறுவனங்களை நடத்திவரும் Sugshe Group of Companies நிறுவனத்தின் அதிபர் திரு. கணேசன் சுகுமார் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு 2155 McNicoll Avenue, Toronto என்னும் விலாசத்தில் அமைந்துள்ள The Brighton Convention & Event Centre விழா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த பதக்கங்கள் மற்றும் விருதுகளை வழங்கும் சிபார்சை செய்தவரும் திரு. கணேசன் சுகுமார் அவர்களாவர்.

அன்றைய தினம் கௌரவிக்கப்பெற்ற 10 பெண்மணிகளின் பெயர்கள் பின்வருமாறு:

Mrs Jeyanthy Vijayakumaran.
Mrs. Meenadsiamma Thiyagarasakkurukkal
Mrs. Sanjula Kulaveerasingam.
Mrs. Pathmalosani Logendralingam
Mrs. Anu Srivatsa
Mrs. Nirothini Pararajasingam
Mrs. Marlenna RELLIN
Mrs. Joanne Linton
Mrs. Sharon Swenson
Mrs. Priatharshani Sivananthan























கனடா ரொறன்ரோ மாநகரில் மேன்மை தங்கிய இங்கிலாந்து மகாராணியின் 70வது ஆண்டு சேவையை முன்னிட்டு பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பெற்ற 10 விசேட பெண்மணிகளுக்கு விசேட விருதுகள் மற்றும் பதக்கம் ஆகியன வழங்கப்பெற்றன.

அன்று நடைபெற்ற பதக்கம் அணிவிப்பு வைபவத்தையும் விருது வழங்கல் வைபவத்தையும் கண்டு களிக்க அழைக்கப்பட்ட விருந்தினர்களும் வருகை தந்திருந்தனர்.

நிகழ்ச்சிகளை திரு. குலா செல்லத்துரை மற்றும் திரு. கணேஸ் ஆகி-யோர் தொகுத்து வழங்கினர். விழா ஏற்பாட்டாளர் கணேசன் சுகுமார் அவர்களும் சிறப்புரையாற்றினார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மரிய மின்னா மற்றும் மாகாணப் பாராளுமன்ற உறுப்பினர் சூ வொங் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் Jean Yip, from Scarborough - Agincourt ஆகியோரும் உரையாற்றினார்கள்.

- LJI Journalist Ganesh

# ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்–ரொறன்ரோ

## SRI VARASITHTHI VINAAYAGAR HINDU TEMPLE OF TORONTO

3025 Kennedy Road, Unit #10, Scarborough, ON. M1V 1S3 (Kennedy & Finch)

## விநாயகர் சதுர்த்தி (ஆவணிச் சதுர்த்தி) 30.08.2022 செவ்வாய்க்கிழமை

**"விநாயகர் சதுர்த்தி" என்று அழைக்கப்படும் ஆவணிச் சதுர்த்தி தினத்தைமுன்னிட்டு காலையும், மாலையும் உபயகாரர்கள், அடியார்களின் பிரார்த்தனைகள் யாவும் நிறைவேற பாற்குட அபிஷேகங்கள், சங்காபிஷேகங்கள், விஷேட பூஜைகள் நடைபெறும். காலை உற்சவத்தில் விநாயகப்பெருமான் வீதிவலம் வரும் அருட்காட்சியும், மாலை உற்சவத்தில் விநாயகப்பெருமான் அழகிய இந்திரரதத்தில் வீதிவலம்வந்து அடியார்களுக்கு அருள்புரியும் காட்சியும் நடைபெறும்.**

### காலை

**6:00 மணிக்கு** காலைப்பூஜை.
**6:30 மணிக்கு** கும்பபூஜை, 108 வலம்புரிச் சங்குகளினால் அஷ்டோத்தர கலச சங்காபிஷேகம்
**7:30 மணிக்கு** பால்குட அபிஷேக அடியார்களுக்குரிய சங்கற்பம்.
**10:00 மணிக்கு** விஷேடபூஜை, தொடர்ந்து வசந்தமண்டபபூஜை, விநாயகப் பெருமான் வீதியுலா.

### மாலை

**3:00 மணிக்கு** கும்பபூஜை, 108 வலம்புரிச் சங்குகளினால் அஷ்டோத்தர கலச சங்காபிஷேகம்
**4:00 மணிக்கு** பால்குட அபிஷேக அடியார்களுக்குரிய சங்கற்பம்.
**6:00 மணிக்கு** விஷேட சாயரட்சைப் பூஜை.
**7:00 மணிக்கு** வசந்தமண்டபபூஜை, அழகிய இந்திரரதத்தில் வீதிவலம்.

**ஆவணிச் சதுர்த்தி தினத்தில் காலை, மாலை பால்குட அபிஷேகம், விஷேடதிரவிய அபிஷேகம், மோதக பூஜை செய்துகொள்ள விரும்பும் அடியார்கள் ஆலயத்தில் பதிவு செய்து கொள்ளவும்.**

416.291.8500 www.vinaayagar.com /vinaayagar



# ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி

## தமிழ், சமய, பண்ணிசை வகுப்புக்கள் 11.09.2022 ஆரம்பம்

எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, தியானம், நற்பழக்கம், இறைவழிபாடு ஆகியவற்றை எமது குழந்தைகள் அறிந்து அதன்படி ஒழுக வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக் கல்லூரி கடந்த பதினாறு வருடங்களாக சிறப்புற நடைபெற்றுவருகின்றது. தரமான ஆசிரியர்களைக் கொண்டு கல்விகற்பிப்பதுடன், ஆலயத்தில் நடைபெறும் நவராத்திரி, திருவெம்பாவை, சிவராத்திரி, வருடாந்த மஹோற்சவம் போன்றதினங்களில் தேவார திருமுறைகளைப் பண்ணோடு படித்தல், புராணக் கதைகளை நாடகவடிவில் நடித்தல், வாரம்தோறும் ஆலயத்தில் நடைபெறும் பஜனை வழிபாட்டில் கலந்துகொள்ள ஊக்குவிப்பது போன்றவை இக்கல்லூரியின் சிறப்பம்சமாகும்.

**புதிய மாணவர்களுக்குரிய பதிவுகள் நடைபெறுகின்றது.**

**Apply now at www.varasiththi.com**

**தமிழ், சமய, பண்ணிசை வகுப்புக்கள்**
ஞாயிற்றுக்கிழமை காலை 9:30 முதல் 12:45 வரை
ஞாயிற்றுக்கிழமை மதியம் 1:30 முதல் 4:45 வரை

**இந்துக்கல்லூரியில் ஏற்கனவே கல்வி கற்றுவரும் மாணவர்கள் மற்றும் 4 வயது** (Junior Kindergarten) **முதல் 8 வயது (2 ம் வகுப்பு) வரையிலான புதிய மாணவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.**

SRI VARASITHTHI VINAAYAGAR HINDU COLLEGE
3039 KENNEDY ROAD, SCARBOROUGH, ON M1V1S7 CANADA.
416.291.7900, 647.336.3333, 416.291.8500 www.varasiththi.com



தமிழ்நாட்டுக்கு வெளியே அதிக
மக்கள் பங்கேற்கும் மாபெரும் தெருவிழா

SULLIVAN
AUTO GROUP'S

# Tamil Fest
தமிழர் தெரு விழா

POWERED BY
iConnect Mortgages
Dominion Lending Centres

SUPPORTED BY
Canada
Toronto

PROUDLY HOSTED BY
Canadian Tamil Congress
கனடியத் தமிழர் பேரவை
Congrès Tamoul Canadien
"Voice of Tamil Canadians"

## AUGUST
SAT 27
SUN 28

## MARKHAM ROAD
Between
McNicoll & Passmore

FREE ADMISSION

- 250 000 இற்கும் அதிகமானோர் பங்கேற்கும் நிகழ்வு
- தமிழர் கலை, கலாச்சாரம், பண்பாடு, வரலாறு, உணவு மற்றும் வணிகத்தை பறைசாற்றும் நிகழ்வு
- கனடிய, ஈழ மற்றும் இந்திய கலைஞர்கள் பங்கேற்கும் கலை மற்றும் இசை நிகழ்ச்சிகள்
- சிறுவர் விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு நிகழ்வுகள்



TITLE SPONSOR
SULLIVAN AUTO GROUP
Brimell Toyota · Formula Honda · Morningside Nissan

POWERED BY SPONSOR
iConnect Mortgages · Dominion Lending Centres

ZONE SPONSORS
Computek College · HomeLife Higher Standards (HomeLife Future Realty Inc.) · Nava Wilson · Pradon Silks · TD · Vibrant Hospitality Group · Wow! Wing House

MEDIA SPONSORS
ATN · East FM 102.7 · Star Metroland Media

COMMUNITY PARTNER

MARKETING PARTNER
Print Fast.ca

tamilfest.ca tamilfest@canadiantamilcongress.ca 416.240.0078

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL-2022

**Powered by**

MAHAANS
5635 Finch Ave E
Unit# 5, Toronto, ON
M1B 5K9, Canada
+1 (647) 704-4597
பாரம்பரிய முறைப்படி மரசெக்கில் தயாரிக்கப்பட்ட நல்லெண்ணை, தேங்காய் எண்ணை, கடலை எண்ணை இங்கு கிடைக்கும்.

**16 வது ஆண்டில்**

## கனடா உதயன் சர்வதேச விருது விழா

உதயன் விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards 2022

**Presented by**

VIBRANT HOSPITALITY GROUP
விழா சிறப்புற நடைபெற எமது நல்வாழ்த்துக்கள்
Managing and Developing Hospitality Sector for More than 25 Years
Shankar Nallathamby, CHA (Director)
416 270 4343 - shankar@vhgcanada.com

உலகெங்கும் பேசப்படும் இவ்வருட விழாவில் வழங்கப் பெறவுள்ள

### உதயன் விருதுகளின் பட்டியல்


- UTHAYAN LITERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
- UTHAYAN INTER-COMMUNAL RELATIONSHIP AWARD
- UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD
- UTHAYAN LEADERSHIP AWARD
- UTHAYAN YOUTH ICON AWARD
- UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-SRI LANKA
- UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-TAMIL NADU
- UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD-MALAYSIA

**Saturday October 15th, 2022 at 6.00 pm**

விருது வழங்கலும் இராசப்போசன விருந்தும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் இவ்விழா நடைபெறும் மண்டபம்

**Kennedy Convention Centre**
1199 Kennedy Rd, Scarborough, ON M1P 2L2
(Kennedy & Lawrence Inter-section)

**For More Information,**
call 416 732 1608, or 647 762 9512




23

# சமுத்திரத்தில் கரைதல்

2020 பங்குனி 05.

சகோதரியின் குடும்பத்துடன் அவர்களது மூன்று பிள்ளைகளும் அவர்களின் குடும்பமும் சேர்ந்து டொமினிக்கன் ரிபப்லிக் (Dominican Republic) செல்வதற்கு நானும் துணைவியாரும் உடன்பட்டோம்.

கொரோனா வைரஸ் தொற்று உலகம் எல்லாம் சிறுகச் சிறுகப் பரவிக் கொண்டிருந்த நேரம். ஏற்கனவே கொள்வனவு செய்த டிக்கெற் பணம் மீள வழங்கமாட்டார்கள் என்பதாலும் டொமினிக்கன் ரிபப்லிக்கில் அதுவரை கொரோனா தொற்று முற்றாக இல்லை என்பதாலும் அந்தப் பயணத்தை பின்போடாமல் அல்லது இரத்துச் செய்யாமல் நாங்கள் பயணித்தோம்.

இதயமே, இப்படி ஒரு பயணம் போவது கொரோனா காரணமாக ஒருவித பயமும் அதே வேளை இவ்வாறு விடுமுறையில் சேர்ந்து செல்வதால் மகிழ்ச்சியும் சேர பயணித்தோம்.

அழகிய கடற்கரைகள்தான் அங்கு பலரும் விடுமுறைக்கு வருவதற்கான காரணம். தென்னைமரச் சோலைகள் அதன் கீழ் அழகிய தென்னோலையால் வேயப்பட்ட நிழற் குடிசைகள் விருப்பம்போல தின்னவும் குடிக்கவும் உணவுச் சாலைகள்... இராப்பொழுதுகளில் கலை நிகழ்வுகள், கேளிக்கைகள், குழந்தைகளை கவரும் நிகழ்வுகள், கொண்டாட்டங்கள்.

அந்தச் சுற்றாடல்களில் எப்போது வேண்டுமானாலும் ஏறிச்செல்வதற்கு இலவச தொடர் வண்டிகள். நான் கடற்கரைக்குப் போவதை முதல் நாளில் தவிர்த்திருந்தேன். இரண்டாம் நாளில் - பங்குனி 7, மாலை சுமார் 4 மணி. அத்திலாந்திக் சமுத்திரத்தின் அலைகள் புரண்டு எழுந்து எங்களை "வா... வா.." என்று அழைத்தன.

கடலின் நீளக் கரையோரம் நீச்சல் உடைகளில் சனக் குவியல். கடலுக்குள் பாதிப்பேர். சூரியக் கதிர்கள் பட்டுத் தெறித்து அழகு சேர்த்தன. உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து போக நானும் இணைந்து கொண்டேன்.

கடலில் குளிப்பதும் நீந்துவதும் ஆனந்தந்தான். மருமக்களுடன் நானும் கடலில் நீந்தத் தொடங்கினேன். கொஞ்ச தூரம் நீந்தியதும் "ஆழக்கடலுக்குப் போக வேண்டாம்" என்று என் துணைவியாரும் சகோதரியும் எச்சரித்துக் கொண்டிருந்தனர்.

ஆனால் சிறு வயதில் ஊர்க்குளங்கள் எல்லாம் நீச்சலடித்த அந்த இளமைக்காலம் என்மனதில் வந்து கூத்தாடியது. நான் பிறந்து வளர்ந்த வரணிக் கிராமத்தில் மாரிமழைக் காலங்களில் நிரம்பி வழியும் குளங்கள் எல்லாம் எங்களது ஆட்சியில்தான்.

அந்தக் காலங்களில் நீச்சல் போட்டிகளில் முதன்மையாக நான் வருவதுண்டு. முத்துக் குளிப்பதுபோல அதன் ஆழத்தில் நடுக் குண்டு என்று அதை அழைப்போம் - குளத்தின் நடுப்பகுதியில் கீழே சென்று முதலில் சுரி அதைச் சேறு என்றும் அழைப்பர்.

அதனை அள்ளிக் கொண்டு முதலில் மேலே வருபவர் வெற்றியாளர். அதுபோல தண்ணீருக்கு அடியில் அதிக நேரம் மூச்சுப் பிடித்துக் கொண்டிருந்து கடைசியாக வெளியில் வருவது போன்ற பல்வேறு தண்ணீர் விளையாட்டுக்களிலும் வீரனாக வந்த அந்த நினைப்பே என் மனதில் மேலோங்கி நின்றது.

அலைகள் வந்து வந்து அமுக்க மேலெழும்பி நீந்துவது என்பதில் அதிக சக்தி தேவை. இது அந்தக் காலத்தில் ஊர்க் குளத்தில் நீந்திய கதை அல்ல. நான் களைத்த போதும் கொஞ்ச நேரம் அவ்வாறு நீந்திக் கொண்டிருந்தேன்.

*தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்*
*தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே*

என்பது போல நான் என்னை மறந்தேன். என் இதயமே உன்னை மறந்தேன். உன் நோயை மறந்தேன். உனக்கு துணையாய் ICD என்றொரு கருவி பொருத்தப்பட்டிருப்பதையும் மறந்தேன்.

என் துணைவியாரும் சகோதரியும் "ஆழத்துக்குப் போக வேண்டாம்" என்று எச்சரித்துக் கொண்டிருந்தனர். கொஞ்ச நேரத்தில் நான் நன்றாகக் களைத்து விட்டேன். வரும் இராட்சத அலைகளுக்குத் தாக்குப்பிடித்து நீந்துவது என்பது இலகுவல்ல.

1973 - 1976 கொழும்பு பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த காலம். கொழும்பில் வெள்ளவத்தை கடலில் நீந்தியதும் இடையில் களைத்துப் போன நண்பர் ஒருவரை கைத்தாங்கலாக பிடித்து நீந்திக் கரை சேர்த்ததும் என் நினைவுக்கு வந்தன.

இதெல்லாம் அந்தக் காலத்துக் கதை. மனதில் இன்னும் இளந்தாரி என்ற நினைப்பு. தன்னை மறத்தல், தன் நிலையை மறத்தல், சூழலை மறத்தல் ஆபத்தை கொண்டுவரும்.

துணைவியாரும் சகோதரியும் எச்சரித்ததில் 'ஆழத்துக்குப் போக வேண்டாம்' என்பது மட்டும் புத்தியில் ஏறியது. ஆனால் எனது இதயமே, உனது பலவீனமான நிலை அப்போது என் புத்திக்கு எட்டவில்லை. களைப்பை அதிகமாக உணர நானாகவே 'இனிப் போதும்' என்று மிகுந்த களைப்போடு கரைக்கு வந்தேன்.

கடற்கரை மணலில் மேலே ஏறி நடப்பது மிகவும் சிரமமாக இருந்தது. வெகு சிரமப்பட்டு நடந்து மேலே வந்துவிட்டேன். அப்போது இதயமே உன் எச்சரிக்கை வந்தது. இரண்டு மூன்று தடவைகள் தொடர்ச்சியாக இடைவெளி இல்லாமல் அதிவேகத்துடிப்பு.

இதனை Arrhythmia Strom என்று சொல்லுவார்கள். சரி வந்து விடவேண்டும் என்று என்மனம் வேண்டுதல் செய்தது.

இதயமே, ICD மின்னலைகளை (Pacing) அனுப்பிக் கட்டுப்படுத்த முயற்சித்த நிலையில் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. நான் நெஞ்சை இறுகப் பிடித்தபடி நின்றேன். எனக்கு என்ன நடக்கிறது என்பதை மற்றவர்கள் அறியவில்லை. இதயமே நீ முற்று முழுதாகச் செயலிழந்து போனால் மட்டுமே அவர்களுக்குத் தெரியும். ICD முழுமையான மின்னதிர்ச்சியை வழங்கப்போவதை நான் உணர்ந்தேன்.

இதயமே, நான் எதிர்பார்த்தபடி அது நடந்தது. உனக்குள் குண்டு வெடித்தது. நான் அப்பிடியே கீழே சாய்ந்தேன். ஒருகணம் நீ முற்றாக செயலிழந்து மீண்டும் இயங்கத் தொடங்கினாய். அப்பொழுது என்மனைவி உட்பட எல்லோரும் ஓடி வந்து என்ன நடந்தது என்று கேட்டனர்.

நான் அவர்களுக்குப் பதில் சொல்லாமல் கையால் சைகை காட்டி விட்டு மூச்சை ஆழமாக இழுத்து விட்டுக் கொண்டு இருந்தேன்.

இந்த நேரம் எழும்புவதோ அல்லது கதைப்பதோ நல்லதல்ல என்பது எனக்குத் தெரியும். எல்லோரும் மிகுந்த பதட்டத்துடன் அடுத்து என்ன செய்வது என்று பல திசைகளிலும் ஓடினர். எமது இருப்பிடம் கடற்கரையிலிருந்து அதிக தூரம் இல்லை.

ஒரு பதினைந்து நிமிட நடை தூரம். மருமகன் சயந்தன் அங்கு சென்று எனது மருந்துகளைக் கொண்டு வந்தார். மற்ற மருமகன் சபேசன் அருகில் அவசர சிகிச்சைக்கு யாரும் மருத்துவர்கள் இருக்கிறார்களா என்று விசாரித்து வந்தார். மருத்துவர் எமது இடத்துக்கு வரமாட்டார் என்றும் எப்படியாவது நாங்கள் போய்ச் சேர வேண்டும் என்றும் சொன்னார்.

அந்தப் புழுதியில் இருந்து வாகனங்கள் வரும் பாதைக்குப் போவதற்கும் வழியில்லை. சில்லுக் கதிரையும் (Wheel Chair) இல்லை. ஒரு பாதுகாப்பு உத்தியோகத்தர் எனக்கு உதவ வந்தார். என்னைக் கைத்தாங்கலாகப் பிடித்து கொரகொர என்று இழுக்காத குறையாய் - பாவம் அவருக்கு எனது வருத்தம் பற்றிய எந்த விளக்கமும் இல்லை. விரைவில் வாகனம் ஒன்றில் ஏற்றி விடுவதே நோக்கமாக இருந்தது. ஒருமாதிரி வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு எங்கள் விடுதியில் சேர்க்கப்பட்டேன்.

ஆறுதல், ஓய்வு அதைவிட இப்போதைக்கு மருந்தில்லை. என் இதயமே, இப்போது உன்னை இன்னும் அதிகமாக நேசித்தேன். நீ என்னை விட்டுப் போகவில்லை.

நல்ல வேளை! கடலில் நீந்தும்போது இது நடக்கவில்லை. அப்படி நடந்திருந்தால் நான் நீந்தி விளையாடுவதாகவே என்னவர்கள் நினைத்துக் கொண்டிருக்க அத்திலாந்திக் சமுத்திரத்தின் மீன்களுக்கு நான் இரையாக நேர்ந்திருக்கும். என்னைச் சாப்பிட்ட மீன்களில் ICD யை விழுங்கிய மீனுக்கு என்ன நடக்கும்? எல்லோரதும் உல்லாசப் பயணம் கவலைக்குரியதாக முடிந்திருக்கும்.

இப்போது எங்கள் முன் எழுந்த கேள்வி அம்புலன்சுக்கு அறிவித்து வைத்தியசாலைக்குப் போவதா அல்லது இப்படியே ஓய்வாக இருந்து இருக்கும் மருந்துகளையும் சாப்பிட்டு நிலைமையைப் பார்த்து முடிவெடுப்பதா? வைத்தியசாலை அருகில் இல்லை. பல மணித்தியாலங்களுக்கு மேல் எடுக்கும். அங்கு போனாலும் எனக்கு நடந்ததைப் பரிசோதனைகள் மூலம் உறுதிபடுத்தப் போகிறார்கள். வேறெந்த சிகிச்சையும் பெரிதாகச் செய்வதற்கு இல்லை.

கனடாவில் மகளுடன் கதைத்தோம். எடுத்தவுடன் "வைத்திய சாலைக்குப் போவது ஒன்றே நல்லது" என்று அவர் சொன்னார். சாதாரணமாக எந்த மருத்துவர்களும் அதைத்தான் சொல்லுவார்கள். நான் அப்போதைய உடல் நிலையைத் தெளிவாக அவவுக்கு விளங்கப் படுத்தினேன். "இப்போதைய நிலையில் போவது தேவையில்லை. நான் மேற் கொண்டு பிரச்சினைகள் இல்லாமல் இருக்கிறேன்" என்பதை உறுதிப்படுத்தினேன்.

எனது விடுமுறை ஒரு கிழமையாய் அறைக்குள் ஓய்வாக இருப்பதிலேயே முடிந்தது. எனது உறவினர்களின் விடுமுறை பாதிக்கப்படாமல் நான் உயிரோடு இருப்பதில் அவர்களுக்கும் சந்தோசம்.

என் இதயமே, அனைத்துக்கும் உன்னை உடனிருந்து காப்பாற்றும் ICDக்குத்தானே நன்றி சொல்ல வேண்டும். ஒருமாதிரி விடுமுறை நாட்கள் கழிய பங்குனி 12 இல் கனடாவுக்குத் திரும்பினோம். விமானப் பயணத்தில் எனக்கு எதுவும் நடக்கக் கூடாது என்பது எல்லோரதும் பிரார்த்தனையாக இருந்தது. பிரச்சினைகள் இல்லாமல் டொரோண்டோ விமான நிலையத்தில் வந்து இறங்கினோம்.

கொரோனா வைரஸ் தொடர்பான பாதுகாப்புக்களும் கெடுபிடிகளும் அதிகரித்திருந்தன. விமானப்பயணத்தில் வந்ததால் எல்லோரும் 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு எம்மை உட்படுத்திக் கொண்டோம்.

எனது வழமையான இதய மருத்துவர்களிடம் தொடர்பு கொள்ளுவதும் முடியாமல் இருந்தது. ஆனால் இதயமே நீ மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டாய். அதனை அடுத்தடுத்து நடந்த சம்பவங்கள் உறுதிப்படுத்தின.

விடுமுறையில் இருந்து வந்ததன் பின்னர் தனிமைப்படுத்துதலில் கொஞ்ச நாட்கள் கழிந்தன. எங்கும் போக முடியாது. வீட்டில் இருந்து கொண்டே இயங்க வேண்டிய நிலை.

இரண்டு மாதங்கள் இதயமே நீ பொறுமை காத்தாய்.

டொமினிக்கன் குடியரசு - Dominican Republic
*2020 பங்குனி 05*



Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

KANAGAAMBIKAI
PAWN BROKERS





25
வருடங்கள்

உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு

நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

416 269 7198

# ஜீவன் முக்தி 590

*(சென்ற வார தொடர்ச்சி)*

## பூஜை ஒரு ஞான விளையாட்டு


சின்ன வயதில்...

என்னுடைய விளையாட்டு வாழ்க்கை எல்லாமே... தெய்விக்கிரகங்களோடு உறவாடுவதும் அவர்களுக்கு பூஜைகள் செய்வதும்தான்.

அதுதான் என்னுடைய விளையாட்டு. அதுதான் வாழ்க்கையுமாகி இருந்தது.

இதுவரை தமிழ்நாட்டில் இருக்கிற, சிறு பிள்ளைகள் விளையாடுகிற கோலி அடித்தல் குண்டு அடித்தல் பம்பரம் விடுதல் போன்ற விளையாட்டுகளில் எல்லாம் சிறுவயது முதலே ஈடுபட்டது கிடையாது.

அப்போதிலிருந்து என் வாழ்க்கையில் அதற்கு பாகமே ஒதுக்கியது இல்லை. அதனால் அதிகமாக விளையாட்டும் வாழ்க்கையில் நடந்தது இல்லை.



நான் விளையாடியது எல்லாம் இந்த விநாயகரை வைத்தும் முருகரை வைத்தும் சிவனை வைத்தும் தேவியை வைத்தும் செய்கிற பூஜைகள்தான். இதில் விளையாட்டு என்றால் சடங்குகளும் தியானங்களும்தான். அதுதான் விளையாட்டு அதுதான் வாழ்க்கை.

சின்ன வயதில் பெற்றோர் எனக்கு ஒரு பிள்ளையார் வாங்கிக் கொடுத்தார்கள். பிறந்த நாள் பரிசாக அப்பா வாங்கிக் கொடுத்தார். அதுதான் என்னுடைய முதல் விளையாட்டு விக்கிரகம்.

காலையிலிருந்து மாலைவரை அந்தப் பிள்ளையாரை வைத்து விளையாடுவதுதான் என் வாழ்க்கையாக இருந்தது.

அவர் குளிப்பதற்குத் தண்ணீர் ஊற்றி சுத்த சந்தனம் அரைத்து பொட்டு வைத்து சாப்பாடு வைத்து நாம் இந்த உடலுக்கு என்னென்ன செய்வோமோ அத்தனையும் அந்த உடலுக்கும் செய்து பார்ப்பேன்.

இதில் முக்கியமான ஒன்று... அந்த விக்கிரகங்களை நான் வெறும் விக்கிரகங்களாகப் பார்ப்பதில்லை. உயிருள்ள சக்தியாகவே உணர்ந்தேன்.

பிள்ளையார் சிலை என்று சொல்ல மாட்டோம். பிள்ளையார் என்றுதான் சொல்வோம். முருகன் சிலை என்று சொல்வது இல்லை. முருகன் என்றுதான் சொல்வது. சிவலிங்கம் என்றால் சிவன் சிலை என்று சொல்வது இல்லை. சிவன் என்றுதான் சொல்வது. அவ்வாறு உணர்வு ரீதியாகப் பழகியதால் வாழ்க்கையின் பாகமாகவே மாறிவிட்டிருந்தது.

## நேரடியாகக் கடவுளோட பேசலாம்

ஒருநாள் கோவிலில் சமயப்பிரசங்கம் நடந்தது. திருவண்ணாமலை கோவிலில் தொடர்ந்து விழா நடந்துகொண்டே இருக்கும்.

அந்தச் சமயப் பிரசங்கத்துக்குப் போயிருந்தேன். அப்போது பிரசங்கம் செய்த சொற்பொழிவாளர் நம்பியாண்டார் நம்பி என்ற ஒரு பெரிய ஞானியின் கதையைச் சொல்லிக்கொண்டு இருந்தார்.



பூஜை செய்தார். அபிஷேகம் செய்தார் அலங்காரம் செய்தார். இந்த நைவேத்யத்தை வைத்து விட்டு "அப்பா சாப்பிடு" என்று சொல்லி விட்டு அருகிலேயே நின்று கொண்டார்.

விநாயகர் சாப்பிடாமல் சும்மாவே இருந்தார். இவருக்குச் சந்தேகம் "இவரைச் சாப்பிடச் சொன்னால் சாப்பிடவே இல்லையே!" என்று விநாயகரையே உற்றுப்பார்க்கிறார். ஒரு மணி நேரம் ஆயிற்று இரண்டு மணி நேரம் ஆயிற்று பிள்ளையார் சாப்பிடவேயில்லை.

"நான் உள்ளேயே நின்றுகொண்டு இருக்கிறேன் என்று சாப்பிடமாட்டேன் என்கிறாயா? நான் வெளியில் சென்று விடுகிறேன். யாரும் நீ சாப்பிடுவதை பார்க்கமுடியாதபடி திரைச்சீலையால் மூடி விட்டு உட்கார்ந்து கொள்கிறேன்" என்று சொல்லி வெளியில் வந்து உட்கார்ந்து விடுகிறார்.

மேலும் இரண்டு மணி நேரம் கழித்து திரைச் சீலையை நகர்த்திப் பார்த்தாலும் சாப்பாடு அப்படியே இருந்தது. நம்பி யாண்டார் நம்பிக்கு வேக வேகமாக நெஞ்சு படபடக்க ஆரம்பித்தது.

விநாயகரைப் பார்த்துக் கேட்கிறார் "அப்பா நான் வகுப்புக்குப் போக வேண்டும். தாமதமாகிறது. சீக்கிரமாகச் சாப்பிடு" என்று வேண்டுகோள் வைத்தார்.

"ம் ஹூம்..." அப்போதும் அவர் சாப்பிடவில்லை. இவருக்குப் பயம் வந்துவிட்டது. "ஏதோ தவறு செய்துவிட்டேன். அதனால்தான் விநாயகர்கோபித்துக்கொண்டு சாப்பிட மாட்டேன்கிறார்" என்று நினைத்தார்.

சின்ன பிள்ளைகளுக்குக் கோபம் வந்தால் அவர்களால் அந்தக் கோபத்தை சாப்பாட்டில் மட்டும்தான் காட்டத் தெரியும். வயதான பின் இதுபோல் கோபத்தைக் காட்டினால் யாரும் கண்டுகொள்ளமாட்டார்கள்.

"அப்படியா? சாப்பிடவில்லை என்றால் போ! நல்லதாயிற்று மிச்சம்" என்று விட்டுவிடுவார்கள்! பெரியவர்கள் தங்கள் கோபத்தை உணவில் காண்பிப்பதில்லை.

ஆனால் சின்னப் பிள்ளைகளுக்குத் தெரிந்ததெல்லாம் அவர்களுக்கு வாழ்க்கையே உணவுதான். அதனால்தான் ஆனந்தமாக இருந்தால் நிறையச் சாப்பிடுவார்கள். ஆனந்தமாக இல்லை என்றால் சாப்பிடுவதை நிறுத்தி விடுவார்கள். அவ்வளவுதான். அதனால் அதே மனஅமைப்போடுதான் அவர் விநாயகரையும் பார்க்கிறார்.



விநாயகரைப் பார்த்து ஒரு வேளை நாம் ஏதாவது தப்புச் செய்து விட்டோமோ அதுதான் சாப்பிடவில்லையோ என்று "ஓ!" என்று அழ ஆரம்பித்து விட்டார்.

அப்போதும் சாப்பிடவில்லை. உடனே இவர் சொல்கிறார் "அப்பா என்னைச் சும்மா விடமாட்டார்" என பயத்தோடு சொன்னார்.

அந்தப் பையனுக்குத் தெரியாது தினந்தோறும் அப்பா விநாயகருக்கு உணவைக் காண்பித்துவிட்டு அதே வாளியை சாப்பிடாமல் எடுத்துக்கொண்டு வந்து வீட்டில் சாப்பாடாகப் போடுகிறார் என்று.

போனால் நான் வீட்டுக்குச் சென்றால் அப்பா என்னை விடமாட்டார் என்று "ஓ" என்று தேம்பித்தேம்பி அழ ஆரம்பித்தார்.

விநாயகர் அப்போதும் சாப்பிடவில்லை.

உடனே அவர் சொல்கிறார் "நான் என்னவோ தப்புச் செய்துவிட்டேன். அதனால்தான் நீ சாப்பிடவில்லை. ஆனால் அந்தத் தப்புக்குப் பரிகாரம் தேடி நீ சாப்பிடும்வரை உன்னை விடுவதில்லை. நீ சாப்பிடவில்லை என்றால் இங்கேயே இந்தப் படியிலேயே தவம் கிடந்து நானும் பட்டினி கிடந்து சாவேன்" என்று அங்கேயே உட்கார்ந்து விடுகிறார்.





அவ்வளவு உறுதியாகச் சொன்ன பின்னும் பிள்ளையார் சாப்பிடவில்லை.


"அவர்தான் சாப்பிட்டார்" என்று கபடமின்றி சத்தியம் செய்கிறார். இப்படிச் சொன்னவுடனே அப்பாவுக்குப் புரிந்துவிடுகிறது.

கண்ணில் தாரை தாரையாகக் கண்ணீர் ஓட தம்மை மறந்து மகன் என்றும் நினைக்காமல்மகனின் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்குகிறார்.

"நானெல்லாம் நூலகத்தைப் பாதுகாப்பாய்க் கண்காணித்து வைக்கும் ஒரு காப்பாளன் போன்றவன். வருடக்கணக்காக இந்த மந்திரத்தை வைத்திருந்தேன். நீ வாழ்க்கையில் அதை அனுபவமாகப் பார்த்து விட்டாய்" என்று காலில் விழுந்து கதறி அழுதார்.

நம்பியாண்டார்நம்பிக்குப் பிறகுதான் புரிந்தது. "நாம் கொடுத்துத்தான் விநாயகர் சாப்பிட்டிருக்கிறார். இதுவரை அப்பா கொடுத்ததை விநாயகர் சாப்பிட்டதில்லை" என்று.

## முயற்சி செய்யும் மனப்பழக்கம் ஒரு மிகப்பெரும் கொருப்பினை



இந்தக் கதையை சத்சங்கத்தில் கேட்ட உடனே எனக்குள் ஒரே உற்சாகம், ஒரே வேகம். "ஆஹா! இன்றைக்கு நம்முடைய விநாயகரும் சாப்பிட்டாக வேண்டும்." என்று உடனே வேக வேகமாக வீட்டுக்கு வந்தேன்.

சாப்பாட்டை எடுத்து வைத்தேன். பிள்ளையாரிடம் ரொம்ப நேரம் என்னென்னவோ பேசிப் பார்த்தேன் ஒன்றும் நடக்கவில்லை

விநாயகர் அப்படியே உட்கார்ந்திருக்கிறார். சாப்பாடும் அப்படியே இருந்தது.

வீட்டில் எந்தச் சூழ்நிலையில் நாம் வளருகிறோமோ அதுதானே நம்மிடமிருந்தும் வரும். அப்போது வீட்டில் ஒரு வயதான பாட்டி இருந்தார். இருக்கும் வீட்டில், சிறுவயது பிள்ளைகள் எப்பொழுதாவது அடம்பிடிப்பார்கள். குழந்தைகள் யாராவது சாப்பிடவில்லை என்றால், உடனே பாட்டி 'உன்னைக் கிணற்றில் போட்டுவிடுவேன், கிணற்றில் போட்டுவிடுவேன்.' என்று அவர்களைப் பயமுறுத்துவார்.


வீட்டில் நிறைய சின்ன பிள்ளைகள் இருப்போம். இந்தப் பாட்டி நாங்கள் யாராவது சாப்பிடவில்லை என்றால், 'ஏய்!, சரியாகச் சாப்பிடாமல் அடம்பிடித்தால்

"உன்னை கிணற்றில் போட்டுவிடுவேன்" என்று பயமுறுத்துவார்.

இதைப் பார்த்தால் அதே மன அமைப்புதானே நமக்கும் வரும்.

"நானும் உடனே என்ன செய்தேன் விநாயகரே! இப்போது நீ சாப்பிடவில்லை என்றால் உன்னை எடுத்து கிணற்றில் போட்டுவிடுவேன்" என்று மிரட்டினேன். அப்போதும் அவர் அசையவில்லை.

"சரி இனி போட்டுவிடுவது" என்றே முடிவு செய்தேன். முடிவு செய்து பிள்ளையாரைஎடுத்துக்கொண்டு கிணற்றுக்கு அருகில் சென்றுவிட்டேன்.



அதற்குப்பின் என்ன செய்தேன் "ஒருவேளை திடீரென்று விநாயகர் சாப்பிட ஆரம்பித்துவிட்டார் என்றால் என்ன செய்வது? அதனால் முதலில் மிரட்டிப் பார்க்கலாம்" என்று முடிவுசெய்தேன்.

ஒருவேளை அவர் நினைத்துக் கொண்டிருப்பார் "நான் கிணற்றில் நிச்சயம் போட்டுவிட மாட்டேன்" என்று

"போட்டுவிடவும் வேண்டாம். போட மாட்டேன் என்று காட்டிக்கொள்ளவும் வேண்டாம். மிரட்டிப் பார்க்கலாம்" என்று தண்ணீர் சேந்துகிற தோண்டியில் பிள்ளையாரை வைத்துவிட்டேன்.

கிராமங்களில் எல்லாம் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். ஒரு பாத்திரத்தில் கயிறு கட்டி தண்ணீர் சேந்துவார்கள் ராட்டினம் போட்டு அந்தத் தோண்டியில். விநாயகரை வைத்து தண்ணீர் மட்டம்வரை விட்டுவிட்டு "இப்போது சாப்பிட்டுவிடு இப்போது சாப்பிட்டு விட்டால்கூட உன்னை வெளியில் எடுத்து விடுகிறேன். ஆனால் நீ இப்போதும் சாப்பிடாமல் இருந்தால் தண்ணீருககுள் போட்டு விடுவேன்" என்று மிரட்டிக் கொண்டிருந்தேன்.

அப்போதுதான் திடீரென்று நினைவுக்கு வந்தது "அடடா! தோண்டியில் விநாயகரை மட்டும்தானே வைத்தேன். சாப்பாடு இங்கே இருக்கிறதே! எப்படியடா சாப்பிடுவார்" என்று அந்தத் தோண்டியை வெளியில் எடுத்து அந்தச் சாப்பாட்டையும் தோண்டிக்குள்ளேயே வைத்து. அந்தத் தண்ணீர் மட்டத்திலேயே வைத்து வைத்து பயமுறுத்திக் கொண்டிருந்தேன்.

அந்தத் தண்ணீரில் அப்படியேதண்ணீரைத் தொடுவது அப்படியே மேலே எடுத்துவிடுவது தண்ணீரைத் தொடுவது மேலே எடுத்துவிடுவது என்று ஒரு அரைமணி நேரம் அப்படியே செய்து கொண்டிருந்தேன்.

ஒருவேளை சாப்பிட்டிருப்பாரோ என்று தோண்டியை மேலிழுத்துப் பார்த்தால் சாப்பிடவில்லை. சாப்பாடு அப்படியே இருந்தது.

கடைசியில் மனம் கேட்கவில்லை கிணற்றுக்குள் போடவும் மனம் வரவில்லை. "சரி இன்று உன்னை அப்படியே விட்டு விடுகிறேன். நாளை பார்த்துக் கொள்கிறேன்." என்று சொன்னேன்.

ஏனென்றால் எனக்குப் பசி எடுக்கிறது என்று பூஜை அறைக்குள் எடுத்துச் சென்று வைத்துவிட்டு நான் சாப்பிட ஆரம்பித்து விட்டேன்.

மீண்டும் ஒரு இரண்டு நாள் கழித்துத் இதேபோன்று தோண்டியில் எடுத்துவைத்து இன்னொரு முறை மிரட்டிப் பார்த்தேன். அப்போதும் சாப்பிடவில்லை

மூன்றாவது முறை என்ன செய்தேன் நம் வீட்டில் சமைக்கிற சாப்பாடு சரியாக இல்லாததினால்தான் பிள்ளையார் சாப்பிடவில்லை கோயிலில் இருந்து நைவேத்தியம் வாங்கிக்கொண்டு வரலாம் என்று கோவிலில் இருந்தே நைவேத்யம் வாங்கிக்கோண்டு வந்தேன்.

அண்ணாமலை கோயிலில் பிரமாதமாகப் பிரசாதம் செய்வார்கள் அதை பிள்ளையாருக்காக வாங்கிக்கொண்டு வந்தேன். கோயிலில் இதைத்தானே படைக்கிறார்கள்

அதுநாள்வரை நீங்கள் எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னுடைய இந்த எளிமைத்தனத்துடன் பார்ப்பதாலும் சிறுபிள்ளை என்பதினாலும் தினந்தோறும் கோயிலில் எடுத்துச் சென்று வைக்கப்படும் சாப்பாட்டை அந்தத் தெய்வம் சாப்பிட்டு விடுகிறது என்றுதான் நினைத்துக்கொண்டு இருந்தேன்.

படைத்து எடுத்து வந்து விடுகிறார்கள் என்று எனக்குத் தெரியவே தெரியாது. அதனால் "கோவிலில் என்ன நைவேத்தியம் செய்து வைத்தால் அவர் சாப்பிடுகிறாரோஅதே சாப்பாட்டை எடுத்து வந்து வைக்கலாம். அப்போது இங்கேயும் சாப்பிட்டுத்தானே ஆகவேண்டும். பிடிக்கவில்லை என்று சொல்ல முடியாது இல்லையா?! உடனே நான் அதே சமையலைப் பிள்ளையாருக்குத் தரவேண்டும் என்பதற்காகக் கோயிலுக்குச் சென்று வரிசையில் நின்று வாங்கி வந்தேன்.

கோயிலுக்குச் செல்லும்போது எல்லாம் தரையைக் கழுவி விடுவது பெருக்கி விடுவது இதுபோன்ற வேலைகளை எல்லாம் செய்வோம்.

உழவாரப் பணி செய்வோம். நாங்கள் இதற்கென்றே கோவிலுக்குப் போட்டிபோட்டுச் செல்வோம். கோவிலின் மடப்பள்ளியைப் பலமுறை பிள்ளைகள் எல்லாம் ஒன்றுசேர்ந்து சுத்தம் செய்வோம்.

*(தொடரும்...)*

# திருக்குறள் கூறும் கல்வியின் மகிமை

**திருமதி. ஜோதி ஜெயக்குமார் (B.Com, MA)**
**வள்ளுவன்வழி உலக இணையப்பள்ளி - கனடா**
**நிறுவுநர், தமிழ்மொழி, திருக்குறள் ஆசிரியர்**



உலகிலற் பல மொழிகள் தோன்றினாலும் எல்லா மொழிகளும் நிலைத்து நிற்பதில்லை. காலவோட்டத்திற் சில மொழிகள் மறைந்து விடுகின்றன. மொழிக்கலப்பால் மாறியும் விடுகின்றன. ஆனால் மொழிகளுக்குள்ளே மிகத்தொன்மை வாய்ந்த மொழியாகக் கருதப்படும் தமிழ் மொழியானது என்றும் இளமை குன்றாமல், வேற்று மொழிகளின் ஆதிக்கத்தின் மத்தியிலும் தனித்து வாழும் ஒரு ஒப்பற்ற மொழியாகத் தனக்கான தனித்துவங்களோடு விளங்குகிறது. தமிழ் மொழி தாழாமல் வாழ்வதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் எம் மொழியிலும் இல்லாதவாறு எங்கள் மொழியிற் கொட்டிக்கிடக்கும் செவ்விலக்கியச் செல்வங்களே மிகப்பிரதான காரணம் எனலாம். இந்த இலக்கியங்களுட் திருக்குறளுக்கு மிக உன்னத இடமுண்டு.

திருக்குறளானது சாதி, மத பேதமற்ற பொதுமை தழுவிய நூலாகும். "பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்" என்று கூறிய மேன்மை மிகு நூலாகும். தெய்வப்புலவர் தனது 1330 குறள்களிலும் அன்பையும், அறத்தையுமே போதித்துள்ளார். முப்பாலிலும் அறப்போர் நிகழ்த்தியுள்ளார். அதன் வழி வாழ்ந்தும் காட்டி மனிதருட் தெய்வமானார்.

*"கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்...*
*சேரன் தம்பி இசைத்ததும்*
*தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்..."*

என்ற மகாகவி பாரதியார் கவிச்சக்கரவர்த்தி கம்பரை மானிடராகவும், இளங்கோவைப் புலவராகவும், திருவள்ளுவரையே தெய்வமாகவும் கண்டார். இன்னோரன்ன சிறப்புகளைக் கொண்ட திருக்குறளிற் கூறப்படாத விடையங்களே இல்லை. வாழ்வியலின் அத்தனை அம்சங்களும் மிக ஆழமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த வகையிற் திருக்குறள் கூறும் கல்வியின் மகிமைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

எமது வாழ்வில் எத்தனை செல்வங்கள் கொட்டிக்கிடந்தாலும் கல்விச் செல்வமே என்றும் அழியாத செல்வமாகும்.

*"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு*
*மாடல்ல மற்றை யவை"*
*(கல்வி அதிகாரம், குறள் 400)*

என்று திருக்குறளில் நிலம், பணம், வீடு, பொருள், தங்கம் போன்ற அத்தனை செல்வங்களும் அழியும் தன்மை வாய்ந்தவையென்றும் கல்விச் செல்வம் ஒன்றே அழியாத செல்வமென்றும் கூறப்படுகிறது.

*"வெள்ளத்தால் போகாது*
*வெந்தழலால் வேகாது வேந்தராலும்*
*கொள்ளத்தான் முடியாது*
*கொடுத்தாலும் நிறைவொழியக் குறைபடாது*
*கள்ளர்க்கோ மிக அரிது*
*காவலோ மிக எளிது*
*கல்வி என்னும் உள்ளத்தே*
*பொருளிருக்க உலகெல்லாம்*
*பொருள் தேடி உழல்வதென்னே"*

அறிவுச் செல்வத்தை யாராலும், எதனாலும், எப்போதும் அழிக்கமுடியாதென்றும் இப்படி அழிவற்ற கல்வியெனும் பெருமைமிகு செல்வம் இருக்க உலகோர் அழியக்கூடிய வேறு செல்வங்களைத் தேடி அலைவது ஏனோ? என்று விவேக சிந்தாமணியும் கூறுகின்றது.

வாழ்க்கையிற் கல்வியின் அவசியம் மிகப் பெரிது. குடும்பம், சமூகம், தேசம், உலகு என்ற அத்தனை மீதும் நாம் கொண்டுள்ள கடமைகள், பொறுப்புகளை அறியவும், புரிந்து கொள்ளவும், அவற்றை மதிக்கவும், அவை சார்பான திறன்கள், நுட்பங்கள், தகவல்களைப் பெறவும் நாம் கற்கும் கல்வியே துணை நிற்கிறது. கல்வி என்ற சொல்லில் "கல்" என்ற வேர்ச் சொல் "தோண்டுதல்" (கல்லுதல்) என்று பொருள் கொள்ளப்பட்டு, எவ்வளவிற்கு நாம் நல்ல விடையங்களைத் தேடித்தேடிக் கற்கின்றோமோ அவ்வளவிற்கு அறிவு நீர் ஊற்றெடுக்கும். இதனையே.

*"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்*
*கற்றனைத் தூறும் அறிவு"*
*(கல்வி அதிகாரம், குறள் 396)*

மணற்கேணியானது தோண்டத் தோண்ட நீர் தருவது போல, நூல்களைக் கற்கக் கற்க அறிவு பெருகும் என்கிறது திருக்குறள். எனவே புதிய சிந்தனைகளைப் பெறவும், புதிய சிந்தனைகளை ஆராயவும் கல்வியே நமக்கு உதவுகிறது.

உலகிலே அமைதியை உருவாக்கவல்லது கல்வி. கற்ற கல்வியானது உற்ற நேரத்தில் வறுமையையும், ஏனைய துன்பங்களையும் போக்கவல்லது. பகைவர்களாற்கூட அழிக்க முடியாத பாதுகாப்பு அரணாக விளங்குகிறது.

*"அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்*
*உள்ளழிக்க லாக அரண்"*
*(அறிவுடைமை அதிகாரம், குறள் 421)*

என்கிறது திருக்குறள்.

*"இம்மை பயக்குமால் ஈயக்குறைவின்றால்*
*தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்*
*எம்மையுலகத்தும் யாம் காணோம்*
*கல்விபோல் மம்மர் அறுக்கும்மருந்து"*

என்ற நாலடியார் செய்யுளையும் இங்கே ஒப்புநோக்கலாம். கல்வியானது இவ்வுலக இன்பத்தைத் தரவல்லது. கொடுத்தாலும் குறையாதது. நம் புகழைப் பரவச்செய்யவல்ல, என்றுமே அழிவற்ற செல்வமாகும். ஆகவே கல்விபோற் துன்பங்களையும், அறியாமையையும் போக்கவல்ல அருமருந்து இவ்வுலகில் வேறெங்குமே இல்லை.

காழ்ப்புணர்ச்சியை நிக்கவல்லது கல்வி. தீண்டாமை மற்றும் மத பேதங்களைத் தகர்த்து, ஏழை, பணக்காரன் என்ற சமூகப் பாகுபாடுகளை உடைத்தெறியும் தன்மை கல்விக்கு மட்டுமே உண்டு.

இதனைத் திருக்குறள் எவ்வாறு கூறுகிறது?

*"மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்*
*கற்றார் அனைத்திலர் பாடு"*
*(கல்லாமை அதிகாரம், குறள் 409)*

கற்காதவர்கள் உயர் குடியிற் பிறந்திருந்தாலும், தாழ்ந்த குடியிற் பிறந்த கற்றவர்களுக்கு ஈடாகமாட்டார்கள் என்கிறது திருக்குறள்.

*"உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே*
*பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்று உள்ளும்*
*சிறப்பின் பாலால் தாயும் மனம் திரியும்*
*ஒரு குடிப்பிறந்த பல்லோருள்ளும்*
*மூத்தோன் வருக என்னாது அவருள்*
*அறிவுடையோன் ஆறு அரசும் சொல்லும்*
*வேற்றுமை தெரிந்த நாற்பால் உள்ளும்*
*கீழ்ப்பால் ஒருவன் கற்றபின்*
*மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே"*
*(புறநானூறு 183)*

ஆசிரியரை மதிக்கவும், ஆசிரியரின் அறிவைப் பெறுக என்றும், கல்விகற்காதவன் பெற்ற தாயாலும் சிறப்பிக்கப்பட மாட்டானென்றும், அரசாட்சிக்கும் கல்வி அறிவு அவசியமென்றும், கீழ்க்குலத்திற் பிறந்த ஒருவன் கற்றிருந்தால் மேற்குலத்திற் பிறந்தவனும் அவனிடம் கல்வி கற்கச் செல்வானென்றும் இப் புறநானூற்றுச் செய்யுள் கூறுகின்றது.

எல்லோருக்கும் கல்வி அவசியம் என்று எடுத்துக்கூறிய திருவள்ளுவர் பெண் என்பவள் அறிவுடையவளாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார்.

*"மனைத்தக்க மாண்புடையன் ஆகித்தற் கொண்டான்*
*வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"*
*(வாழ்க்கைத்துணைநலம் அதிகாரம், குறள் 51)*

பெண்ணானவள் இல்லறப் பண்புகளைக் கொண்டவளாக இருக்கும் அதேநேரம், தன் கணவனது வருவாய்க்கு ஏற்றவாறு குடும்பச்செலவினங்களைக் கண்காணித்துக் குடும்பத்தைச் சீரும் சிறப்புடனும் வாழவைக்க வேண்டும், அவளே சிறந்த மனைவியாவாள். இவ்வாறாகப் பெண்ணின் கையில் வீட்டு நிதி மேலாண்மையைத் திருவள்ளுவம் கொடுக்கிறது.

பெண்ணின் நிலையைச் சமூகத்தில் மேம்படுத்தவும், பெண்ணிற்குப் பாதுகாப்புத் தரவும். கல்வி அவசியமாகிறது. பெண் கல்வியறிவுடையவளாக இருக்கும் போதே அவளது பேச்சுரிமை மற்றும் கருத்துச் சுதந்திரம் சரியான முறையிற் பயன்படுத்தப்படும்.

*"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
*பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்*
*எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண்*
*இளைப்பில்லைக் காணென்று கும்மியடி"*

புதுமைப் பெண்ணை உலகிற்குக் காட்டிய மகாகவி பாரதியின் வரிகளையும் இங்கே ஒப்பிட முடியும்.

ஒருவரது ஞானக் கண்ணைத் திறக்கும் திறவுகோல் கல்வி. கற்றவர்களை மட்டுமே "கண்ணுடையர்" என்றும், கற்காதவர்களைக் கண்ணிருந்தும் முகத்திரண்டு புண்ணுடையவர்களென்றுங் கூறி மக்களிடையே கல்வியின் அவசியத்தை விளங்கவைத்தார்.

*"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு*
*புண்ணுடையர் கல்லா தவர்"*
*(கல்வி அதிகாரம், குறள் 393)*

சிறந்த கல்வி மனிதர்களை உயர்நிலைக்கு இட்டுச் செல்வது மட்டுமன்றி, இந்த உலகையே மாற்றுவதற்கான முக்கிய மூலப்பொருளாகவும் விளங்குகிறது. "உலகை மாற்ற நீங்கள் பயன்படுத்தக்கூடிய மிகச் சக்தி வாய்ந்த ஆயுதம் கல்வி" என்ற மிகப் பெரும் உண்மையினை இனவெறி ஆட்சியில் ஊறிக்கிடந்த தென்னாபிரிக்காவை மக்களாட்சி முறையில் ஒளிரச்செய்த முதற் குடியரசுத் தலைவர் நெல்சன் மண்டேலா அவர்கள் கூறினார். எனவே உலகு சிறந்து விளங்கவேண்டுமானால் மக்கள் அறிவுடையவர்களாகவும், சான்றோர்களாகவும் இருப்பது இன்றியமையாததாகிறது.

நல்லது, கெட்டதைப் பகுத்தாயும் திறனைத்தருவது கல்வி. அதனாற் கற்காதவர்களைப் பகுத்தறிவற்ற விலங்குகளுக்கு ஒப்பிட்டுள்ளார். விலங்குகளிடமிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவது பகுத்தறிவே. ஆகவே படித்தவருக்கும், படிக்காதவர்களுக்கும் உள்ள வேற்றுமை எவ்வளவெனில், விலங்கிற்கும் மனிதனிற்கும் உள்ள வேற்றுமையே என்கிறார் திருவள்ளுவர்.

*"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
*கற்றாரோடு ஏனை யவர்"*
*(கல்லாமை அதிகாரம், குறள் 410)*

எனவே எந்தவொரு பொருளையும் யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் உண்மைத் தன்மையைக் காண்பதே அறிவு என்பதனையும் இவ்விடத்தில் ஒப்பு நோக்கலாம்.

*"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பது அறிவு"*
*(அறிவுடைமை அதிகாரம், குறள் 423)*

கல்வியறிவினை நாம் இருவழிகளிற் பெற முடியும். நூல்களின் மூலமாகவும், கற்றறிந்தவர்களிடமிருந்து கேட்டறிவதன் மூலமும் பெறமுடியும். அறிஞர்கள் சொல்லும் அறிவுரைகள் பல நமக்கு நல்வழிகாட்டத்தக்கன. கேள்வி ஞானமும் நமக்குச் சிறப்பேயாகும். கேள்வியும் கல்வியின் பயனைத்தரவல்லது. பிறசெல்வங்கள் எல்லாவற்றிலும் கேள்விச் செல்வம் முதன்மையானதென்றார்.

*"செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்*
*செல்வத்து ளெல்லாந் தலை"*
*(கேள்வி அதிகாரம், குறள் 411)*

எந்தவொரு விடையஞ் சார்ந்தும் சரியான தீர்மானங்களையெடுக்கவும், போட்டிகள் நிறைந்த இன்றைய உலகில் நம்மை வெற்றியாளர்களாக மாற்றுவதற்கும் கல்வியே துணை நிற்கிறது. மகிழ்ச்சிகரமான, வளமான வாழ்வினை கல்வி நமக்கு வழங்குகிறது. கற்றவர்களாற் சமூகம் காக்கப்படுகிறது. உலகு மேம்படுத்தப்படுகிறது. பிற நாடுகளுடன் தொடர்புகொள்ளவும், பிறநாட்டுக் கலாச்சாரங்களையும், வரலாறுகளையும் தெரிந்துகொள்ளக் கல்வி எமக்கு உதவுகிறது. இத்தனை பெருமைகள் மிக்க கல்வியினை ஏன் கற்காமல் இருக்கின்றீர்களென எம்மை நோக்கித் திருவள்ளுவர் கேட்ட கேள்வி எமக்குள்ளே விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

*"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்*
*சாந்துணையும் கல்லாத வாறு"*
*(கல்வி அதிகாரம், குறள் 397)*

கற்றவர்களுக்குத் தனது நாடும், தனது ஊரும் போலவே எந்த நாடும், எந்த ஊரும் சொந்தமாகி விடும். ஆகவே ஒருவன் தன் வாழ்நாளில் கல்வி கறகாமல் இருப்பது என்ன கருதியோ? என்ற ஓர் ஆழமான கேள்வியைக் கேட்டுள்ளார்.

*"மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர் தூக்கின்*
*மன்னனிற் கற்றோன் சிறப்பு உடையன்- மன்னர்க்குத்*
*தன் தேசம் அல்லால் சிறப்பு இல்லை கற்றோர்க்குச்*
*சென்ற இடம் எல்லாம் சிறப்பு"*
*(மூதுரை, பாடல் எண் 26)*

அரசனையும், அறிஞனையும் ஒப்பிட்டால் அறிஞனே சிறந்தவனென்றும், அரசனுக்குத் தன்னுடைய தேசம் தவிரப் பெருமையில்லையென்றும் ஔவையார் கூறினார்.

பெற்றோர் தம் பிள்ளைகளிடம் எதிர்பார்ப்பதும், பிள்ளைகள் தம் பெற்றோர்க்குச் செய்யவேண்டியதுமான பிரதான கடமை சிறந்த கல்வியாளர்களாகவும், சான்றோராகவும் திகழ்வதேயாகும் என்பதனையும், இளமையிற் கல்வியின் சிறப்பினையும் அடுத்த தலைமுறையினருக்கான கல்வியின் அவசியத்தினையும் திருவள்ளுவர் கூறியதைக் கீழ்வரும் குறள்கள் விளக்கி நிற்கின்றன.

*"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்*
*சான்றோன் எனக்கேட்ட தாய்"*
*மக்கட்பேறு அதிகாரம், குறள் 69)*

*"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை*
*என்னோற்றான் கொல்எனுஞ் சொல்"*
*(மக்கட்பேறு அதிகாரம், குறள் 70)*

*"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து*
*முந்தி யிருப்பச் செயல்"*
*(மக்கட்பேறு அதிகாரம், குறள் 67)*

இத்தகைய கருத்தொருமைப்பாட்டினைப் பழமொழி நானூறும் பின்வருமாறு கூறுகிறது.

*"ஆற்றும் இளமைக்கண் கற்கலான் மூப்பின்கண்*
*போற்றும் எனவும் புணருமே - ஆற்றச்*
*சுரம்போக்கி உல்குகொண்டார் இல்லையே இல்லை*
*மரம்போக்கிக் கூலிகொண்டார்"*
*(பழமொழி நானூறு, கல்வி, பாடல் எண் 1)*

இளமைப்பருவம் முடிவதற்கு முன்பே கல்வி கற்க வேண்டும். முதுமையடைந்த பின் கல்வி கற்பது கடினமாகும்.

மனிதனுக்கு உண்மையான அழகைத் தரக்கூடிய அணிகலன் கல்வியே என்பதனை எமது இலக்கியங்கள் எடுத்துக்கூறி நம்மை வழிப்படுத்துகின்றன.

*"கற்றோர்க்கு கல்வி நலனே கலனல்லால்*
*மற்றோர் அணிகலம் வேண்டாவாம் - முற்ற*
*முழு மணிப் பூணுக்குப் பூண் வேண்டாயாரே*
*அழகுக்கு அழகு செய்வார்"* (குமரகுருபரர்)

மாணிக்கக் கற்களாலான மாலைக்கு மேலும் அழகைக்கூட்ட வேறு அணிகலன் எதுவும் தேவையில்லை. அது போலக் கற்றவர்களுக்கு அழகூட்டக் கல்வியைத்தவிர வேறு அணிகலன் ஏதும் தேவையில்லை என்றார் குமரகுருபரர்.

*"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்*
*மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து*
*நல்லம்யாம் எனும் நடுவு நிலைமையால்*
*கல்வி அழகே அழகு"* (நாலடியார் 131)

தலைமுடி அழகும், ஆடையழகும், மஞ்சள் அழகும் அழகல்ல. கல்வியே சிறந்த அழகாகும் என்கிறது நாலடியார்.

ஒருமைப்பாட்டுடன் நாம் கற்கும் கல்வியானது பல காலத்திற்கும் எங்களுக்குப் பாதுகாப்பைத்தரவல்லது. எமது தொடர்தலைமுறையினருக்கும் பயன்படுத்தத்தக்க பெருமைவாய்ந்தது என்கிறது திருவள்ளுவம்.

*"ஒருமைகண் தான்கற்ற கல்வி ஒருவருக்கு*
*எழுமையும் ஏமாப் புடைத்து"*
*(கல்வி அதிகாரம், குறள் 398)*

இதனாற்தான்

*"கற்கை நன்றே கற்கை நனறே*
*பிச்சை புகினும் கற்கை நன்றே"*

என்கிறது வெற்றிவேற்கை.

மதிப்பெண்களை நோக்கியதாகவோ, தொழில் வாய்ப்புக்களை நோக்கியதாகவோ மட்டுமல்லாமல் அறத்துடன் கூடிய கல்வியையே திருவள்ளுவம் பெரிதும் வலியுறுத்துகிறது. நடுநிலை தவறாத நீதிநெறியுடன்கூடிய கல்விச் சிந்தனைகளையே திருக்குறள் கூறுகிறது. இப்பேற்பட்ட அறச் சிந்தனைகளைத் தன்னகத்தே கொண்டிருப்பதனாற் தான் இரண்டாயிரம் ஆண்டுகள் தாண்டியும் திருக்குறள் உயிர்வாழ்கிறது.

கற்ற கல்வியினைத் தவறான விடையங்களுக்கும், அநீதியான செயல்களுக்கும் பயன்படுத்தாமல் நேரிய வழியில் வாழ்வதற்கே பயன்படுத்துவோம்.

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"*
*(கல்வி அதிகாரம், குறள் 391)*

*வாழ்க தமிழ்!*
*வாழ்க திருவள்ளுவம்!!*

மலேசிய மடல்

# மலேசிய வரலாற்றில் முதல் முறை! ஒரு முன்னாள் பிரதமருக்கு சிறை!!

## அன்வாரின் "காஜாங் நகர்வை" முறியடித்த நஜீப் இப்போது காஜாங் சிறையில்..!



நக்கீரன்

கோலாலம்பூர், ஆக.24:

அபூபக்கர் என்னும் பெயரைத் தவிர்த்துவிட்டு இஸ்லாமிய வரலாற்றையும் இலக்கியத்தையும் முழுமைப்படுத்த முடியாது. இஸ்லாத்தில் அளவற்ற அருளாளராகவும் நிகரற்ற அன்பாளராகவும் போற்றப்பட்டும் நபிகள் நாயகம் அவர்களின் உற்ற தோழராகவும் அவருக்குப் பின் முதல் கலீபாவாகவும் திகழ்ந்த அபூபக்கரின் நினைவு நாளான ஆகஸ்ட் 23-இல் மலேசியாவின் 6-ஆவது பிரதமர் டத்தோஶ்ரீ நஜீப் துன் ரசாக் சிறைவாசம் புகுந்துள்ளார்.

மலேசிய அரசியல் வரலாற்றில் நீண்ட காலம் நிலைத்திருக்கும் தலைவர் நஜீப். இவரின் அரசியல் வாழ்க்கை இன்னும் மூன்று ஆண்டுகளில் பொன் விழாவைக் காணும்.

1976-இல் 23-வயதில் புதுமாப்பிள்ளையாகி, அந்த மாப்பிள்ளைக் கோலத்துடன் நாடாளுமன்றத்திற்கு நுழைந்தவர் நஜீப். நாட்டின் 2-ஆவது பிரதமராக இருந்த துன் அப்துல் ரசாக், உடல் நலம் பாதிக்கப்பட்டு இங்கிலாந்தில் இறந்ததால், ரசாக் வென்ற பெக்கான் நாடாளுமன்றத் தொகுதி காலியானதாக தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டு, தொடர்ந்து அத்தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் நஜீப்பை எதிர்த்து களம் காண ஒருவரும் இல்லாததால் தேர்தலே நடைபெறவில்லை.

மக்களிடம் வாக்கு பெறாமலேயே முதன் முதலாக நாடாளுமன்றத்தில் நுழைந்த பெருமையும் இவருக்கு உண்டு. அதிலிருந்து இதுவரை பெக்கான் தொகுதியின் அசைக்க முடியாத நாயகனாக வலம் வருகிறார் இவர்.

துன் மகாதீருக்குப் பின் டத்தோஶ்ரீ அன்வார் இப்ராகிம்தான் பிரதமராக வருவார் என்று மலேசியா மட்டுமல்ல அரபு உலக வளைகுடா நாடுகளும் மேலை நாடுகளும்கூட எதிர்பார்த்திருந்த சூழலில், மகாதீர் புரிந்த வஞ்சகத்தால் அன்வாருக்குப் பதிலாக துன் அப்துல்லா படாவி பிரதமர் ஆக நேர்ந்தது.

அவருடைய போதாத காலம், 2004-இல் நடைபெற்ற 11-ஆவது பொதுத் தேர்தலில் எதிர்க் கட்சியே இல்லை யென்று சொல்லும் அளவிற்கு அடித்து நொறுக்கும் விதமாக இமாலய வெற்றிபெற்ற படாவி, அடுத்த 12-ஆவது பொதுத் தேர்தலில் ஹிண்ட்ராஃப் எழுச்சி என்னும் மலேசிய இந்தியர் உரிமை முழக்கப் போராட்டத்தின் தாக்கம் பிரதிபலித்ததால் "தப்பித்தோம்-பிழைத்தோம்" என்று சொல்லும் அளவுக்கு தட்டுத் தடுமாறி கரைசேர்ந்தார்.

இதன் விளைவாக, கட்சியிலும் ஆட்சியிலும் படாவியின் நிலைமை பலவீனமானது; அதை நஜீப்பும் நஜீப்பின் அப்போதைய கூட்டாளியும் இப்போது நஜீப் சிறைபுகுந்துள்ளதை கொண்டாடும் எதிரியுமான டான்ஶ்ரீ முகைதீன் யாசினும் வகையாக பயன்படுத்திக் கொண்டு, படாவிக்கு எதிராக வசைபாடினர்.



அந்த அமைதியான மனிதர், அரசியலில் இருந்தே ஓய்வு பெற முனைந்த வேளையில், நாட்டின் ஆறாவது பிரதமரானார் நஜீப்.

மலேசியாவில் தொடர்ந்து 47 ஆண்டுகளாக நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் இந்தத் தலைவர், கடந்த ஜூலை 23-இல்தான் தன் 69-ஆவது பிறந்த நாளைக் கொண்டாடினார்.

70-ஆவது வயதைத் தொட்டு சரியாக ஒரு மாதத்தில் இந்த 23-இல் காஜாங் பட்டணத்து சிறைச்சாலை நஜீப்புக்கு சிவப்புக் கம்பளம் விரித்துள்ளது. 23-ஆம் எண்ணுக்கும் நஜீப்பிற்கும் நெருங்கிய தொடர்பு போலும்!

இந்த இடத்தில்தான், 2,000 ஆண்டுகளுக்கு முன் துறவறம் பூண்ட அரசிளங்குமாரனும் பெரும்பாவாலருமான இளங்கோ அடிகளின் "அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்"; "ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும்" என்ற வரிகள் மனதைத் தொடுகின்றன.



அரசியல் தலைவர்கள், தங்களின் எதிரிகளை வீழ்த்த பற்பல வஞ்சக செயல்களை மேற்கொள்வதுண்டு;

ரஷ்யா போன்ற நாடுகளில் வாகனத்தை ஏற்றி அரசியல் எதிரியைத் தீர்த்துக் கட்டுவார்கள்; இந்தியா போன்ற நாடுகளில் வருமான வரித்துறை அதிகாரிகளை ஏவிவிட்டு பழிதீர்ப்பார்கள் அல்லது நீதிமன்ற தீர்ப்புகளை தூசிதட்டி எடுத்து எதிரிக்கு எதிராகப் பயன்படுத்துவார்கள்; பாகிஸ்தான் - ஆஃப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் வெடிகுண்டுகளையும் துப்பாக்கி ரவைகளையும் பரிசளிப்பார்கள்; மியன்மார் போன்ற நாடுகளில் வீட்டுக் கைதியாக சிறை வைப்பார்கள். அமெரிக்கா போன்ற நாடுகளில் மற்ற நாடுகளின் புலனாய்வுப் பிரிவை கூலிக்கு அமர்த்தி பொய்ப் பிரச்சாரம் மேற்கொள்வார்கள்; மலேசியா போன்ற நாடுகளிலோ அரசியல் எதிரியை வீழ்த்த பாலியல் வழக்கை கையில் எடுப்பார்கள்.

அப்படி வீழ்த்தப்பட்டு, பிரதமர் நாற்காலிக்கு அருகில் கால் நூற்றாண்டாக காத்திருப்பவர் டத்தோஶ்ரீ அன்வார் இப்ராகிம்.

மகாதீரால் பழிவாங்கப்பட்டு சிறைவாசமும் முடிந்த நிலையில், மீண்டும் 2014-இல் நஜீப் பிரதமராக இருந்தபோது மேலும் ஒரு பாலியல் வழக்கு தொடரப்பட்டது.

அன்வாரிடம் உதவியாளராக இருந்தபோது தன்னிடம் குதப் புணர்ச்சியில் ஈடுபட்டார் என்று ஒருவர் சொல்ல, அதன் பின்னணியில் மீண்டும் ஒரு வழக்கு தொடரப்பட்டது.

அந்த வேளையில், அன்வாருக்கு எதிராக நஜீப், அவரின் மனைவி டத்தின்ஶ்ரீ ரோஸ்மா மன்சோர் ஆகியோரின் தூண்டுதலின்பேரில் இந்த சதிவலை பின்னப்படுகிறது என்று அன்வாரின் ஆஸ்தான வழக்கறிஞரும் மக்கள் நீதிக் கட்சி - பிகேஆர் தலைவர்களில் ஒருவருமான சிவராசா கொதித்தெழுந்தார்.

ஆனால், தக்க ஆதாரம்-சாட்சிகளின்படியே நடவடிக்கை எடுக்கப்படுவதாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இருந்தபோதும் கீழ்நிலை நீதிமன்றத்தில் அன்வார் விடுவிக்கப்பட்டார். வழக்கு நடைபெற்ற இடைக்காலத்தில் அன்வார் தன் நாடாளுமன்ற பதவியைத் துறக்க நேர்ந்தது.

நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட நிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் பொறுப்பும் இல்லாததால், நாட்டின் மையப் பகுதியான சிலாங்கூர் மாநில அரசியலில் ஈடுபட விரும்பி, அதன் தொடர்பாக தன் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் பதவி விலக, அந்தத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் அன்வார் போட்டியிட முயன்றபொழுது, ஏற்கெனவே உயர்நீதி மன்றத்தில் அன்வார் விடுவிக்கப்பட்டதை எதிர்த்து நஜீப் அரசு சார்பில் மேல்முறையீடு செய்யப்பட்டு, அதன்வழி மீண்டும் அன்வார் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

மலேசியாவின் அண்மைக் கால அரசியல் வரலாற்றில் இந்த "காஜாங் நகர்வு"க்கு ஒரு முக்கிய இடம் உண்டு. அதில், அன்வாருக்கு எதிராக சொல்லி அடித்து வென்ற நஜீப், இன்று அதேக் காஜாங்கில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டிருப்பதைத்தான் ஊழ்வினை உறுத்துவந்து ஊட்டும் என்னும் இளங்கோ அடிகளின் பாவரி நினைவுபடுத்துகிறது.

தவிர, கடந்த 2018 பொதுத் தேர்தலின்போது, தேர்தல் களத்தில் தனக்கு மருட்டலாக விளங்கிய எதிர்க்கட்சித் தலைவர் டத்தோஶ்ரீ அன்வார் இப்ராகிம், சிறையில் இருக்கும்படி வகையாகப் பார்த்துக் கொண்டது நஜீப் தலைமையிலான தேசிய முன்னணி அரசு. நீதிமன்றத் தீர்ப்பும் உள்துறை அமைச்சின் முடிவும் அதற்கு ஏதுவாக அமைந்தன.

இந்த முறை பொதுத் தேர்தல் நெருங்கிவரும் நிலையில், அதே நீதிமன்றத்தின் தீர்ப்பால் நஜீப் சிறைக்கு சென்றுள்ளார்.

அரசாங்கத்தின் நிதி மேலாண்மை நிறுவனமான "1எம்டிபி" நடவடிக்கை தொடர்பில் "எஸ்.ஆர்.சி. இண்டர்நேஷனல்" நிறுவனத்தில் வெ.4கோடியே 20 இலட்சத்திற்கு ஊழல் புரிந்தார் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் நஜீப்பிற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் கோலாலம்பூர் உயர் நீதிமன்ற விசாரணை நீதிபதி அளித்த 12 ஆண்டு சிறைத் தண்டனையை மேல்முறையீட்டு நீதிமன்றம் உறுதிசெய்ததால் நஜீப் உடனே சிறைக்கு அனுப்பப்பட்டார். வெ.21 கோடி தண்டமும் நிலைநிறுத்தப்பட்டது.

கூட்டரசு நீதிமன்ற தலைமை நீதிபதி தெங்கு மைமூன் துவான் மாட் தலைமையில், சபா-சரவாக் மாநிலங்களின் தலைமை நீதிபதி அபாங் இஸ்கந்தார் அபாங் ஜொகாரி, புத்ராஜெயா கூட்டரசு நீதிமன்ற நீதிபதிகள் நளினி பத்மநாதன், மேரி லிம், முகமட் ஜாபிடின் டியா ஆகிய நால்வர் அடங்கிய ஐவர் விசாரணைக் குழு ஒருமனதாக நஜீப்பிற்கு எதிரான தண்டனையை மறுஉறுதி செய்தது.

சுமார் 9 ஆண்டுகள் நாட்டை ஆண்ட நஜீப், அதேக் காலக்கட்டத்திற்கு அம்னோ கட்சியையும் வழிநடத்தினார். வரும் பொதுத் தேர்தலில், வாக்காளர்களை கவருவதற்காக நஜீப்பின் திருமுகத்தை அந்தக் கட்சி அடையாளம் கண்டிருந்த நிலையில், இப்பொழுது அவர் சிறை சென்றிருப்பதால், திடீர்ப் பின்னடைவை எதிர்கொண்டுள்ள அம்னோ, கொஞ்ச காலத்திற்கு அமைதியாக இருக்கும். உடனடி தேர்தலையும் வலியுறுத்தாமல் பின்வாங்க நேரிடும்.

மலேசிய அரசியல் வரலாற்றில் ஒரு முன்னாள் பிரதமர் சிறை செல்வது இதுவே முதல்முறை; ஆனாலும், நஜீப் 12 ஆண்டுகளை சிறையில் கழிப்பாரா என்பதும் 21 கோடி வெள்ளியை அபராதமாக செலுத்துவாரா என்பதும் ஐயமே!



காரணம், நஜீப்பின் வழக்கறிஞர்கள், இந்தத் தண்டனையை மறுபரிசீலனை செய்யும்படி சிராய்வு மனுவை மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கலாம்; அல்லது மாமன்னரிடம் பொது மன்னிப்பு கோரலாம். அந்த சந்தர்ப்பங்களில் முடிவு மாறலாம்; காட்சியும் மாறலாம்; நஜீப்பும் ஆறுதல் பெறலாம்;

காத்திருப்போம், அடுத்தடுத்த காட்சிகளைக் காண...!

நக்கீரன் - Nakkeeran 013-244 36 24

எஸ். இஸட் ஜெயசிங்க எழுதிய

# “இலங்கை இந்திய அரசியல் சமூகப் பார்வை”

## தமிழகத்தில் வெளியீட்டு விழா



மலையகத்தில் பிறந்து தற்போது தமிழகத்தில் வாழ்ந்து வரும் எஸ். இஸட் ஜெயசிங்க எழுதிய “இலங்கை இந்திய அரசியல் சமூகப் பார்வை” என்ற நூலின் வெளியீட்டு விழா 27.08.2022 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு திருநெல்வேலி தியாகாராஜநகர் மின்வாரிய ஓய்வுபெற்றோர் சங்க அலுவலக மண்டபத்தில் மதிதா இந்து கல்லூரியின் முன்னாள் முதல்வர் வி. பொன்ராஜ் தலைமையில் நடைபெறும்.

தமிழ்காவேரி ஆசிரியர் வழக்கறிஞர் தமிழகன், பேராதனை பல்கலைகழக முதுநிலை விரிவுரையாளரும் தற்போது தஞ்சாவூர் பல்கலைகழக கலாநிதி பட்ட மாணவருமாகிய எம்.எம். ஜெயசீலன் (CITU) வின் மாவட்டத்தலைவர் ஆர்.எஸ் செண்பகம் ஆகியோர் வாழ்த்துரையும் வழங்க நிகழ்ச்சிகளை எழுத்தாளர் இரா. நாறும்பூநாதன் தொகுத்து வழங்க மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழக முன்னாள் வரலாற்றுத் துறை பேராரசிரியர் கே.எ. மணிகுமார் நூலை வெளியிட்டு வைக்கின்றார்.

நூலின் பகுதி ஒன்றில் இலங்கைத் தமிழர் வரலாறு, சிறிமா சாஸ்திரி உடன்படிக்கை, இந்திய குடியுரிமைச் சட்டமும் இலங்கைத் தமிழ் அகதிகளும், ராஜபக்சே பிரதமரான 2020 தேர்தல் ஓர் ஆய்வு, இலங்கையில் ஒரே நாடு ஒரே சட்டம், அரசியல் பொருளாதார நெருக்கடியில் இலங்கை ஆகிய ஆறு கட்டுரைகளும்.

நூலின் பகுதி இரண்டில் இந்திய குடியுரிமைச் சட்டங்கள் ஒரு பார்வை., இந்தியாவில் புதிய கல்விக் கொள்கை., இந்திய அரசியலில் பெண்கள், இந்தியாவின் பன்முகத்தன்மை., இந்தியாவில் குழந்தை தொழிலாளர்கள்., இந்தியாவில் வீதியோரக் குழந்தைகள்., இந்திய தேர்தல் முறை., தமிழகத்தில் சாதியக் கொடுமைகள்., பெரியாரின் தீண்டாமை எதிர்ப்பு., தொழிற்சங்க தோழர் பால் வண்ணம் ஆகிய பத்து கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்து பின்னர் அங்கேயே சிறிது காலம் அரசியல் விஞ்ஞான உதவி விரிவுரையாளராக பணியாற்றிய போது 1976 ஆம் ஆண்டு “இலங்கை வாழ் இந்தியர்களின் குடி அகல்வு” என்ற அவரது முதல் நூல் இலங்கை அட்டன் நகரில் வெளியிட்டு வைத்து அதன் பின்னர் தாயகம் திரும்பி பாரத ஸ்டேட் வங்கிப்பணியின் போது எழுதிய இலங்கை மலையக மக்கள் தொடர்பான நூலொன்று வங்கிநிர்வாகத்தின் அனுமதி கிடைக்காமையால் வெளிவராது போய்விட்டது.

மிக நீண்ட இடைவெளியில் தற்போது 2022ல் தமிழகத்தில் அவரது இரண்டாவது நூல் வெளிவருகிறது. இலங்கையில் அரசியல் விஞ்ஞானம் தொடர்பாக கல்வி கற்றமையினால் அரசுகளின் கொள்கை முடிவுகள் அவரது வாழ்க்கையை பாதித்துக் கொண்டே இருப்பதாலும் சமூக அரசியல் செயல்பாடுகள் மீது அவரது கவனம் திசை திரும்பியதன் விளைவே இந்த நூல் வெளி வருகின்றது.

1964 அக்டோபர் 30 (சிறிமா சாஸ்திரி உடன்படிக்கை) மலையக மண்ணிலிருந்து மனிதாபிமானம் மறந்த இலங்கை இந்திய அரசுகளால் வேரோடு பிடுங்கி இந்திய மண்ணில் வீசி எறியப்பட்ட லட்சக்கணக்கானவர்களில் மலையக உறவுகளில் கல்வியாளர் எஸ். இஸட் ஜெயசிங் அவர்களும் ஒருவர். பலர் வீழ்ந்தனர். சிலர் எழுந்தனர். அந்த மிகச்சிலரின் அவரும் ஒருவர். இலங்கையின் மண் வாசனை வேறு. இந்திய மண் வாசனை வேறு. அதன் கலவையாகிவிட்ட அவரது இலங்கை நினைவுகள், நிகழ்வுகள் மறக்க முடியாதன. அதன் வெளிப்பாடாக முதற் பகுதியில் இலங்கை நிகழ்வுகளையும் இரண்டாம் பகுதியில் இந்திய நிகழ்வுகளையும் அவரது இந்நூல் பதிவு செய்கின்றது.

சமூக வலை தளங்களில் அவ்வப்போது சிற்சில கருத்துக்களை எழுதி வந்தபோது “நீங்களும் நூல் எழுதி வெளியிடலாம்” என அவரிடம் அக்கறையுடன் கூறிய தோழமை மிக்க நண்பர்கள் பலர். குறிப்பாக நண்பர்கள் ஆறுமுகம், நாறும்பூநாதன், சரவணக்குமார், சோமு, திருச்சி தமிழகன், கோவை பூபாலன், மற்றும் இலங்கை நண்பர்களான ஆறுமுகம், தவராஜா, திலகராஜ், மறைந்த நம் தோழர் பால் வண்ணம் ஆகிய நல்ல உள்ளங்களை நன்றியுடன் இந்நூலில் நினைவு கூறுகின்றரர்.

அவரது கட்டுரைகள் கனடாவில் இருந்து வெளிவரும் தாய் வீடு என்ற இணைய இதழிலும் தீக்கதிர், செம்மலர், தினக்குரல், தமிழ்க் காவிரி உட்பட பல தளங்களிலும் அவ்வப்போது வெளிவந்துள்ளன. அவரது எழுத்துக்களுக்கு அங்கீகாரம் தந்து அவரது கட்டுரைகளை தாய்வீடு இதழில் வெளிவர காரணமாக இருந்த அதன் பதிப்பாளர், ஆசிரியர் பி.ஜெ. டிலிப் குமார் அவர்களுக்கு இதன் வாயிலாக தனது இதயப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறார்.

இதன் மற்றுமொரு வெளியீட்டு விழா கொழும்பிலும், மலையகத்திலும் நடைபெற இருப்பது குறிப்பிடதக்கதாகும்.





கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள். சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள். முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy



crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

மலேசிய மடல்

# அடுத்த ஆண்டில்தான் பொதுத் தேர்தல்:

## 14-வது நாடாளுமன்ற தவணைக்காலம் முடியும்வரை பிரதமர் பதவியில் தொடர்வார் இஸ்மாயில்



நக்கீரன்





**கோ**லாலம்பூர், ஆக.18:

இன்னும் இரு வாரங்களில், செப்டம்பர் முதல் நாளில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு, செப்டம்பர் 2-வது வாரத்தில் 15-ஆவது பொதுத் தேர்தலுக்கான அட்டவணை வெளியிடப்படும் என்றும் அதன்படி செப்டம்பர் 25-இல் வேட்பு மனுத் தாக்கல் நடைபெற்று அக்டோபர் 8-இல் மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டையார் நினைவு நாளான அன்றைய தினத்தில் பொதுத்தேர்தல் நடைபெறும் என்றும் சமூக வலைதளங்களில் பரபரப்பாக செய்தி உலா வரும் இந்த வேளையில், உண்மையில் மகிழ்ச்சி அடைய வேண்டிய அம்னோ, மாறாக தன் முழு கவனத்தையும் புத்ராஜெயா கூட்டரசு நீதிமன்றத்தை நோக்கி திருப்பி இருக்கிறது.

மலாக்கா, ஜோகூர் சட்டமன்றத் தேர்தல்களில் வென்றதில் இருந்தே அடுத்தப் பொதுத் தேர்தல் உடனே நடத்தப்பட வேண்டும் என்றும் இதன்தொடர்பில் நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் எனவும் ஓங்கி முழங்கிவந்த அம்னோக் கட்சி, 2023 மே மாதம் வரை தவணைகொண்டுள்ள தற்போதைய 14-ஆவது நாடாளுமன்றத்தை ஏன் இடையில் களைக்க வேண்டும் என்பதற்கு இதுவரை நாட்டு மக்களுக்கு அம்னோ சொல்லவில்லை அம்னோ கடந்துவந்த ஜனநாயகப் பாதை அப்படி!

அக்டோபர் 8-இல் பொதுத் தேர்தல் என்பது உண்மையாக இருந்தாலும் வதந்தியாக இருந்தாலும் இப்பொழுது மகிழ்ச்சி அடைய வேண்டிய அந்தக் கட்சி, மாறாக கலக்கத்தில் இருக்கிறது. தேர்தல் களத்திற்கு அம்னோவின் முகமாக அடையாளம் காணப்பட்டிருந்த முன்னாள் பிரதமர் டத்தோஸ்ரீ நஜீப், பெரும் சிக்கலுக்கு ஆட்பட்டுள்ளார். “எஸ்.ஆர்.சி. இண்டர்நேஷனல்” வழக்கில் தனக்கு விதிக்கப்பட்ட தண்டமும் சிறைவாசமும் கொண்ட தண்டனைக்கு எதிரான அவரின் மேல்முறையீட்டு வழக்கு ஏறக்குறைய உச்சக்கட்டத்தை எட்டிவிட்டது.

இது ஓர் ஊழல் வழக்கு என்பதைப் பற்றியெல்லாம் கொஞ்சமும் சிந்திக்காக டத்தோஸ்ரீ அகமட் ஜாஹிட் ஹமிடி, தான் அம்னோவின்





தேசியத் தலைவர், ஒரு மாபெரும் அரசியல் கூட்டணியான தேசிய முன்னணிக்கும் தலைவர் என்பதை யெல்லாம் புறந்தள்ளி, நாங்கள் அனைவரும் நஜீப்பின் பின்னால் அணி வகுத்துள்ளோம்; மற்றவர்களும் அவருக்கு தார்மீக ஆதரவு கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்; அந்தக் கோரிக்கையின் சூடு தணிவதற்குள், கட்சியின் துணைத் தலைவரான டத்தோஸ்ரீ முகமட் ஹசானும் நஜீப்பிற்கு எதிரான “எஸ்.ஆர்.சி. இண்டர்நேஷனல்” வழக்கில் அவசரமாக தீர்ப்பு வழங்குவது நீதியை புதைப்பதற்கு சமம் என்கிறார்.

உண்மையில் இவ்வழக்கு, வருடக் கணக்கில் நடைபெற்று, தீர்ப்பு அறிவிக்கப்பட்ட நிலையில், அதை எதிர்த்து மேல் முறையீடு செய்தார். அதிலும் தோல்வி அடைந்த நிலையில் இப்பொழுது கூட்டரசு நீதிமன்றத்தில் வழக்கு நடைபெறுகிறது. இதை எப்படி அவசரத் தீர்ப்பு என்று முகமட் ஹசான் கூறுகிறார் என்று தெரியவில்லை.

அம்னோ தலைவர்களின் அத்தியாயத்தில் தார்மீக ஆதரவு, அவசரத் தீர்ப்பு என்பதற்கெல்லாம் வேறு பொருள் போலும்!

அண்மைக் காலம், வரை சுலு சுல்தான் விவகாரம் தேசிய அரசியலை ஆக்கிரமித்து வந்த நிலையில், இப்பொழுது நாட்டின் கப்பல் படைக்கு போர்க் கப்பல் வாங்கியதில் ஏறக்குறைய வெ.9.3 பில்லியன் அளவுக்கு ஊழல் நடைபெற்றுள்ளது அம்பலமாகி தேசிய அரசியலை களங்க அடித்து வருகிறது.

இந்த இரு பெருஞ்சிக்கலுக்கும் முந்தைய தேசிய முன்னணி ஆட்சிதான் முழுகாரணம். இதற்கிடையில், நஜீப்பிற்கு எதிரான “எஸ்.ஆர்.சி. இண்டர்நேஷனல்” வழக்கிற்கு இந்த மாத இறுதியிலேயே முடிவுரை எழுதப்பட இருக்கிறது.

அம்னோ தலைமை வட்டம் எதிர்கொண்டுள்ள இத்தகைய நெருக்கடிச் சூழலால், ஒருவர் உள்ளூர மகிழ்ச்சி அடைவார் என்றால் அவர்தான் பிரதமர் டத்தோஸ்ரீ இஸ்மாயில் சப்ரி யாக்கோப்-ஆகத்தான் இருப்பார்.

15-ஆவது பொதுத் தேர்தல் குறித்து கடந்த ஓராண்டுக்கும் மேலாகவே மலேசிய தேசிய அரசியல் களத்தில் பேசப்பட்டு வந்தாலும் அலுங்காமல் குலுங்காமல் அடுத்த ஆண்டு மேத் திங்கள்வரை வாய்ப்புள்ள பிரதமர் பதவியில் தொடர்வது என்பதில் இஸ்மாயில் தீர்க்கமாக இருக்கிறார்.

நாட்டின் ஒன்பதாவது பிரதமர் ஆனது, உண்மையில் அவருக்குக் கிடைத்த நல்வாய்ப்பு. கடந்த பொதுத் தேர்தலில், டத்தோஸ்ரீ அன்வார் இப்ராகிம்தான் பிரதமர் என்பதை கருத்தில் கொண்டு மக்கள் நம்பிக்கைக் கூட்டணியை ஆதரித்தனர் மாற்றத்தையும் விரும்பினர்.

அரசியல் சகுனி துன் மகாதீர் இழைத்த துரோகத்தினால், நம்பிக்கைக் கூட்டணி ஆட்சி 22 மாதங்களிலேயே கவிழ்க்கப்பட்டு, கொல்லைப்புற ஆட்சி என்னும் அத்தியாயங்கள் உருவாயின. இதில் இரண்டாவது அத்தியாயத்தின் மூலம் பிரதமராகியுள்ள இஸ்மாயிலுக்கு, இன்னொரு முறை பிரதமர் வாய்ப்பு வாய்க்குமா என்பது ஐயமே.

15-ஆவது பொதுத் தேர்தலில் இஸ்மாயில்தான் பிரதமர் வேட்பாளர் என்று ஜாஹிட் ஹமிடி அறிவித்ததை இஸ்மாயில் நம்பத் தய-ாராக இல்லை. அண்மையில் ஜோகூர் சட்டமன்றத் தேர்தலின்போது வாக்கு வேட்டைக்காக மந்திரி பெசார் (மாநில முதல்வர்) வேட்பாளர் என்று காட்டிய முகம்வேறு வென்றபின் மந்திரி பெசார் நாற்காலியில் அமரவைத்த முகம் வேறு.

பிரதமருக்கு இதுவெல்லாம் தெரியாதா என்ன?

முதலில், 15-ஆவது பொதுத் தேர்தலில் தேசிய முன்னணிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்குமா என்பதே கேள்விக்குறி; அப்படியேக் கிடைத்தாலும் அம்னோவின் உதவித் தலைவர்களில் ஒரு-வரான இஸ்மாயில் சப்ரியை மீண்டும் பிரதமர் நாற்காலியில் அமரவைக்க ஜாஹிட் அமிடியும் முகமட் ஹசானும் ஒப்புக்கொள்வார்களா என்பதும் ஐயத்திற்கு இடமானது.

எனவே, யார் என்ன சொன்னாலும் சொல்லிக் கொள்ளட்டும்; “நமக்கென்ன” என்னும் மனநிலையில் எல்லாத் தரப்பினருக்கும் எல்லாச் சூழலுக்கும் எற்றபடி “ஆமாம்சாமி” போட்டுவிட்டு, தற்போதைய நாடாளுமன்ற ஆயுட்காலம் வரை பிரதமராகத் தொடர்வது என்ற தீர்மானத்துடன் கணகச்சிதமாக செயல்படுகிறார் பிரதமர் இஸ்மாயில்.

இதன் வெளிப்பாடாகத்தான், கடந்த அக்டோபர் 10-ஆம் நாளில் அவரின் அண்ணன் கமாருசமான் யாக்கோப் “குவாசா ராயாட்” என்ற பெயரில் தொடங்கிய பல இனக் கட்சியும் கிடப்பில்





உள்ளது.

வரும் அக்டோபர் 8-இல் 15-ஆவது பொதுத் தேர்தல் என்ற தகவல், வதந்திதான் என்று அம்னோ பொதுச் செயலாளர் டத்தோஸ்ரீ அகமட் மஸ்லான் தெரிவித்த கருத்துகூட, அம்னோ இப்போது பின்வாங்குவதைத்தான் காட்டுகிறது. மொத்தத்தில் நடைபெறுகின்ற சம்பவங்கள் யாவும் பிரதமருக்கு சாதகமாகவே அமைகின்றன. 15-ஆவது பொதுத் தேர்தல் வரும் மே மாதத்தை நோக்கித்தான் நகர்கின்றது என்பதை இன்றைய அரசியல் களம் புலப்படுத்துகிறது.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**



# "உலகத் தமிழர்களை ஒன்றிணைக்கும் ஊடகம் கனடா உதயன்:"

## சிலாங்கூர் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஜி.குணராஜ்

**கோ**லாலம்பூர், ஆக.26:



காமன்வெல்த் அமைப்பின் 65-ஆவது நாடாளுமன்றக் கூட்டத்தில் நாட்டின் மையப் பகுதியான சிலாங்கூர் மாநில சட்டமன்ற உறுப்பினரும் மந்திரி பெசார் (மாநில முதல்வர்) டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியின் சிறப்பு அதிகாரியுமான டாக்டர் ஜி. குணராஜ் கலந்து கொண்டிருக்கிறார்.

இன்று வெள்ளிக்கிழமை நிறைவடையும் இந்த மாநாட்டில் மந்திரி பெசாரின் சிறப்பு பிரதிநிதியாக கலந்து கொண்டிருக்கும் ஜி. குணராஜ், அனைத்து அமர்வுகளிலும் பங்கெடுத்ததாகவும் காமன்வெல்த் உறுப்பிய நாடுகளின் அரசியல், பொருளாதார, பன்முக பண்பாட்டு, கலாச்சாரக் கூறுகளை உற்றுநோக்கவும் அந்தந்த நாடுகளின் அரசியல் பேராளர்களுடன் கலந்துரையாடி கருத்துப் பரிமாற்றம் செய்யவும் இந்த 65-ஆவது காமன்வெல்த் நாடாளுமன்ற மாநாடு வாய்ப்பாக அமைந்ததாகத் தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதிகள் வட்டார வரையறைகளைக் கடந்து, உலக சமுதாயத்தை உற்றுநோக்கும் பன்னாட்டுப் பார்வையைக் கொண்டிருக்க வேண்டும் சிறுபான்மை சமூகங்களை பெரும்பாமை சமுதாயத்தினர் அரவணைக்க வேண்டும் அரசியல் பொறுப்பு என்பது சமுதாயத் தொண்டாற்றுவதற்கான தார்மீகக் கடமையைக் கொண்டது என்றெல்லாம் பரந்துபட்ட சிந்தனையை ஈராண்டு இடைவெளிக்குப் பின் நடைபெறும் இந்த காமன்வெல்த நாடாளுமன்றக் கூட்டம் ஏற்படுத்தியது.

இன்றைய உலக சமூகத்திற்கு மிகவும் தேவையானது - அடிப்படையானது, மத நல்லிணக்கமும் சமுதாய நல்லிணக்கமும்தான் என்ற சிந்தனையை இந்த மாநாடு ஓங்கி முழங்கியது.

தீபகற்ப மலேசியாவில் உள்ள மாநிலங்கள், சபா மற்றும் சரவாக் உள்ளிட்ட அனைத்து மாநிலங்களின் பிரதிநிதித்துவமும் பிரதிபலிக்கும் வண்ணம் பேராளர்களைத் தெரிவு செய்து இந்த மாநாட்டிற்கு அனுப்பிய மலேசிய அரசுக்கும் இந்த மாநாட்டை சீரான முறையில் செம்மையாக வழிநடத்தும் கனடா அரசுக்கும் சிலாங்கூர் மாநில அரச-ின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளை தன்னைத் தேர்ந்தெடுத்த செந்தோசா சட்டமன்ற தொகுதி மக்களின் சார்பிலும் நன்றி தெரிவிப்பதாக மக்கள் நீதிக் கட்சியின் தலைவர்களில் ஒருவருமான குணராஜ் தெரிவித்தார்.



கடந்த வெள்ளிக்கிழமை ஆகஸ்ட் 20-இல் புறப்பட்ட மலேசியப் பேராளர்கள், 28 மணி நேர பயணித்துக்குப் இன் கடனாவை அடைந்தோம். தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் மலேசியா, சிங்கபபூர், இலங்கை போன்ற நாடுகளில் இருப்பதைப் போலவே கனடாவிலும் தமிழ் மொழியில் அச்சு - இணைய ஊடகம், தமிழ் வானொலி நிலையங்கள் இருப்பதை யெல்லாம் காண மகிழ்ச்சியாக இருக்கிறது.



நக்கீரன்

கனடாவாழ் புலம்பெயர்ந்த தமிழர்களின் தமிழ்ப் பற்று, ஆன்மிக - பண்பாட்டு - கலாச்சாரத் தன்மைகளைப் பாதுகாக்கும் விதம் யாவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. குறிப்பாக, உதயன் வார இதழ், இலங்கை - மலேசியா - சிங்கப்பூர் - தமிழ்நாடு - வளைகுடா நாடுகள் உள்ளிட்ட நிலப்பரப்புகளில் வாழும் தமிழர்களை ஒன்றிணைக்கும் ஊடகமாக இருக்கிறது என்றார்.

**நக்கீரன் -** Nakkeeran **013-244 36 24**

# "தியாக தீபம்" பொன். சிவகுமாரன்

## ஈழப் போராட்டத்தில் நஞ்சு அருந்தி உயிர்நீத்த முதல் போராளி



**கோ**லாலம்பூர், ஆக.26:

தமிழீழ சுதந்திரப் போராட்ட களம், இரு தலைமுறைக் காலத்திற்கு தொடர்ந்தது. முதல் 30 ஆண்டு போராட்டம், தந்தை செல்வா போன்ற பெருமக்களின் தலைமையில் ஜனநாயகத் தன்மையில் அமைந்தது.

சிங்கள இனவாத காடையரிடம் ஜனநாயகக் கூறுகள் அடியோடு இன்மையால், ஜனநாயக முறையிலான அந்தப் போராட்டம் கடுகளவும், எள்முனையளவும் பயனற்றுப் போனது; அதன் விளைவாக, தமிழீழ மக்களின் உரிமைப் போர் மறுவடிவத்தை எட்டியது.

எந்த இடத்தில் நியாயம் இல்லையோ, அந்த இடத்தில் வன்முறை வெடிக்கும் என்னும் உலக நியதிக்கு ஏற்ப தமிழீழ விடுதலைப் போராட்டமும் அடுத்தக் கட்டத்திற்கு நகர்ந்தது.

அப்பொழுது, எதிரிகளிடம் சிக்கினால், சித்திரவதைக்கு உள்ளாவதைத் தவிர்க்கவும் தன்மூலம் எந்தத் தகவலும் எதிரிக்கு தெரிந்துவிடக் கூடாதென்ற சிந்தனையிலும் போராட்ட களத்தில் நின்றாடிய இளைஞர்கள் அனைவரும் தங்களின் கழுத்தில் மெதில் ஐசோ சயனைட் என்னும் கொடிய நஞ்சை நிரப்பிய குப்பியை அணிந்து கொள்வது வழக்காக இருந்தது.

அந்த வகையில், ஈழ மண்ணில் முதல் முதலாக சயனைட் நஞ்சுண்டு, பிறந்த மண்ணுக்காகவும் சார்ந்த சமுதாயத்திற்காகவும் உயிர்நீத்த தமிழ் மறவன், இளம் மாணவன், அன்னலெக்குமி என்னும் வீரத்தாயின் மடியில் பால்குடித்து வளர்ந்த வீரக் கொழுந்து பொன்னுத்துரை சிவக்குமாரன்.

கால் நூற்றாண்டுகூட இந்த மண்ணில் வாழாத அந்த மறவன், நெஞ்சைப் பிளந்து இதயத்தைத் தானே எடுத்து எதிரியிடம் கொடுப்பதைப் போல தமிழ்க் குல நலம் விழைந்து உயிர் துறந்தார்.

அவர் பிறந்த நாள் ஆகஸ்ட் 26, 1950.

உரும்பிராயில் பிறந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்கல்வி கற்ற வேளையில், உயர்க்கல்வி நிலையங்களில் சிங்கள அரசு கடைப்பிடித்த இன ஒதுக்கல் கொள்கைக்கு எதிராக வெகுண்டெழுந்தவர் பொன். சிவகுமாரன். அதன் பின்னர், அவரின் வாழ்க்கை தமிழீழ மண் - மக்களுக்கான போராட்டத்தின் பக்கம் திரும்பியது.

1970-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் சிறிமாவோ பண்டார நாயகே அமைச்சரவை உறுப்பினரான சோமவீர சந்திரஸ்ரீ-யின் வாகனத்துக்கு குண்டு வைத்தவர் சிவகுமாரன் என்று குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார்.

விடுதலையான நிலையில், 1971 ஆம் ஆண்டு தொடக்கத்தில் ஒரு வெடிகுண்டு தாக்குதல் முயற்சியில் ஈடுபட்டார் பொன். சிவகுமாரன்; ஈழ விடுதலைப் போராட்டத்தில் முதல் தாக்குதல் இதுவென கருதப்படுகிறது.

யாழ்ப்பாண நகரத் தந்தையாகவும் அப்போது சிறிமா கட்சியின் அமைப்பாளராகவும் இருந்த அல்ஃப்ரட் துரையப்பாவுக்கு குறிவைத்து அவரின் வாகனத்தில் குண்டு பொருத்தினார்.

குண்டும் வெடித்தது; வாகனமும் சிதறியது; ஆனால், துரையப்பாதான் தப்பினார். துரையப்பா வருவதற்கு முன்னரே குண்டு வெடித்ததால், நூலிழையில் தப்பினார் துரையப்பா.

1973 இல் மாணவர் பேரவையின் பொறுப்பாளராக இருந்த சத்தியசீலன் போன்றவர்கள் கைதாவதற்கு முன்பே, சிங்கள காவல்துறையினரால் வளைக்கப்பட்டு அனுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பொன். சிவகுமாருக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றது.

அதற்குமுன்னம், யாழ்ப்பானம் சிறையில் இருந்த அவரை, தப்பி விடுவார் என்ற ஐயத்தினாலும் அங்கு ஏற்கெனவே ஏராளமான தமிழ் இளைஞர்கள் கைதிகளாக இருந்ததாலும், அனுராதபுரம் சிறைச்சாலைக்கு பொன் சிவகுமாரனை மாற்றினர்.

ஒரு நாள் கொழும்பிலிருந்து யாழ்பபாணம் சென்ற ரயிலில் நீதி மன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட பொன் சிவகுமாரன் அவர்கள் ரயில் பயணத்தின் போது ஒரு தமிழரை சந்திக்க நேர்ந்தது. பொன். சிவகுமாரன், ஒரு கடிதத்தை அவரிடம் கொடுத்து, அம்மடலை தன் பெற்றோரின் விலாசத்திற்கு தபாலில் சேர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்டார். ஆனால் அந்த கடிதத்தை உரும்பிராயில் உள்ள அவர்களது இல்லத்திற்கு நேரடியாகச் சென்று கையளித்தார்.

அன்று ரயிலில் பொன். சிவகுமாரனை பொலிசாரின் பாதுகாப்புக்கு மத்தியில் சந்தித்த அந்தத தமிழர், இன்று கனடாவில் உதயன் என்னும் அச்சு ஊடகத்தையும் இணைய ஊடகத்தையும் ஒருசேர நடத்திவரும் மூத்த ஊடகவியலாரும் சமூகவியலாளருமான நாகமணி. லோகேந்திரலிங்கம் அவர்கள்தான்.

அந்த வேளையில், திரு. லோகேந்திரலிங்கம் பத்திரிகைத் துறையில் எழுத்தாளனாக அறிமுகம் கொண்டிருந்த நேரம். அதை அடையாளம் கண்டுகொண்ட பொன்.சிவகுமாரன் மிகுந்த நம்பிக்கையுடன் தன் எண்ணங்களை பதிவு செய்த எழுத்தோலையை இவரிடம் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

தமிழினத்தில், சொந்த இனத்திற்கே கோடரிக்காம்புகளாகவும் எதிரியிடம் காட்டிக் கொடுப்பவர்களாகவும் சிலர் செயல்பட்டனர். சந்திரசேகரன், உரும்பிராய் நடராஜா போன்றவர்கள் அவ்வாறு துரோக நடவடிக்கையில் ஈடுபட்டதை அறிந்து, அவர்களுக்கு எதிரான நடவடிக்கையில் பொன்.சிவகுமார் ஈடுபட்டார்.

அப்படியான வேளையில், பொன். சிவகுமாரனை கோப்பாயில் காவல் துறையினர் சுற்றிவளைத்தபோது சிங்கள காவலரிடம் அகப்பட்டுவிடக் கூடாது என்பதற்காக சயனைட் அருந்தி இறந்தார். ஈழப்போராட்ட வரலாற்றில் முதன் முதலில் சயனைட் அருந்தி 1974, ஜூன் 5-ஆம் நாளில் தன்னுயிரைத் துறந்த இவரின் புகழ், தமிழீழ வரலாற்றில் காலமெல்லாம் நிலைத்திருக்கும்.

வாழ்க பொன். சுகுமாறனின் பெயர் வெல்க தமிழீழம்.

**நக்கீரன் -** Nakkeeran **013-244 36 24**



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1012



## தாழையம்பதி ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம்
### சாவகச்சேரி

"தொண்டு செய்யாது நின் பாதம் தொழாது துணிந்திச்சையே
புண்டு செய்தார் உளரோ இலரோ அப்பரிசடியேன்
கண்டு செய்தால் அது கைதவமோ அன்றிச் செய்தவமோ
மிண்டுசெய்தாலும் பொறுக்கை நன்றேபின் வெறுக்கையன்றோ"

இந்து சமயத்திலே சக்தி வழிபாடு தொன்மைமிக்க வழிபாடாக விளங்குகின்றது. சிந்துவெளி நாகரிகத்திற்கு முற்பட்ட கிராமிய நாகரிகங்களிலே தாய்த் தெய்வ வழிபாடு பெரிதும் போற்றப்பட்டுள்ளது. பிற்காலத்திலே கிராமிய வழிபாட்டு முறையிலிருந்து ஆகமமுறை தழுவிய வழிபாடாகத் தாய்த்தெய்வ வழிபாடு விரிவடைந்தது. வைதிக முறையிலே அம்பிகையை வழிபடும் வழிபாட்டு முறையை தட்சணாச்சாரம் என அழைப்பர். இந்த முறையிலே வழிபடுவதையே ஸ்ரீ வித்யா உபாசனை எனவும் அழைப்பர்.

சிவன் அறிவின் ஆதாரமாக விளங்கும்போது சக்தி அதன் இயக்கமாக அமைகின்றாள். சிவன் உலகத்தோற்றத்திற்கு அடிப்படையாக அமையும்போது, சக்தி அதனை இயக்கும் தத்துவமாக விளங்குகின்றாள். சக்தியின் திருவிளையாடல்களை அணுமுதல் அண்டம்வரை எங்கும் காணக்கூடியதாயுள்ளது. சக்தியின்றிச் சிவம் இல்லை எனச் சௌந்தர்யலகரியில் சங்கராச்சாரியார் குறிப்பிட்டுள்ளமை சக்தி வழிபாட்டின் பெருமையை எடுத்தியம்புகின்றது. உலக இயக்கம் அனைத்திற்கும் சக்தியே காரணம் என்பதை விளக்கும்வகையில் "சக்தியிருந்தால் செய் இல்லையேல் சிவனே என்று சும்மா இரு" என்று கூறும் வழக்கு காணப்படுகின்றது.

சிவமும் சக்தியும் வேறல்ல. ஒன்றிலிருந்து ஒன்று மாறாத தன்மையுடையனவாகக் காணப்படுகின்றது. சிவம் என்பது சேதனம் - அறிவுப்பொருள். சக்தி என்பது அசேதனம் - சடப்பொருள். இவை இரண்டும் இணைபிரியாது உலகெங்கும் காணப்படுகின்றன. மனித சரீரத்திலும் சிவமும் சக்தியும் கலந்தே காணப்படுகின்றது. உடல் அறிவில்லாதது அசேதனம். அறிவின் வடிவாய்ப் பிரகாசிப்பது ஆத்மா. இரண்டும் இணைந்தே மனிதவாழ்க்கையின் இயக்கமாக அமைகின்றது. உலகிலுள்ள சகல பொருட்களிலும் இத்தன்மையைக் காணலாம். நெருப்பும் ஒளியும், மழையும் குளிர்ச்சியும், மண்ணும் வளமும், பூமியின் சுழற்சியும் பருவமும், சிவசக்தி தத்துவத்தை உலகிற்கு எடுத்தியம்புகின்றன.

பிரபஞ்ச உற்பத்தி இறைவனால் நிகழ்கின்றது. இவ்வாறான இறைவன் உருவமாக, அருவமாக, அருவுருவமாக விளங்கியபோதிலும், இவையனைத்தையும் ஒன்றாக்கித் தாயான ஸ்வரூபத்திலே வழிபடுதல்தான், பெரும்பயனைத்தருமெனப் பிரபஞ்சவுற்பத்தி என்னும் நூலிலே கூறப்பட்டுள்ளது. இவ்வாறான சக்தி வழிபாடு ஈழத்திலே புகழ்பெற்ற வழிபாடாகக் காணப்படுகின்றது. தெல்லிப்பளை துர்க்காதேவி, நயினை நாகபூசணி, நல்லூர் வீரமாகாளி அம்மன், தாழையம்பதி துர்க்கை அம்மன், திருகோணமலை பத்ரகாளி அம்மன், வற்றாப்பளை கண்ணகை அம்மன், மாத்தளை முத்துமாரி அம்மன் போன்ற பல சக்தி தலங்கள் ஈழத்திலே பிரசித்திபெற்ற தலங்களாக விளங்குகின்றன.

பல தசாப்தங்களாக நடைபெறும் தமிழின அழிப்புப் போரில் மிகவும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுள் ஒன்றாகச் சாவகச்சேரிப் பிரதேசம் விளங்குகின்றது. ஆயினும் இங்குள்ள திருத்தலங்களின் பேரருள் காரணமாக இப்பிரதேசத்தை எதிரிகளால் நிர்மூலமாக்க முடியவில்லை. சாவகச்சேரிப்பிரதேசத்திலே காணப்படும் சக்திமிக்க ஆலயங்களுள் ஒன்றாகத் தாழையம்பதி ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம் விளங்குகின்றது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பவை ஒருங்கே அமையப்பெற்ற ஆலயமாக இவ்வாலயம் விளங்குகின்றது.

தாழையம்பதி துர்க்கை அம்மன் ஆலயம், சாவகச்சேரி கண்டிவீதியிலிருந்து, சுமார் ஒன்றரைக் கிலோமீற்றர் தூரத்திலே காணப்படுகின்றது. மட்டுவிலுக்கும் கல்வயலூருக்கும் இடையில் விளைவேலி என்னும் கிராமத்தில், வயலும் வயல் சார்ந்த இடமுமாகிய தாழை மரங்கள் நிறைந்துள்ள சோலைசூழ்ந்த சூழலில், ஸ்ரீ துர்க்கைஅம்பாள் எழுந்தருளியுள்ளாள். தமிழீழப்பிரதேசங்களுள் ஒன்றான யாழ்ப்பாணப்பிரதேசத்திலே துர்க்கை வழிபாடு, பிரசித்திபெற்ற வழிபாடாகக் காணப்படுகின்றது. உலகைக்காக்கும் மகாசக்தியாக விளங்கும் அன்னையானவள் யார் யார் எப்படி விரும்புகின்றார்களோ, அம்முறையிலே காட்சியளிக்க வல்ல தாயாக விளங்குகின்றாள்.

எங்கும் நிறைந்தவளாக விளங்கும்போது பூரணி என்றும், சகல வல்லமையும் கொண்டவளாக விளங்கும்போது ராஜராஜேஸ்வரி என்றும், காலசொரூபிணியாகும்போது காளியென்றும், வித்தையின் வடிவமாகும்போது சரஸ்வதி என்றும், தனதானியத்தைக்கொடுக்கும்போது இலக்குமி என்றும், ஞாலத்தை ஆதரிக்கும்போது மகாதேவி, பவதாரணி என்றும், யாவற்றிற்கும் மேலாக ஈஸ்வரனுக்கு ஒப்பாகும்போது துர்க்கை என்றும் துதிக்கப்படுகின்றாள்.

*வளரும்...*

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு




நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# "கமலா சிரித்தாள்!"

பவானி சச்சிதானந்தன் -கொழும்பு

கமலா சத்தமாக அழுது புலம்பிக் கொண்டிருந்தாள். "நான் போகமாட்டேன் அம்மா. எனக்குப் பயமாயிருக்குது. அம்மா அப்பாவை தம்பி தங்கச்சியையெல்லாம் பார்க்காமல் இருக்க முடியாது. நான் இங்கேயேயிருந்து விடுகிறேன். எனக்கு அந்த வீட்டில் யாரையும் தெரியாதே!. நான் எப்படி அங்கே போயிருப்பேன்" என அம்மாவைக் கட்டிப் பிடித்து அழுதாள்.

அவள் காலையிலிருந்து நிறைவான உணவென்று சொல்லிக் கொள்ளுமளவிற்கு ஒன்றும் சாப்பிடவும் இல்லைதான். சாப்பிடுமளவிற்கு அந்த வீட்டு சூழ்நிலமையுமில்லை. அப்பா அம்மாவிற்கு தோட்டத்தில் சரியான வேலையில்லை. வேலை நாட்கள் குறைந்ததால் சம்பள வரவு பெரிதாயில்லை. பொருட்களின் விலை அதிகரிப்பால் இருக்கின்ற கொஞ்ச காசில் போதுமான அதி முக்கியமான உணவுப் பொருட்களை வாங்கிடக் கூட முடியாத நிலமை. ஒரு நேர உணவையேனும் வயிறு நிறைய சாப்பிட முடியாத நிலை. வீட்டு அங்கத்தவர்களின் எண்ணிக்கை அதிகமென்பதாலும் பற்றாக்குறைக் கொஞ்சம் கூடுதலாகவே உரிமைக் கொண்டாடியது. இருந்தால் உண்டு, இல்லாவிட்டால் தேயிலைச் சாயம் மட்டுமே குடித்து, அதுவுமில்லாத போது தண்ணீரைக் குடித்து பசியை அடக்கி குறைந்த உணவுடனும் கூடிய வேலைகளோடும் வாழ்ந்துப் பழகி விட்டதனால் எந்தவொருயில் லாமையுமே அவர்களைப் பாதித்ததில்லை.

ஏதோ எல்லோரும் அன்போடு இருப்பதைப் பகிர்ந்து, விட்டுக் கொடுத்து ஒருத்தருக்கு ஒருத்தர் பாசத்தோடு சிறிய அறைகளில் பெரிய மனதுடன் வாழ்ந்துக் கொண்டிருக்கின்றார்கள். இல்லையென்பது அவர்களின் இருப்பிடம். இருப்பு என்பது அவர்களின் வெற்றிடம். ஆனாலும் என்ன செய்திட முடியும் வாழ்ந்துதானே ஆக வேண்டும். ஓரளவு வசதியோடு வாழ்ந்திட வழிகள் பலத் தேடுவார்கள். தேடியதில் கிடைக்கின்ற வழிகளோ உயர்ந்துக் காட்டிட, எட்டிப் பிடிக்க முடியாத மலை உச்சிகளாயிருக்கும்.

தியாகு அவசர அவசரமாய் கமலாவின் வீடு தேடி வந்தான். கமலாவின் அம்மா பூமணியையும், அப்பா வேலுவையும் சந்தித்தான். ஏதோ ரகசியமாய வர்களோடு கதைத்தான். அவர்களும் சரியென்று தலையசைத்திட தியாகுவின் முகத்தில் சந்தோசப் பிரகாசம் மிகுந்துக் காணப்பட்டது.

பூமணி கமலாவிடம் வந்து அன்பாய் தலையைக் கோதி ஆசையாய் அனைத்துக் கொண்டு " தியாகு மாமா உனக்கொரு வேலைப் பேசிக் கொண்டு வந்துள்ளார். உன்னை அழைத்துப் போகவா? யென்று கேட்குன்றார். நாங்களும் பரவாயில்லை, கூட்டிக் கொண்டுப் போய் சேர்த்து விடுங்கள் என்று கூறிவிட்டோம். பரவாயில்லைத் தானே! நீ போய் நல்லப்பிள்ளையாய் அவர்கள் சொல்கின்ற வேலைகளைச் செய்தால் அந்த வீட்டில் நீயும் ஒருத்தியாய் இருந்திடலாம்" என கூறியதும் தான் கமலாவால் கவலையோடு அழுகையை அடக்க முடியவில்லை. வீட்டாரை விட்டு விட்டு தனியாகப் போய் புதிய மனிதர்களுடன் இருக்குமளவிற்கு அவளுக்கு இன்னும் தைரியம், முடியுமென்ற மனசுப் பக்குவம் என்பன வளரவில்லை என்று தான் சொல்ல வேண்டும்.

தியாகுவோ எப்படிச் சரி அவளைக் கூட்டிச் சென்றிட வேண்டுமென்று ஒற்றைக் காலில் பிடிவாதமாய் நிற்கின்றான். அவன் ஒரு முதலாளி வீட்டுக்கு" பதினைந்து வயது நிரம்பிய சிறுமியொருத்தி இருப்பதாகவும், அவள் வீட்டார் தன்மேல் வைத்திருக்கும் நம்பிக்கையினால் கட்டாயம் தன்னோடு அனுப்பி வைத்திடுவார்கள் என்றும் ,நாளைக் காலையிலேயேக் கூட்டிக்கொண்டு வருவதாகவும்" வாக்குக் கொடுத்து விட்டு வந்துள்ளான். அதன் படி கமலாவைக் கூட்டிப் போய் அந்த வீட்டில் வேலைக்கு அமர்த்தினால் தியாகுவிற்கு தரகர் கொடுப்பனவும், கமலாவின் முதல் மாத சம்பளத்தில் பாதியும் கிடைத்து விடும். அந்த ஆசையில் அவன் துள்ளினான்.

பூமணியையும் வேலுவையும் உசுப்பேற்றி" மகளின் ஊதியம் வந்தால் உங்கள் குடும்பத்துக்கு மேலதிகமான வரவாயிருக்கும். கமலாவும் பசித் தாகமின்றி மூன்று வேளை உணவு கிடைக்கின்ற சந்தோசத்தில் தனியறை, கட்டில், காற்றாடி, தனிக் கழிவறையென சுதந்திரமாயிருப்பாள். நீங்கள் பயமில்லாது பிள்ளையை அந்த வீட்டுக்கு அனுப்புங்கள்" என தியாகு அவளின் பெற்றோரை நச்சரித்தான்.

தியாகுவைப் பார்க்க கமலாவுக்கு பயமாகவும் கோவமாகவுமிருந்தது. உடம்பெல்லாம் கொதித்தது. பாசத்தால் பிள்ளையை வீட்டு வேலைக்கு அனுப்ப மாட்டோமென பெற்றோர் முடிவெடுத்த போதும் பண ஆசையைத் தூண்டி விட்டு முடிவை மாற்றிடும் படி செய்து விடுவதையெண்ணி என்ன செய்வதென்று புரியாமல் தவித்தாள்.

என்னதானிருந்தாலும் அந்த வீடு மேலதிக பணத்தேவையொன்றின் வெற்றிடத்துடன் தானிருந்தது.

"பூமணி---- பூமணி...! என்ன வீட்டில் ஒரே சத்தம். கமலா ஏனிவ்வளவு சத்தமாய் அழுகிறாள். ஏதும் பிரச்சினையா, சுகமில்லையா?." எனக் கேட்டுக் கொண்டே கமலாவின் பரிமளா அத்தை வீட்டிற்குள் நுழைந்தாள். தியாகுவைக் கண்டதும்" ஓ--- நீயுமிங்கேதானிருக்கின்றாயா ? .என்றாள்.

"ஆமாம் தியாகு அண்ணா கமலாவுக்கு வேலையொன்று பேசிக் கொண்டு வந்துள்ளார். கமலா தானந்த வீட்டுக்குப் போக முடியாதென்று அடம் பிடிக்கிறாள். என்னத்தானிருந்தாலும் உடனேப் போகக் கொஞ்சம் பயமாகத்தானிருக்கும். போகப் போகச் சரியாகிடுமென்றாலும் கேட்க மாட்டேன் என்கிறாள்". என பூமணி ஆதங்கப்பட்டாள்.

பரிமளாவுக்கு கோபம் கோபமாய் வந்தது. என்னதானிருந்தாளும் இன்னொரு வீட்டாரை அதிகாரம் செய்து அதட்டிப் பேசிட பரிமளாவால் முடியவில்லை. மெதுவாகவே "என்ன வேலையாம் ? "எனப் பரிமளா பூமணியைப் பாரத்தாள். "யாரோ ஒரு முதலாளி வீடாம் எல்லா வசதிகளோடும் மாதம் பதினைந்தாயிரம் கொடுப்பனவோடு மூன்று நேர



சாப்பாடு என எல்லாம் கிடைத்து மூன்று மாதத்துக்கு ஒரு முறை வீட்டுக்கு வந்து விட்டுப் போக விடுவார்களாம். அங்கேயும் சிறு பிள்ளைகள் இரண்டுப் பேர் இருக்கின்றார்களாம். நாகரீகமாயிருந்திடலாமென தியாகு அண்ணா சொல்கிறார். சரிப் பரவாயில்லை போய் வேலை செய்யட்டுமேயென நாங்களும் அனுப்பி வைப்போமென முடிவு செய்தோம்". என்றாள் பூமணி.

பரிமளாவுக்கு கமலாவைப் பார்க்க பரிதாபமாகயிருந்தது. ஒரு கல்யாணம்! பிறகு! இரண்டு மூன்று பிள்ளைகள், வீட்டில் எல்லாமாதிரியான தேவைகளுக்குமே பற்றாக்குறை. இந்த லட்சனத்தில் தகப்பனுகளுக்கு மது ஒரு கேடு. என்ன பிளைப்பு பிளைக்கிறார்கள். பிள்ளைகள் வளரனும் படிக்கனும் நல்லத் தொழில்கள் செய்ய வேண்டுமென்ற அக்கறையெல்லாமில்லை. குறிப்பிட்டளவு வயது வந்தவுடன் பிள்ளைகளின் மனசைப் பற்றியோ பாதுகாப்புப் பற்றியோ சிந்திப்பதில்லை. வசதியானவர்களின் வீடுகளுக்கு எடுப்பிடிகளாய், அல்லது முழு நேர வேலையாளாய் அனுப்பி வருமானம் வந்தால் போதுமென்று நினைக்கின்றார்கள் . பிள்ளைகளின் எதிர்காலம் பற்றியெல்லாம் சிந்திக்காமல் எப்படிச் சரி வளர்ந்தால் சரி யென நினைக்கின்ற வசதியற்ற மக்களின் நினைப்பு.

மலையகத்திலிருந்து ஆண் பெண் பிள்ளைகள் நகரங்களிலுள்ள வசதியானவர்களின் வீடுகளுக்கு ஏதோவொரு தைரியத்தில் வேலைகளுக்கு வருகின்றார்கள் தான். வரும் போது அன்பு வார்த்தைகள் கனியக் கனியக் கொட்டித்தான் அழைத்து வரப்படுகின்றார்கள்.

ஆனால் வீட்டுவேலைகளுக்காகப் போகுமிடங்களில் மனித உருவில் தெய்வக்குணம் கொண்டோர் அமைந்தால் மட்டுமே சிறிய லயன் அறைகளிலுள்ள சுதந்திரத்தையும், ஏழ்மையான உறவுகளுக்கிடையே கிடைத்த அன்பு, பாசம், விட்டுக்கொடுப்பு எல்லாவற்றையும் மறந்து கவலைகளின்றி நாட்களை சொர்க்கமாக நினைத்து கடத்திட முடியும். மனித உருவில் மிருகங்கள், பேய்கள், பிசாசுகள் குடி கொண்ட இடங்களாய் அமைந்து விட்டால் எல்லா எதிர்ப்பார்ப்புகள், பிள்ளைகளின் எதிர்காலம் என எல்லாமே அங்கேயே புதைக்கப்பட்டு நாசமாகிவிடும்.

ஆக நல்லவர்கள் கெட்டவர்களென உணர்ந்திட நமக்கென்ன சாத்திரமா பார்க்கத் தெரியும். எனக்குத் தெரிந்த பிள்ளையொன்று பெரிய வியாபாரி வீட்டுக்கு பிள்ளைப் பார்த்துக் கொள்வதற்காக அழைத்துச் சென்றார்கள்"!. என பரிமளா பூமணியைப் பார்த்து தொடர்ந்து சில அறிவுரைகள் எனும் பெயரில் தன் கண்களால் பார்த்ததையும், காதுகளால் கேட்டதையும் கூறிக் கொண்டேப் போனாள்.

அந்தப் பெற்றோரும் பசிப் பட்டினியின்றி சாப்பிட்டுக் குடித்து நல்லக் கூலியோடு சந்தோசமாயிருக்கட்டும் என்ற கனவுகளோடுதான் அனுப்பினார்கள். ஏதோ பெற்றோருக்கு உழைத்துத் தராவிட்டாலும் தனக்குத் தனக்கு தேவையான சுய தேவைகளையேனும் நிறைவேற்றிக் கொள்ளட்டும் என்ற நினைப்பு வேறு அவர்களுக்கு!. ஆனால் அந்தப்பிள்ளையின் துரதிஷ்டம் போய் சேர்ந்தயிடத்தில் எஜமானியும் எஜமானரும்

மனித உருவில் பேய்களாய் அமைந்து விட்டார்கள். அந்தச் சிறுமியிடம் வீட்டு வேலை களையும் வாங்கி, தமது ஒருவயது குழந்தையின் வேலைகள் எல்லாவற்றையும் அவளை வைத்தே செய்வித்தார்கள்.

அவளை ஏதோ பெரிய வயதுப் பெண்ணைப்போல் நடத்தினார்கள். ஓய்வேயில்லாது அதைச் செய்திட்டாயா,? இதைச் செய்திட்டாயா? என வதையாய் வதைத்தார்கள். பணத்தால் வசதி வாய்ப்புகளால் பெரியவரகளாய் வளர்ந்திருந் தார்களேத் தவிர மனிதத்தன்மை, அன்பு, கருணை என்பனவற்றால் ரொம்பவே குறைவானவர்களாய் செயற்பாடுகளிலும், மற்றையவர்களை மதிக்கும் விடயத்திலும் ஆணவமிக்கவர்களாய் தென்பட்டார்கள்.

மூன்று, நான்கு கோடி ரூபா விலைமதிப்புள்ள அதிசொகுசு வாகனங்களில் பயணம் செய்வார்கள். சிறுமியும் குழந்தைக்குத் தேவையான எல்லாவற்றையும் வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ற கூடைப் பையொன்றில் வைத்து எடுத்துக் கொண்டு பின் அமர்வில் அமர்ந்திட வேண்டும். அதிசொகுசு உணவகங்களுக்கெல்லாம் செல்வார்கள். விலையுயர்ந்த உணவுகளையெல்லாம் ஓடர் செய்வார்கள். எந்த இடைஞ்சலுமில்லாமல் சாப்பிட்டு முடியும் வரை சிறுமியின் பொறுப்பிலேயே குழந்தையிருக்கும். அங்குமிங்கும் தூக்கித்திரிந்து விளையாட்டுக் காட்டிக்கொண்டிருப்பாள். சாப்பாட்டு வேளை முடிந்ததும் சிறுமிக்கு ஒரு "டீ பனிஸ்" வாங்கிக் கொடுப்பார்கள். எசமான் எசமானியிருவருக்கும் தெரியாமல் போய் விட்டது அவர்களுக்கு மட்டுமல்ல ஆசிய நாடுகளில் எல்லோருக்குமே மதிய உணவாக சோறுதான் பிடிக்குமென்றும், சிறுமி உற்பட அனைவருமே அப்படித்தான் பழக்கப்பட்டுள்ளார்கலென்றும். சிறுமியும் தன் பசிக்கு "பனிஸ் "சரி கிடைத்ததே என்ற சந்தோசத்தில் அவசர அவசரமாய் சாப்பிட்டாள்.

இப்படித்தான் நிறைய வசதிப் படைத்த வீடுகளில் வேலையாட்களாய் போய்ச் சேரும் பல பேருக்கு நடக்கின்றது. ஆனால் இதையெல்லாம் வெளியில் சொல்லிக் கொள்ள முடியாமைக்குப் பல காரணங்களுண்டு. சொன்னால் எம்மை உரிமையாளர்கள் அடிப்பார்கள். மீண்டும் வேலைக்குச் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். தம் மீது தவறான குற்றச்சாட்டுக்களை வைத்து தண்டித்து விடுவார்கள். தம் நிலையறிந்தால் தம் வீட்டார்கள் கவலைப் படுவார்கள். வீட்டுக்கு வருமானம் கிடைக்காமல் போய் விடும்.

வேலையில்லாமல் எம் வீட்டுக்குத் திரும்பப் போய்விட்டால் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் "ஏதோ பிழை செய்து விட்டு வந்துட்டான்(ள்)" எனக் குறைவாகப் பிழையாகக் கதைப்பார்கள். இப்படியான எண்ணங்களை வளர்த்துக் கொண்டு வெளியில் உண்மைகளைச் சொல்லிட அஞ்சுகறார்கள். இதேப் போன்றுதான் வேலைக்கு ஆண் பெண் தேவையென்று விளம்பரங்கள் செய்யும் சிலயிடங்களில் "மலையகத்து ஆண்கள் பெண்கள் தேவை"யெனக் குறிப்பிட்டு விளம்பரம் செய்திருப்பாரகள். காரணம் சிறிய கொடுப்பனவுகளில் கூடுதலான வேலைகள் வாங்குமெண்ணங்களை முன் வைத்தே அப்படி செய்வார்கள்.

அதேப் போன்று எல்லா மாதிரியான சிக்கல்களையும் முகம் கொடுத்துப் பழகிக் கொண்டாலும், வசதிப் படைத்தவர்களிடம் வேலைக்குச் சேர்ந்தால் இப்படித்தான் போலுமென கருதி சமாளிக்கத் துணிந்து விடுகின்றார்கள். அதிகமான வீடுகளிலும் வேறுயிடங்களிலும் அவர்களுக்குள்ளே பிரச்சினைகள், வாக்குவாதங்கள் ஏற்படும்போது ஆங்கில வார்த்தைகளையேப் பயன் படுத்துவார்கள். கூளிகளுக்கு என்னப் பிரச்சினையென்றே விளங்காதிருப்பதற்காகவே ஆரம்பிக்கும் போதே ஆங்கிலத்தில் ஆரம்பிப்பது.

"ஆகவே பூமணி நீயும் வேலுவும் நான் சொல்வதைக் கேட்பீங்களாயென எனக்குத் தெரியாது. இருந்தாலும் சொல்கிறேன். இந்தச் சின்ன வயதில் அவளுக்கு விருப்பமில்லாமல் தெரியாத இடத்துக்கு அனுப்ப வேண்டாம். பெரிய சிரமங்களையெல்லாம் தாண்டி வளர்த்திட்டீங்க!. இன்னும் கொஞ்சக் காலம் படிக்க வையுங்கள். அதன் பிறகு பிள்ளைகளே உணர்ந்து நாமும் தொழில்களுக்குப் போனால் நல்லாயிருக்கும் வீட்டுக்கு, குடும்பங்களுக்கு ஏதேனும் வகையில் எமது உழைப்பும் உதவியாயிருக்குமென நினைக்கும் வரை ஓரளவுக் கல்வியைக் கொடுங்கள். பிறகு தேவைகள் விளங்கி இடங்களைத் தொழில்களைத் தெரிவு செய்து செயற்படுவார்கள். வீட்டார்களுக்கும் பிள்ளைகளுக்கும் நல்லப் புரிந்துணர்வு ஏற்பட்டு அதுவே எல்லோரின் நல்வளர்ச்சிக்கும் துணையாயிருக்கும்."

எனப் பரிமளா கூறிக்கொண்டேப் போக வேலுவுக்கும் பூமணிக்கும் சரியென்றேப்பட்டது. தியாகுவைப் பார்த்து "நாம் கமலாவை அனுப்ப விருமபவில்லை யெனவும், குறை நினைக்க வேண்டாம்" எனவும் கூறினார்கள்.

தியாகுவின் முகம் சுறுங்கிக் கருத்து என்னமோ போலாகிப் பரிமளாவைக் கோபப் பார்வையால் எரிப்பவன் போல் பார்த்தான். பரிமளாவும் அதை அவதாணித்தாள். ஆனாலும் பொருட்படுத்தவில்லை. இளம் பெண்ணொருத்தியை வேலைக்காரி என்றப் பட்டத்திலிருந்துக் காப்பாற்றி விட்டாள். அதுவேப் பெரிய புண்ணியம்.

கமலா பரிமளா அத்தைக்கு நன்றிக் கூறி பூமணியைக் கட்டிக் கொண்டு மகிழ்ச்சியைத் தெரிவித்து சிரித்தாள்.

முற்றும்.

# “பூர்வீக மண்ணில் தமிழ் வளர்க்கும் புலம்பெயர்ந்த தமிழர்:” சிங்கை முஸ்த.:.பாவிற்கு தஞ்சை பல்கலைக்கழகம் பாராட்டு



நக்கீரன்

**கோ**லாலம்பூர், ஆக.21:

சிங்கப்பூரில் வாழ்ந்தாலும் பூர்வீக மண்ணில் தமிழ் வளர்க்கும் செம்மாந்த பணியை அயராது மேற்கொண்டு வருகிறார் சிங்கை முஸ்தபா தமிழ் அறக்கட்டளை நிறுவனரும் முத்துப்பேட்டை ரகமத் பெண்கள் மெட்ரிகுலேஷன் பள்ளி தாளாளருமான எம்.ஏ. முஸ்த.்.பா என்று தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் வி.திருவள்ளுவன் பாராட்டு தெரிவித்தார்.



*ரக்மத் பெண்கள் மெட்ரிக் பள்ளியில் “நீரின்றி அமையாது உலகு” என்ற தலைப்பில் நடைபெற்ற ஓவியப் போட்டியில் முதலிடம் பிடித்த மாணவி பிரியதர்ஷினிக்கு சான்றிதழையும் ரூ.10,000 ரொக்கப் பரிசையும் துணைவேந்தர் வி திருவள்ளுவன் வழங்கியபோது, பள்ளி தாளாளர் எம்.ஏ. முஸ்தபா உள்ளிட்டோர் உடன் உள்ளனர்.*

முத்துப்பேட்டை ரகமத் பெண்கள் மெட்ரிகுலேஷன் பள்ளியின் வெள்ளி விழா, ஆகஸ்ட்19 வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட துணைவேந்தர், கனடாவின் வெள்ளி விழா இதழ் உதயனிடம் ரகமத் மெட்ரிகுலே‘ன் பள்ளி குறித்தும் அதன் தோற்றுநர் எம்.ஏ. முஸ்த.்.பா குறித்தும் பேசினார்.

திரும்பும் திசை எங்கும் நிலம் என்னும் நல்லாள், பச்சை வண்ண பட்டாடை உடுத்தியதைப் போன்று வயல்வெளியாகக் காட்சிதரும் பின்தங்கிய பகுதியான முத்துப்பேட்டையில் பெண் கல்வியை இலக்காகக் கொண்டு உலகத் தரம்கொண்ட மெட்ரிகுலேஷன் பள்ளியை நடத்திவரும் நற்றமிழ் நெஞ்சார் முஸ்த.்.பாவின் தமிழ்த் தொண்டை எத்துணைப் பாராட்டினாலும் தகும் என்றார்.

வேளாண் தொழிலை மட்டுமே ஆதாரமாகக் கொண்ட இத்தகைய நடுத்தர பட்டணத்தில் பெண்களின் முன்னேற்றத்தை முன்னெடுக்கும் துணிவும் பரந்துபட்ட நோக்கும் அதைவிட உயர்வானது.

கிராம சூழலில் வாழ்ந்தாலும் அறிவியல் பார்வையும் ஆங்கில புலமையும்மிக்க தமிழ் மாணாக்கியரை பல்லாயிரக் கணக்கில் கடந்த கால் நூற்றாண்டாக உருவாக்கிவரும் ரகமத் மெட்ரிகுலேஷன் பள்ளி, கல்வித் தரத்திலும் தேர்ச்சி விகிதத்திலும் உயர்ந்து விளங்குவது பாராட்டிற்கு உரியது என்றார் துணை வேந்தர்.

இதேத் தமிழ்மகன் முஸ்த.்.பா, தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளான இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காகவும் தொய்வின்றி பாடாற்றி வருகிறார். இதன்தொடர்பில், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஓர் அறவாரியத்தையும் அவர் ஏற்படுத்தி இருக்கிறார்.



20-ஆம் நூற்றாண்டின் மையப் பகுதியில் மலேசிய-சிங்கப்பூர் நாடுகளில் அருந்தமிழ் வளர்ச்சிக்காக நறுந்தொண்டாற்றிய “தமிழவேள்” கோ.சாரங்க-பாணியின் பெயரில் உருவாக்கப்பட்ட அவ்வாரியத்தின் சார்பில் ஈராண்டுகளுக்கு ஒரு முறை சோழப் பெருவளத்தான் கரிகாலன் பெயரில் இலக்கிய விருது வழங்கப்படுகிறது.

சிங்கப்பூர், மலேசியா, இலங்கை நாடுகளைச் சேர்ந்த இலக்கியவாணர்களுக்கு கரிகாலன் விருதுடன் பொற்கிழியும் வழங்கப்படுகின்றன.

தவிர, மலேசியாவில் பத்திரிகை உலகில் சாதனை படைத்த ஆதி. குமணன் பெயரில் ஓர் இருக்கையையும் நூலகத்தையும் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தி, அதன்வழி தமிழ்ப் பல்கலைக்கழக மாணவர்கள், தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் காலத்தே நிகழும் தமிழ் இலக்கிய-பண்பாட்டு வளர்ச்சி குறித்து அறியவும் வகைசெய்துள்ளார் தமிழ் மகனார் எம்.ஏ. முஸ்த.்.பா. அவர், இன்னும் பாரிய அளவில் தமிழ்த் தொண்டாற்ற தமிழன்னை அவருக்கு துணை இருக்க வேண்டும் என்ற ஆவலை, கனடாவில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களிடையே இனம்-மொழி சார்ந்து பன்முனைப் பணியாற்றும் உதயன் இதழின்வழி தெரிவிப்பதில் பெருமகிழ்வெய்துவதாக துணைவேந்த வி.திருவள்ளுவன் தெரிவித்தார்.

குறிப்பாக, தமிழ் இலக்கியத்தின் நவீன பாட்டைக்கு பெரும்பங்கு வகித்த கவிக்கோ அப்துல் ரகுமானின் பெயர், ஆஸ்திரேலிய நாட்டில் ஒரு வீதிக்கு சூட்டப்பட்டதில் முஸ்த.்.பாவின் பங்கு குறிப்பிடத்தக்கது என்றும் துணைவேந்தர் நினைவுகூர்ந்தார்.



சிங்கப்பூர் வர்த்தகப் பெருமகனுமான எம்.ஏ. முஸ்த.்.பா, தன்னுடைய தாயார் ரகமத் அம்மையாரின் பெயரில் 25 ஆண்டுகளுக்கு முன்னம் நிறுவிய பெண்கள் மெட்ரிகுலேஷன் பள்ளியின் வெள்ளி விழாவில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றியபோது, “தாய்மொழிக் கல்வியே தலைசிறந்த சமுதாயத்தை உருவாக்கும். வேற்று-மொழி கலப்பில்லாமல் தாய்மொழியில் பேசுவதை மாணவர்கள் அனைவரும் உறுதியேற்க வேண்டும்; ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற வளர்ந்த நாடுகளில் எல்லாம் தாய் மொழிவழி கல்வியே முன்னிலைப் படுத்தப்படுகிறது” என்றார்.



பள்ளித் தாளாளர் எம்.ஏ. முஸ்தபா தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் மேலும் பேசிய துணைவேந்தர் வி.திருவள்ளுவன், “முத்துப்பேட்டை போன்ற பின்தங்கிய பகுதியில் பெண்களுக்கென நல்லொழுக்கத்துடன் ஆளுமைத் திறனை வளர்க்கும் வகையில் வழிநடத்தப்படும் இப்பள்ளி, தேர்ச்சி விகிதத்திலும் சாதனை படைத்து வருகிறது; இதற்கு காரணமாக இருக்கும் பள்ளி தாளாளர் எம்.ஏ. முஸ்தபா மற்றும் முதல்வர்-ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரையும் பாராட்டுகிறேன்” என்றார்.

பெற்றோர்கள், தங்கள் பிள்ளைகளின் எண்ணத்தையும் இலக்கையும் அறியாமல் தங்களின் விருப்பத்தை அவர்களிடம் திணிக்கும் சூழலில், மாணவர்கள் தங்களுடைய சிந்தனையையும் செயல்படுத்த முடியாமல் பெற்றோர்களுடைய எண்ணத்தையும் ஈடேற்ற முடியாமல் இரண்டுங்கெட்ட நிலைக்கு ஆட்பட நேரிடும் எனவே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் விருப்பத்தை அறிந்து, அவர்கள் தம் வாழ்க்கையில் சாதிக்கவும் உயர் நிலையை அடையவும் துணை நல்க வேண்டும்; அதே வேளை, தங்களின் கருத்தை வலியுறுத்துவதற்கு மாறாக, ஆலோசனை என்னும் வகையில் வெளிப்படுத்துவதிலும் கருத்தாடுவதிலும் தவறுநேர வாய்ப்பிருக்காது.

குறிப்பாக, பெற்றோர்கள் மற்ற மாணவர்களை தம் பிள்ளைகளுடன் ஒப்பிட்டு பேசினால், அவர்களுக்கு தாழ்வு மனப்பான்மை ஏற்படுவதுடன், மனதளவில் பாதிப்பையும் ஏற்படுத்தும் என்பதை உணர வேண்டும்.

விடாமுயற்சியுடன் செயல்பட்டால் வாழ்வில் உச்சத்தை தொடலாம் என்பதற்கு ஓர் உதாரணமாக ஒரு காவலரின் மனைவியான அம்பிகா என்பவர், திருமணம் ஆகி குழந்தைகள் பிறந்த நிலையிலும் அரசு நடத்தும் சிவில் சர்வீஸ் என்னும் குடிமைத் தேர்வை எழுதமுயன்று, மூன்று முறை தோல்வி அடைந்த நிலையிலும் விடாமுயற்சியுடன் செயல்பட்டதன் விளைவாக தேசிய அளவில் 168-ஆவது இடத்தில் தேர்ச்சி பெற்று மும்பையில் பெண் சிங்கமாக சட்டம் ஒழுங்கை சீரியமுறையில் செயல்படுத்தி வரும் ஐபிஎஸ் அதிகாரியாக தன்னை நிலைநிறுத்தி உள்ளார் என்பதை சுட்டி காட்டி மாணவியர் உள்ளத்தில் எழுச்சியை ஏற்படுத்தினார்.

இற்றை நாட்களில், பெற்றோர் தங்களின் பிள்ளைகளுடன் செலவிடும் நேரம் மிகக்குறைவாக உள்ளதால், மாணவ-மாணவியரும் கணணி, செல்பேசியே கதி என்ற சூழல் ஏற்பட்டுள்ளது; இந்த நிலை மாற வேண்டும் விவேக தொலைபேசிகளை மாணவச் செல்வங்கள் அதிக அளவில் பயன்படுத்துவதை பெற்றோர் கண்காணிப்பது அவசியம்.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் பெண் கல்வி அவசியம் என்பதை சுட்டிக்காட்டிய துணைவேந்தர், தற்போது பல்வேறு துறைகளிலும் பெண்கள், ஆண்களுக்கு இணையாக பரிணமித்து வருவதையும் எடுத்தியம்பினார்.

இந்நிகழ்ச்சியில், முன்னதாக, பள்ளி முதன்மை முதல்வர் ஆர். சகுந்தலா வரவேற்புரை ஆற்றினார்.

மாவட்டத்தின் பல்வேறு பள்ளிகளில் நடைபெற்ற சுதந்திர தின விழா பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு துணைவேந்தர் பரிசு வழங்கினார்.

இந்தப் பள்ளியில் கடந்த 25 ஆண்டுகளாக தொடர்ந்து எஸ்எஸ்எல்சி, மேல்நிலைக் கல்வித் தேர்வுகளில் 100% தேர்ச்சி பெற காரணமாக இருக்கும் பள்ளி முதல்வர் மற்றும் ஆசிரியர்களுக்கு பள்ளி தாளாளர் எம்.ஏ. முஸ்தபா பரிசும் சான்றிதழும் வழங்கினார்.

பள்ளி முதல்வர் டிசோசா டோனியின் நன்றியறிதலுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.



**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**

# இவ்வார ராசிபலன்

**26-08-2022 வெள்ளி தொடக்கம் 01-09-2022 வியாழன் வரையும்**



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**மேஷம்:** கவலைகள் ஒழியும் வாரம். விளையாட்டுத்துறையில் வெற்றி கிடைக்கும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். புதிய நட்பு ஏற்படும். நண்பர்களால் உதவி உண்டு. கடன் பிரச்சனைகள் அகலும். தகுதிகள் உயரும். புதிய எண்ணம் உருவாகும். பெருமிதம் நிறைந்த காலம். பூமியால் லாபம் உண்டு. கல்வியில் ஆர்வம் உண்டு. மங்களச் செய்தி வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பணவரவு திருப்தி தரும். பொருளாதாரம் உயரும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். பிள்ளை வழி செலவுகள் கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. மனோ தைரியம் அதிகரிக்கும். பால் தானம் செய்வதால் பாவங்கள் போகும். புத்தி சாதுர்யம் கூடும். கணவன் மனைவி அன்பு அதிகரிக்கும். கல்வி ஈடுபாடு அதிகரிக்கும். பணப்பிரச்சனைகள் தீரும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். வெறுப்புக்கள் அகலும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். திருப்திகள் பெருகும். ஆரோக்கியம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. வியாபாரம் செழிக்கும். மன அமைதி கூடும். பயணத்தடை ஏற்பட்டு விலகும். காதல் கைகூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அதிதேவதை, அதிர்ஷ்ட எண்: 8,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: சில்வர்கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,V




**ரிஷபம்:** ஆரோக்கியம் சீராகும். மாற்று யோசனை பலன் தரும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். உத்தியோக உயர்வு உண்டு. மனஅமைதி கூடும். பயணத்தடை ஏற்படும். கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். வழக்குகள் திருப்தி தரும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கிகள் வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். உறவுகளால் செலவுகள் கூடும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. மனநிம்மதி அதிகரிக்கும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். திறமைகள் வெளிப்படும். கர்மவினைகள் அகலும். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. வார்த்தைகளில் நிதானம் தேவை. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். சகோதர வழியில் சகாயம் உண்டு. காதலர்கள் தம்பதியாவார்கள். பங்குச்சந்தையில் பணம் புரளும். செல்வாக்கு மேம்படும். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். மதிப்பும், மரியாதையும் உயரும். பணவரவு திருப்தி தரும். செயல்பாட்டில் தீவிரம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கனக துர்க்கை அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**மிதுனம்:** வீண் விரயங்கள் குறையும் வாரம். முன்கோபத்தை குறைக்கவும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். உடல்நலனில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் கிடைக்கும். உற்சாகம் அதிகரிக்கும். திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிட்டும். அரசு வழியில் கவனம் தேவை. காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பங்குச்சந்தை லாபம் தரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு பெருகும். பித்ருக்கள் சாபம் நீங்கும். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பணநடமாட்டம் கூடும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். உடல்நலம் மேம்படும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். துன்பங்கள் அகலும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். மனக்கசப்பு நீங்கும். நல்லோர்களின் பாராட்டுக் கிடைக்கும். லஷ்மி கடாட்ஷம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகன்னியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,4,1,3
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,E




**கடகம்:** புகழும், புண்ணியமும் சேரும் வாரம். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். தன்னம்பிக்கையும் துணிச்சலும் மேலோங்கும். வேண்டிய வரம் கிட்டும். நட்பு வட்டம் விரிவடையும். சேமிப்பு வளரும். செய்த்தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். பெண்களுக்கு மன அமைதியும், மகிழ்ச்சியும் கிட்டும். புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். சுதந்திரமாக செயல்படுவீர்கள். பெயர் புகழ் கௌரவம் செல்வாக்கு உயரும். எதிர்ப்புக்கள் விலகும். தென்றல் வீசும். இல்வாழ்வில் இனிமை கூடும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். நலமே விளையும் இனிய வாரமாகும். கணவன், மனைவி உறவில் களிப்புறவு உண்டாகும். இல்லத்தில் மனமகிழ்ச்சி கிட்டும். புதிய வேலை முயற்சி பலிதமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். புண்ணியம் சேரும் காலம். ஆன்மீக ஈடுபாடு கூடும். பொருளாதாரம் உயரும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். உடல்நலம் சீராகும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். அலைச்சல் அதிகரிக்கும். பணவரவு கூடும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். ஒரு சிலருக்கு கௌரவப் பதவி தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். செய்த்தொழில் சிறக்கும். பணநடமாட்டம் கூடும். களவுப்போன பொருள் கிடைக்கும். ஆடம்பரச் செலவுகள் கூடும். உயர்வு பெறும் காலம். திடீர் செலவு ஏற்படும். மங்களச்செய்தியால் மனம் மகிழும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 6,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,R




**சிம்மம்:** தொட்டது துலங்கும் வாரம். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உற்சாகம் களைகட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். பணியில் உயர்வு கிட்டும். பணிவும், துணிவும் கூடும். கஷ்ட காலம் மறையும். சோதனைகள் நீங்கும். கடல் கடந்தப் பயணம் உண்டாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உடன்பிறப்புக்களால் உதவி கிட்டும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். எதிரிகளால் ஏற்றம் கிட்டும். பொது வாழ்வில் புகழ் கூடும். மேன்மையான எண்ணம் உருவாகும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப் போகும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். அத்தியாவசிய செலவு அதிகமாகும். உறவினர் வருகை உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். திட்டமிட்ட செயல் வெற்றி பெருகும். விவேகம் கூடும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். மனஅமைதி சீர் குலையும். மறைமுக எதிர்ப்பு வலுக்கும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பணியில் கண்டிப்பு தேவை. எதிரிகளின் தொல்லை குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக மூர்த்தி, அதிர்ஷ்ட எண்: 4,7,6,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,J




**கன்னி:** செல்வாக்கு பெருகும் வாரம். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். உடல்நிலையில் கவனம் தேவை. நட்பில் பிரிவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. எண்ணங்கள் மாறுபடும். தனவரவு தடைப்படும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். முகப்பொலிவு கூடும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுபச்செய்திகள் வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும். சுயத்தொழில் வாய்ப்பு அமையம். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. உணவுத்தொழில் உயர்வு பெறும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். வெளியூர் பயணம் நன்மை தரும். நண்பர்களால் நன்மை கூடும். உடல் வலி தோன்றி மறையும். கடன் சுமை குறையும். விபரீத போக்கு மறையும். பேச்சில் கம்பீரம் இருக்கும். பூர்வீகச் சொத்து கிட்டும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். கல்வியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். குடும்ப பாசம் அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். கடன் தொல்லை நீங்கும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைக்கூடும். மன சந்தோஷம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 3,5,7,9
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,D




**துலாம்:** இனிப்பானச் செய்திகள் வரும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். நட்பு வட்டம் விரிவடையும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றிபெறும். எண்ணம் வண்ணமயமாகும். எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பணியில் இடமாற்றம் உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் வளர்ச்சி கூடும். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். சந்தோஷம் அதிகரிக்கும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பதவி உயர்வு தாமதமாகும். எண்ணங்கள் பலிதமாகும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். வாகனச்செலவுகள் அதிகரிக்கும். தாய்வழி உறவில் தகராறு குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். கடன்சுமை குறையும். காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். கணவன், மனைவி உறவு இனிக்கும். நீண்டதூரப் பயணம் லாபம் தரும். அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவர். வேண்டும் வரம் கிட்டும். பெருமைகள் சேரும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகள் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீவேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,1,2,9
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,U




**விருச்சிகம்:** தன்னடக்கத்தோடு செயல்படும் வாரம். காரிய வெற்றி தரும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். மனக்குழப்பம் தீரும். புதிய கடன் வாங்க நேரிடும். தேக பலம் கூடும். இல்லத்தில் அமைதி கூடும். பணவரவு திருப்தி தரும். தொழில் முயற்சி வெற்றி தரும். நண்பர்கள் உதவி கிட்டும். குடும்பத்தில் அமைதி உண்டு. சுபகாரியம் கைகூடும். சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டும். ஞாபகத்திறன் அதிகரிக்கும். வியாபாரம் வெற்றி தரும். மாணவர்களுக்கு சாதகமான காலம். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. சேமிப்பு வளரும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. அன்யோன்யம் அதிகரிக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். உடல்நலனில் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. புத்திரர் வகையில் சந்தோஷம் கூடும். பூமியால் நன்மை உண்டு. குடும்பத்தில் குழப்பம் நீங்கும். கலைந்த குடும்பம் ஒன்று சேரும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். அவமானங்கள் அகலும். போட்டிகள் உருவாகும். ஆண்களின் அதிகாரம் உயரும். பெண்களால் பெருமை சேரும். தொட்ட காரியம் ஜெயமாகும். எதிர்ப்புக்கள் உருவாகி மறையும். வறுமையின் வாட்டம் குறையும். பெருமை மிக்க காலமாக அமையும். பொருளாதார நிலை உயரும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். மன அமைதி கிடைக்கும். அலைச்சல் ஆதாயம் தரும். வளமான சிந்தனை உருவாகும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பணியாட்கள் ஆதரவு பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 6,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N

(தொடர்ச்சி 33 பக்கம்)

# இவ்வார ராசிபலன்

(32 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** பதவி உயர்வு கிடைக்கும் வாரம். நல்ல செய்திகள் நாடி வரும். இடையூறு அகலும். எதிரிகளின் தொல்லை குறையும். பணத்தேவை அதிகரிக்கும். முயற்சிகள் பலன் கொடுக்கும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். தொழில் வளர்ச்சி பெருகும். பொது வாழ்வில் புகழ் கூடும். பெண்களுக்கு பெருமை சேரும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். நலம் காணும் காலம். நிர்வாகச் செலவு ஏற்படும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் வெற்றி தரும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மை உண்டு. தேக ஆரோக்யம் மிளிரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. மன பயம் ஏற்படும். முத்தான வாய்ப்பு பெருகும். படிப்பில் கவனம் தேவை. உடல் அசதி உண்டாகும். பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். போட்டிகள் கடுமையாகும். வேலை பளு குறையும். மாற்றங்களை சந்திப்பீர்கள். புதிய முயற்சி பலன் தரும். எண்ணங்கள் ஏற்றம் தரும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் தரும். கலைத்துறையில் கௌரவம் கூடும். கனவு பலிதமாகும். அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். பணிவு அவசியம். பொறுமையைக் கையாள வேண்டும். இயந்திர பணியில் நிதானம் தேவை. புதிய நட்பில் எச்சரிக்கை தேவை. சொல்லில் கவனம் தேவை. அலுவலக பணியில் கவனம் தேவை. எதிர்பார்ப்புக்கள் கூடும். பிள்ளைகளால் மேன்மை உண்டு. தந்தையால் நலன் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,Q





**மகரம்:** மனதில் மகிழ்ச்சி ஏற்படும் வாரம். கலை ஆர்வம் கூடும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மையுண்டு. குடும்ப தேவை அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். உறவுகளால் நன்மை உண்டு. பயணம் தடைப்படும். கூட்டுத்தொழிலில் பிரிவு ஏற்படும். பணியாளர்களின் பாராட்டு கிட்டும். எதிர்பாராத செலவு ஏற்படும். கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மனக்கலக்கம் ஏற்படும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். விவசாயிகள் பயன் பெறுவர். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். வேற்று இன நட்பு கிட்டும். கல்வித்தடை ஏற்படும். உத்தியோகம் உன்னதம் தரும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும் பொறாமைகள் விலகும். வெகுமானம் உண்டு. பொருள் சேர்க்கையுண்டு. அரசாங்க அனுகூலம் உண்டு. எதிலும் எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். அலுவலக பணி அனுகூலம் தரும். காரியத்தடை அகலும். பெருமைகள் கூடும். வறுமைகள் அகலும். நன்மைகள் பெருகும். வீடு, மனை யோகம் உண்டு. விவசாயம் லாபம் தரும். சுபச்செய்தி கூடி வரும். கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். சகோதரியால் லாபம் உண்டு. சாதனை படைக்கும் காலம். பிள்ளைகளால் பெருமை சேரும். அரசியல் லாபம் தரும். வில்லங்கம் ஏற்படும். விரக்திகள் விலகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூத வழிபாடு, அதிர்ஷ்ட எண்: 6,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,C




**கும்பம்:** சாதனை படைக்கும் வாரம். பிள்ளைகளால் பெருமை சேரும். அரசியல் லாபம் தரும். வேலை பளு அதிகரிக்கும். வில்லங்கம் ஏற்படும். விரக்திகள் மறையும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். புதிய பொருள் சேரும். பழையக்கடன் வசூலாகும். புதிய நட்பு உருவாகும். வேண்டாத விஷயங்கள் விலகும். உடல் உபாதை அதிகமாகும். குடும்ப ஒற்றுமை நிறையும். குதூகலம் அதிகமாகும். மனோ பயம் நீங்கும். மருத்துவச் செலவு ஏற்படும். உறவினர்களால் தொல்லை உண்டு. பிள்ளைகளால் பெருமை உண்டு. வியாபாரத்தில் நன்மை உண்டு. கூட்டுத்தொழிலில் லாபம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. இல்லத்தில் மகிழ்ச்சியும், மனஅமைதியும் கூடும். கடன் கச்சைகள் தீரும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். மூத்தோர்கள் மனக்குறை அகலும். விருந்தினர் வருகை உண்டு. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். குடும்ப அன்யோன்யம் கூடும். எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். முயற்சிகள் அதிகம் தேவை. திருப்பங்கள் நிறைந்த காலம். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. ஆரோக்கியம் கூடும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். நன்மைகள் நாடி வரும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். சட்டம் சாதகமாகும். பட்டம் பதவி தேடி வரும். முன்னேற்றம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 1,5,3,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,H




**மீனம்:** உதவி கிட்டும் வாரம். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். பகையாளிகளின் நிலை உயரும். கடன் தொல்லை தீரும். கௌரவம் உயரும். கற்பனை வளம் அதிகரிக்கும். கட்டிட தொழில் லாபம் தரும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் கூடும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும். அற்புதமான காலம். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. முன்கோபத்தை குறைக்க வேண்டும். உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். கலைத்தொழிலில் கவனம் தேவை. பக்குவமான பேச்சு பயன் தரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து கிடைக்கும். புதிய முதலீடு லாபம் தரும். தேக ஆரோக்கியம் சீராகும். பூமி வாங்கும் யோகம் உண்டு. எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். தொல்லைகள் ஒழியும். கன்னிப்பெண்களிடம் கவனம் தேவை. கால்நடைகளால் பலன் உண்டு. ஆடை, அணிகலன் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் உண்டு. சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். ஆதாயம் பெருகும் காலம். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்புக் கூடி வரும். பொறியியல் துறை லாபம் தரும். புதிய சிந்தனை உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,5,9,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Q

## நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க கோடை கால ஒன்றுகூடலும், வருடாந்த பொதுக்கூட்டமும் - 2022

---

எதிர்வரும் 27/08/2022 சனிக்கிழமையன்று
Scarborough, Milliken பூங்காவின், 'B' கூடாரத்தில்
காலை 10:00 மணிக்கு
கனடா, நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின்
வருடாந்த பொதுக் கூட்டம் நடைபெறவுள்ளது.
அதனைத் தொடர்ந்து முற்பகல் 11:00 மணிக்கு
சங்கத்தின் கோடை கால ஒன்றுகூடல் ஆரம்பமாகும்.

கனடா, நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின்
அனைத்து உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் மற்றும்
நலன் விரும்பிகள் அனைவரையும் இக்கூட்டத்திலும்,
ஒன்றுகூடலிலும் கலந்து கொள்ளுமாறு
தாழ்மையுடன் அழைக்கின்றோம். நன்றி!

**ரதி**
செயலாளர்
கனடா, நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

---

**மேலதிக தொடர்புகளுக்கு:**
(647) 299-7443



# அன்பின் தொனி - 660

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**பொய்யான தேவர்களின் விக்கிரகங்கள்**

**மரமும் கல்லும்**

• நீங்கள் உங்களுக்கு விக்கிரகங்களையும் சுரூபங்களையும் உண்டாக்காமலும், உங்களுக்குச் சிலையை நிறுத்தாமலும், சித்திரந்தீர்ந்த கல்லை நமஸ்கரிக்கும்பொருட்டு உங்கள் தேசத்தில் வைக்காமலும் இருப்பீர்களாக, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். - **லேவியராகமம் 26: 1**

• கர்த்தர் உங்களைப் புறஜாதிகளுக்குள்ளே சிதற அடிப்பார், கர்த்தர் உங்களைக் கொண்டு போய் விடப்போகிற ஜாதிகளிடத்திலே கொஞ்ச ஜனங்களாய் மீந்திருப்பீர்கள். அங்கே காணாமலும் கேளாமலும் சாப்பிடாமலும் முகராமலும் இருக்கிற மரமும் கல்லுமான, மனுஷர் கைவேலையாகிய தேவர்களைச் சேவிப்பீர்கள். - **உபாகமம் 24: 27-28**


• அவர்களுடைய தேவர்களை நெருப்பிலே போட்டுவிட்டது மெய்தான், அவைகள் தேவர்கள் அல்லவே, மனுஷர் கைவேலையான மரமும் கல்லும்தானே, ஆகையால் அவைகளை நிர்த்தூளி யாக்கினார்கள்.
- **2 ராஜாக்கள் 19: 18**

• தச்சன் நூல்பிடித்து, மட்டப்பலகையால் மரத்துக்குத் குறிபோட்டு, உளிகளினால் உருப்படுத்தி, கவராசத்தினால் அதை வகுத்து, மனுஷ சாயலாக மனுஷரூபத்தின்படி உருவமாக்குகிறான், அதைக் கோவிலிலே நாட்டி வைக்கிறான். அவன் தனக்குக் கேதுருக்களை வெட்டுகிறான், ஒரு மருத மரத்தையாவது ஒரு கர்வாலிமரத்தையாவது, தெரிந்துகொண்டு, காட்டுமரங்களிலே பெலத்த மரத்தைத் தன் காரியத்துக்காக வளர்க்கிறான், அல்லது அசோகமரத்தை நடுகிறான், மழை அதை வளரச்செய்யும். மனுஷனுக்கு அவைகள் அடுப்புக்காகும்போது, அவன் அவைகளில் எடுத்துக் குளிர்காய்கிறான், நெருப்பைமூட்டி அப்பமும் சுடுகிறான், அதினால் ஒரு தெய்வத்தையும் உண்டுபண்ணி, அதைப் பணிந்துகொள்ளுகிறான், ஒரு விக்கிரகத்தையும் அதினால் செய்து, அதை வணங்குகிறான். அதில் ஒரு துண்டை அடுப்பில் எரிக்கிறான், ஒரு துண்டினால் இறைச்சியைச் சமைத்துப் புசித்து, பொரியலைப் பொரித்து திருப்தியாகி, குளிருங்காய்ந்து: ஆஆ, அனலானேன், நெருப்பைக் கண்டேன் என்று சொல்லி, அதில் மீதியான துண்டைத் தனக்கு விக்கிரகதெய்வமாகச் செய்து, அதற்குமுன் விழுந்து, அதை வணங்கி: நீ என் தெய்வம், என்னை இரட்சிக்கவேண்டும் என்று அதை நோக்கி மன்றாடுகிறான். அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள், காணாதபடிக்கு அவர்கள் கண்களும், உணராதபடிக்கு அவர்கள் இருதயமும் அடைக்கப்பட்டிருக்கிறது. அதில் பாதியை அடுப்பில் எரித் தேன், அதின் தழலின்மேல் அப்பத்தையும் சுட்டு, இறைச்சியையும் பொரித்துப் புசித்தேன், அதில் மீதியான துண்டைநான் அருவருப்பான விக்கிரகமாக்கலாமா? ஒரு மரக்கட்டையை வணங்கலாமா என்று சொல்ல, தன் மனதில் அவனுக்குத் தோன்றவில்லை, அம்மாத்திரம் அறிவும் சொரணையும் இல்லை. - **ஏசாயா 44: 13-19**

• ஜாதிகளினின்று தப்பினவர்களே, கூட்டங்கூடி வாருங்கள், ஏகமாய்ச் சேருங்கள், தங்கள் விக்கிரகமாகிய மரத்தைச் சுமந்து, இரட்சிக்கமாட்டாத தேவனைத் தொழுது கொள்ளுகிறவர்கள் அறிவில்லாதவர்கள். நீங்கள் தெரிவிக்கும்படி சேர்ந்து, ஏகமாய் யோசனைபண்ணுங்கள், இதைப் பூர்வகாலமுதற்கொண்டு விளங்கப்பண்ணி, அந்நாள்துவக்கி இதை அறிவித்தவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவோ? நீதிபரரும் இரட்சகருமாகிய என்னையல்லாமல் வேறே தேவன் இல்லை, என்னைத் தவிர வேறொருவரும் இல்லை. பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள், அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள், நானே தேவன், வேறொருவரும் இல்லை.
- **ஏசாயா 45: 20-22**

• மரத்துக்கும் கல்லுக்கும் ஆராதனை செய்து, அஞ்ஞானிகளைப்போலவும் தேசத்து ஜனங்களின் ஜாதிகளைப்போலவும் இருப்போம் என்று சொல்லுகிறீர்களே, உங்கள் மனதில் எழும்புகிற இந்த நினைவின்படி ஆவதே இல்லை. பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், ஊற்றப்பட்ட உக்கிரத்தினாலும், உங்களை ஆளுவேன் என்பதை என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்.
- **எசேக்கியா 20: 32-33**

தொடரும்...




SHIVA DURGA ASTROLOGY CENTER








PRIVATE & CONFIDENTIAL



PANDIT: KRISHNAM RAJU

Solutions & Suggestions on:

Black Magic
Evil Spirits
Jealousy
Health, Wealth
Business, Marriage
Drinking Problem
Love, Divorce
Visa Prob.

Education, Family
Employment, Court
Husband & Wife
Children Problem
Business Prob.
Vasthu Prob
Real Estate
and all other Problems

பிரபல மந்திரிமார்களும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது நடக்கப் போறது பற்றிச் சொல்லுவார்

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், வீசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
- ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஸ்டி.
- நாகதோசம் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

உடனே பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம். ஏற்கனவே வேறு பல சாஸ்திரிகளை சந்தித்து மனவேதனையுடன் இருந்திருப்பீர்கள். ஒருதரம் பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்.

An Expert Spirtualist treats Black Magic, Witchcraft, Jaadu, Obeau and gives 100% Immediate Protection

880 Markham Rd, Scarborough ON M1H 2Y2
(MARKHAM RD. & PAINTED POST DR.)

437-213-3305

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario


ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**

**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com





# Chapel Ridge

FUNERAL HOME & CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

**CHRISTEEN SEEVARATNAM**

**(416) 258-6759**



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்

**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**

**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**

www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca

மொன்றியல் நகரில்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

EXPRESS AIR TRAVELS AND TOURS
416.828.9696
info@expressairtravelss.com
Flight Services
All Inclusive Packages
Last Minute Deals
Cruise Services
Car Rentals
Hotels
Tourist Visa
Passport Application
Dual Citizen Application
தமிழர்களின் நிர்வாகத்தில் Majestic City Indoor Mall இல் உங்களுக்கான பிரயாண முகவர் நிலையம்
Majestic City Indoor Mall
H1-2900 Markham Road, Scarborough ON, M1X 1E6

உதயம் 1377 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 26, 2022

# “தமிழ்ப் பணியையும் இலக்கியப் பங்களிப்பையும் நான் ஆத்ம திருப்தியோடு ஆற்றிவருகின்றேன் என்ற அசையாத நம்பிக்கை எனக்கு என்றும் உண்டு”

## ஸ்காபுறோ கலை இலக்கிய அன்பர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் டென்மார்க் வாழ் எழுத்தாளர் முல்லை நாச்சியார்



தமிழ்ப் பணியையும் இலக்கியப் பங்களிப்பையும் எமது சமூகத்திற்கும் வருங்கால சந்ததிக்கும் வழங்க வேண்டும் என்ற வேட்கை நீண்ட காலமாக என்னோடு இணைந்து பயணிக்கின்றது. அதேவேளை. இந்த இரண்டு துறை சார்ந்த பங்களிப்பை நான் ஆத்ம திருப்தியோடு ஆற்றிவருகின்றேன் என்ற அசையாத நம்பிக்கையும் எனக்கு என்றும் உண்டு.

இவ்வாறு நேற்று வியாழக்கிழமை மாலை கனடா- ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள புரண்ட்லைன் சனசமூக நிலைய மண்டபத்தில் இடம்பெற்ற கலை இலக்கிய அன்பர்கள் கலந்து கொண்ட கூட்டத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட டென்மார்க் வாழ் எழுத்தாளர் முல்லை நாச்சியார் அவர்கள் பெருமிதத்தோடு தெரிவித்தார்.

(உள்ளே விபரமான செய்தியும் படங்களும் 4ம் பக்கத்தில்)

# சனி ஞாயிறு தினங்களில் நடைபெறும் ‘தமிழர் தெருவிழா’ மாபெரும் விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி










நாளை 27ம் திகதி சனி மறுநாள் 28ம் திகதி ஞாயிறு ஆகிய இரு தினங்களில் ஸ்காபுறோ நகரில் மார்க்கம் வீதி மற்றும் ஸ்டீல்ஸ் வீதிகளுக்கு இடையில் நடைபெறும் ‘தமிழர் தெருவிழா’ என்னும் மாபெரும் விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பெற்றுள்ளதாக கனடிய தமிழர் பேரவையின் விழாக்குழு ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளது.

இதேவேளை இந்த தமிழர் தெருவிழாவிற்கு பல சிறப்பு விருந்தினர்கள் அழைக்கப்பெற்றுள்ளார்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் கனடா மத்திய பாதுகாப்பு அமைச்சர் திருமதி அனிற்றா ஆதந்த், பீல் பிராந்திய பொலிஸ் தலைமை அதிகாரி திரு நிசான் துரையப்பா மற்றும் மலேசியாவின் நெகிரி செம்பிலான் மாநிலத்தின் துணைச் சபாநாயகர் திரு ரவி முத்துசாமி ஆகியோர் உட்பட இன்னும் பலர் அழைக்கப்பெற்றுள்ளார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# கனடா – ஸ்காபுறோ நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் வருடாந்த இரதோற்சவம் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது



கனடா- ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் வருடாந்த இரதோற்சவம் நேற்று வியாழக்கிழமை மதியம் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தன் வருடாந்த உற்சவம் ஆரம்பிக்கும் நாளன்று ஆரம்பித்து தொடர்ந்து 25 நாட்கள் உற்சவம் கடந்த பல வருடங்களாக கனடா ஸ்காபுறோவில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றது.

இங்கு நடைபெறும் இரதோற்சவத்தில் கலந்து கொள்ளும் அடியார்கள் யாழ்ப்பாண நல்லூர் கந்தன் ஆலயத்தின் இரதோற்சவத்தை கண்டு களித்து பக்தியொடு உருகுவதைப் போன்று உணர்வதாக முருக பக்தர் ஒருவர் தெரிவித்தார்.

## *விசேட கட்டுரை உள்ளே 16ம் பக்கத்தில்*

# இலங்கையில் சர்வாதிகார ஜனாதிபதிக்குப் பதிலாக ஒரு கொடுங்கோலன் நியமனம்!

ஆங்கிலத்தில் வெளிவந்த இந்தக் கட்டுரையின் மொழிமாற்றம் ***கனடா நக்கீரன்***)



---

பேராசிரியர் சுனில் ஜே. விமலவன்ச (பகுதி 24: இலங்கை— தலைவலியைக் குணப்படுத்த தலையணைகளை மாற்றுதல்: சர்வாதிகாரி சனாதிபதிக்குப் பதிலாக இலங்கையில் ஒரு கொடுங்கோலன் நியமிக்கப்பட்டார்.)

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H. Selvanayagam
Broker

# இலண்டனில் பேராசிரியர் முனைவர் சங்கரநாராயணனுக்கு “சேக்கிழார் சீர் பரவுவார்” விருது!



தமிழகத்தின் பிரபல பேச்சாளரும், ஆன்மீக ஆய்வாளருமான பேராசிரியர் முனைவர் திரு.வே.சங்கரநாராயணனனுக்கு அண்மையில் இலண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் ” சேக்கிழார் சீர் பரவுவார்” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

பிரித்தானியாவின் தலைநகர் இலண்டனில் உள்ள புகழ் பெற்ற ஆலயம் அருள்மிகு கனக துர்க்கை அம்மன் ஆலயம். கடந்த 30 ஆண்டுகளாக பிரித்தானிய மண்ணில் ஆன்மீக சேவையாற்றி வருகிறது.

(உள்ளே விபரமான செய்தி 3ம் பக்கத்தில்)